Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 13/50
දිනමුරසු වාරමලර්
ஜூன்.17-23, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 412

# கச்சதீவின் பெயரில் காத்திருக்கும் ஆபத்து!

## கேட்பாரின்றித் தொடரும் பாலியல் பலாத்காரங்கள்!



## ரஜினியின் கடைசிப் படம்

# முரசம்

## செவிடன் காதில் ஊதிய சங்கு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

திட்டமிட்டபடியே
இந்தவாரம் குடிசன மதீப்பீடு
நடத்தப்படுமென்று தொகை மதிப்பு
புள்ளி விவரத்திணைக்களம்
அறிவித்துள்ளது.

இந்தக் குடிசன மதிப்பீட்டால்
தமிழ் மக்களுக்கு- குறிப்பாக வடபகுதி
மக்களுக்கு ஏற்படப்போகும்
பாதகமான எதிர்விளைவுகள்
குறித்து எடுத்துரைக்கப்பட்ட
கருத்துக்கள் எதுவுமே அரசாங்கத்தின்
காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

ஏற்கனவே தீர்மானித்த
திகதியில் நாடளாவிய ரீதியிலான
குடிசன மதிப்பீட்டை நடத்த
தேவையான சகல ஏற்பாடுகளும்
பூர்த்தியடைந்திருப்பதாக
அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் அனுபவிக்கும்
அற்பசொற்ப உரிமைகளுக்கும்
இந்தக் குடிசன மதிப்பீடு குழிபறிக்கும்
என்பதால் இதனை இப்போது
நடத்துவது பொருத்தமற்றதென
பல்வேறு தரப்புக்களாலும்
அரசாங்கத்தின் கவனத்துக்கு
கொண்டுவரப்பட்டது.

எப்போதுமே பரம வைரிகளாக
முரண்பட்டு நிற்கும்
விடுதலைப் புலிகளும், ஈ.பி.டி.பியும்
கூட இது விடயத்தில்
ஒரே கருத்தை
வெளியிட்டிருந்தன.

தற்போதைய சூழ்நிலையில்
இது மக்களுக்கு பாதகமாக
அமையும் என்பதால்,
இது குறித்து அரசாங்கத்தின்
கவனத்துக்கு கொண்டு வருவதாக
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
கூறியிருந்தார்.
விடுதலைப்புலிகளும் துண்டுப்
பிரசுரம் மூலம் இதுதொடர்பில்
தமது ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தனர்.

இந்தக் குடிசன மதிப்பீட்டை
வடபகுதியில் நடத்த வேண்டாமென
தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு
பல தடவை அரசாங்கத்தை
கேட்டிருந்தது.

கடைசியில் எல்லாமே
செவிடன் காதில் ஊதிய
சங்காக முடிந்தது.

குடிசன மதிப்பீட்டின்
முடிவுகளின் அடிப்படையில்
வட பகுதி மாவட்டங்களில்
சனத்தொகை குறைவாக இருப்பதை
சாட்டாக வைத்து அந்த
மாவட்டங்களுக்கான பாராளுமன்ற
உறுப்பினர்களின் எண்ணிக்கை
குறைக்கப்பட்டால், பல்கலைக்கழக
அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள்
அதிகரிக்கப்பட்டால்
பாதிக்கப்படப்போவது
வேறுயாருமல்ல;
அந்தப் பகுதிகளில் வாழும்
தமிழ் மக்கள்தான்!

கட்சி பேதங்களுக்கு அப்பால்
பாராளுமன்றத்தில் தமிழர்
பிரதிநிதித்துவம் குறையும்.
பேரினவாதிகளின் கரம் மேலும்
வலுப்பெறும்!

ஆனால் இந்த நிலைமையை
உணர்ந்து இடம் பெயர்ந்த
மக்கள் மீண்டும் தமது சொந்த
இடங்களுக்கு திரும்பக்கூடியதான
ஒரு சூழ்நிலை ஏற்படும் வரையிலாவது
வடபகுதியில் இம்முறை
குடிசன மதிப்பீடு நடத்தக்கூடாது
என்று சொல்லி அதனை தடுத்து
நிறுத்த தமிழ் தரப்புக்களால்
முடியாமல் போய்விட்டது.

யார் என்ன சொன்னாலும்
தாம்பிடித்த முயலுக்கு
மூன்றுகால் என்பதை
அரசாங்கம் மீண்டும் ஒரு முறை
நிரூபித்திருக்கிறது.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை



* இன்னும், அவனிடமே மறைவானவற்றின் சாவிகள் இருக்கின்றன. அவற்(றிலுள்ளவற்)றை அவனையன்றி வேறெவரும் அறியார்; மேலும் கரையிலும், கடலிலும் உள்ளவைகளையும் அவன் நன்கறிவான்; அவன் அறியாமல் யாதோர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருள்களில் புதைந்து கிடக்கும் வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (அவனுடைய) தெளிவான பதிவேட்டில் இல்லாமலில்லை.

(அல் குர்-ஆன். 6:59)

* ஒவ்வொரு பெண்ணும் தான் கர்ப்பத்தில் சுமந்து கொண்டிருப்பது ஆணா? பெண்ணா? என்பதையும் அல்லாஹ் நன்கு அறிகிறான். கர்ப்பப் பைகளில் கர்ப்பம் தரிக்கும் சமயம் சுருங்குவதையும், பிரசவிக்கும் பொழுது அவை விரிவதையும் அவன் நன்கு அறிகிறான். கர்ப்பங்களிலே உள்ள ஒவ்வொன்றுக்கும் அந்தக் கர்ப்பங்களிலே தங்கியிருக்க வேண்டிய காலமும் கூட அவனிடமே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

(அல் குர்- ஆன். 3:8)

ஏ.எச்.ஏ. ஹுஸைன், ஏறாவூர்.

## கைலாயமும், வைகுண்டமும்

குரு குலவாசம் செய்யும் சிஷ்யர்களிடம் அடிக்கடி கேள்வி கேட்டுப் பதிலை அவர்கள் மூலமாகவே பெறுவார் குரு. ஒரு சமயம் தன் சிஷ்யர்களிடம் குரு கேட்ட கேள்வி: "கைலாயமும், வைகுண்டமும் எவ்வளவு தொலைவில் இருக்கின்றன?" சிஷ்யர்கள் தங்களுக்குள் பேசி, விவாதித்தனர். குருவின் பிரதம சீடன் மட்டும் உடனே பதில் சொன்னான். "கூப்பிடு தூரத்தில் வைகுண்டமும், கைக்கு எட்டும் தூரத்தில் கைலாயமும் உள்ளன குருவே!"

எல்லோரும் திகைக்க, குரு அவனிடம் கேட்டார். "விளக்கம் சொல்வாயா?" சிஷ்யன் சொன்னான்: "முதலை காலைக் கவ்வ, யானை 'ஆதிமூலமே' என்று குரல் கொடுக்க, மகாவிஷ்ணு ஓடிவந்தாரே! கூப்பிடும் தூரத்தில் தான் இருக்கிறார். அதே போல, எமதர்மன் பாசக் கயிறு வீச, மார்க்கண்டன் தன் அருகே இருந்த சிவலிங்கத்தைக் கட்டிக் கொள்ளவில்லையா! சிவன் வந்தாரே, அது கைலாயம்தானே!" என்று விளக்கமளித்தான்.

ரீ. குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## எச்சரிப்பு

**அ**ப்போது கர்த்தர் காயீனை நோக்கி "உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறு பட்டது?" (ஆதி. 4:6) என்று கேட்டார்.

தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் எம்மை எச்சரித்துக்கொண்டே இருக்கிறார். தேவன் குற்றத்தை உணர்த்தும்போது உன் பதில் என்ன? அந்த எச்சரிப்பை ஏற்று தேவனிடம் அறிக்கையிட்டு திருத்தி கொள்கிறோமா? அப்படி இல்லாவிடில் அதன் விளைவைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

நீ உன் தாயையும் தகப்பனையும் மன்னிக்க முடியாதபடி இருக்கிறாயா? நீ மிகவும் நேசித்தவர் உன்னை ஏமாற்றியதன் நிமித்தம் அவரை மன்னியாமல் இருக்கிறாயா? இது தேவனுக்கு விரோதமான பாவம் ஆகும். உனக்குள் இருக்கும் கசப்பின் வேரை பிடுங்கி எறி.

எல்லாரையும் நேசிக்கும் உள்ளத்தைத் தேவனிடம் கேள். அவர் உன்னை மாற்ற வல்லவராக இருக்கிறார்.

திருமதி. மாகிறட் கணேசன், கிருலப்பனை.

## கவிதைப் போட்டி இல.412



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.06.2001

கவிதைப் போட்டி இல.412
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## பரிசுக்குரிய கவிதை

## கவிதைப் போட்டி இல.409



### உண்மை புரியும்

**சோமாலியாவில்**
**மட்டும் தான்**
**வரண்ட நிலமும்,**
**வற்றிப் போன**
**வயிறும் உள்ளதோ?**
**வந்திங்கு பாருங்கள்**
**எங்கள் வன்னியை**
**உண்மை புரியும்!**

**கா.சுபாஷ்-தரவளை.**

### தூரம்

வேதனை எமக்கு
வேதனையானதம்மா!
துன்பம் எமக்கு
துணையானதம்மா!
சோகங்கள் எமக்கு
சொந்தமானதம்மா!
சொந்தம் எமக்கு
தூரமானதம்மா!

ஏ.ஜே.எம்.ப்ரிந்தா-
சத்துருக்கொண்டான்.

### செயற்படு தம்பி

நீ நம்பியிருக்க
யாருமில்லையென்று
கலங்காதே தம்பி
உன்னை நம்பி
இந்த நாடிருக்கு-இதை
உணர்ந்து கொண்டு
செயற்படு தம்பி!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### விடியல்

இரத்த வெறியர்களின்
இரக்கமற்ற செயலால்
இல்லறம் துறந்து
உறவுகளை இழந்து
காட்டுப்பாதையிலே
காத்து நிற்கின்றேன்....
நாளைய விடியலுக்காய்

எஸ்.சித்தீக்-
அட்டாளைச்சேனை-08.

### ஏ(தா)க்கம்

ஏக்கமா?
ஏமாற்றமா?
ஏர்பூட்டி உழ,
எருதுமில்லை,
ஏற்றமுமில்லை.
ஏற்ற வேளை
எப்போ வருமோ?

எஸ்.ஞானராஜா-
வாழைச்சேனை.

### அநாதை

உறவிழந்து, உடமையிழந்து,
பசுமையிழந்த பட்டமரம் போல்,
பாழ் பட்ட இம்மண்ணில் கால்
பதித்து
கலங்குகிறான் கடந்து சென்ற
காலங்களையெண்ணி!

செல்வி.சர்மிளா பரீட்-கனேவெல.

### மாற்றங்கள்

சிரிக்க வேண்டிய சிறுவன்
அழுகின்றான்-சமுதாய எதிரிகளால்
மலர வேண்டிய சமாதானம்
மறைகின்றது-சமாதான எதிரிகளால்

ஆர். சுஜீவன்-நாவலப்பிட்டி.

### உன் நிலை

துப்பாக்கித் துளையினால் அப்பாவும்,
துர்ப்பாக்கிய நிலையில் அம்மாவும்,
அப்பாவிகளான அண்ணன், தம்பிகளும்
இரண களத்திலே, மரணத்திடம்,
சரணடைந்ததாலோ,
அஃறிணைகளுடன் அஃறிணையாய்
உருமாறியது உன் நிலை?

பி.ஹ.அ.ஷிப்லி-நிந்தவூர்-18

### கேள்விக்குறி

எத்திசை நோக்கினும்,
என் வாழ்க்கைப் பாதை,
கேள்விக்குறியோ?

கு.அனிதா-103, தலவாக்கலை.

### கோர வடுக்கள்

தொலைந்து போன நிம்மதி,
அழிந்து போன சொத்துக்கள்,
இழந்து போன உறவுகள்,-இவை
கொடிய யுத்தத்தின் கோரவடுக்கள்-இனி
எஞ்சியிருப்பது என்ன?
என் உயிர் மட்டுமே!

க.கிறிஸ்ரி லோகநாதன்-திருக்கோவில்.

### விதி

மனிதனுக்கு தலை விதி
மன்றாடுவது...
யுத்தத்திற்கு தலை விதி
உயிரை அழிப்பது

சி.ரமேஷ்-கொழும்பு.

### எங்கே?

துப்பாக்கியை கையில் ஏந்திட!
பல உயிர்கள் மடிந்திட!
சமாதானம் எங்கேயடா சாமி!

ஏ.சிவகுமார்-அலுத்வத்தை.

# வாசக[ர்] சாலை

*அபிமான முரசே,*

எத்தனையோ பத்திரிகைகள் இப்போது நமது நாட்டில் புற்றீசல்போல் புறப்பட்டு வரும் இவ்வேளையில், வாசகர் மத்தியில் வரவேற்புக்கு மவுசுகுறையாதவற்றுள் முரசையும் கூறினால் மிகையாகாது. நல்ல பல தமிழேடுகள் வாராந்தம் வெளிவருவது நல்லதுதான். எது எப்படி வந்தாலும், வாசகர்கள் மனமறிந்து அவ்வப்போது புதுப்புது ஆக்கங்களைப் புகுத்துவதில் முரசு முன்னணிதான். வாரம் ஒரு நாட்டை மீண்டும் நடைமுறைப்படுத்தினால் நல்லது.

அ.அரசரெத்தினம், சேனையூர்-06.

*அன்பான முரசே, எனக்கு,*
*உண்ணும் உணவின் சுவை*
*தெரியவில்லை*
*முரசே...*
*உன்னைக் காணாதபோது*
*உறங்கும் விழிக்கு உறக்கம்*
*வரவில்லை!*
*முரசே...*
*உன் வருகையை எதிர்பார்த்து,*
*பேசும் வார்த்தைக்கு அர்த்தம்*
*புரியவில்லை,*
*முரசே...*
*உன்னைக் காணாத*
*ஒவ்வொரு வினாடியும்,*
*இத்தனையும் நிகழும். முரசே...*
*உன்னை எதிர்பார்த்து வழி*
*மேல் விழிவைத்திருக்கும்,*

ந.சிவாஜினி, மண்டூர்-01.





*என் இனிய முரசே,*

நீ வாரம் தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும், சூடும், சுவையுமாக அமைகிறது. அதிலும், 'தகவல்பெட்டி' சினி விசிட், 'இலக்கிய நயம்', என்பன மிக, மிகப் பிரமாதமானவை. அன்பின் முரசே நீ மென் மேலும் வளர என் இனிய மனமகிழ்ச்சியை முரசுக்கே முதலில் எழுதி வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்...

வி.விக்னேஷ் (வரன்) ஹாலி-எல.

*என் உயிர் மூச்சான முரசே! உன்னை படித்து பயன் பெறும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகின்றேன். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். அதிலும் 'கவிதைப் போட்டி', 'தகவல் பெட்டி', ஷானு தரும் உண்மைத் தொடர், 'சிறுகதை'ப் பக்கம் என்பன என்னை மிகவும் கவர்ந்த பகுதிகளாகும்.*

'கலைப்பிரியன் வேணு'
பெரியநீலாவணை-01.

*தேனிலும் இனிய தினமுரசே!*
*உன் உடலின் சுமை,*
*அனைத்தும் தமிழ்*
*உள்ளங்களுக்கான தெவிட்டாத*
*இன்பங்கள். உனது படைப்பு*
*எம்மவரின், கண் துடைப்புக்கு*
*எதிரானவையே. முரசு 406ல் சுமந்து*
*வந்த அனைத்து அம்சங்களும் பலே*
*பலே... போட வைக்கின்றன.*
*சத்தியன் தந்த 'யுத்தத்துக்குப்*
*பலியான யுத்த நிறுத்தமும் ஒரே*
*நாளில் அணைக்கப்பட்ட*
*தீச்சுவாலையும்' என்ற கட்டுரை பல*
*உண்மைகளை வெளிப்படுத்தியது*
*எனலாம். தொடர்ந்தும் விளையாட்டு,*
*சினிமா, ஆன்மீகம், 'முரசம்'*
*'இலக்கியநயம்', 'சிந்தியா பதில்'கள்,*
*என அனைத்தும் அசத்தல்.*
*தலைவா! வாழ்க உனது தமிழ்பணி,*
*வளர்க உன் சூடு, சுவை,*
*சுவாரஸ்யம்.*

கா.சுபாஷ், டிக்கோயா.

*அன்பிற்கினிய முரசே! நீ சுமந்து வருகின்ற அனைத்து அம்சங்களும் சுவையாக இருக்கின்றன. அதிலும் 408வது முரசில் வெளிவந்த 'இலக்கிய நயம்' உண்மையில் என் போன்றவர்களுக்கு மிகவும் சுவையாக இருந்தது. அத்துடன் 'மர்மத்தீவு' மிகவும் விறுவிறுப்புடன் செல்கிறது. 'காதில பூ கந்தசாமி' இப்பகுதி மிகவும் அருமை. தப்பு செய்தவர்கள் இதனை பார்த்தாவது தங்களது தவறை உணர்ந்து கொள்வார்களா?*

எம்.எஸ்.குட்டி, மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடு கிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

*என் இனிய முரசே!*
*உலகை உலுக்கிய 'ஹிட்லர்' தொடர், 'சுதந்திரம் தேடிய யுவதிகள்' ஆகிய உண்மைத் தொடர்கள் சூப்பரோ சூப்பர். மற்றும் உனது அத்தனை படைப்புக்களும் சூப்பர்.*
*உனது பணி மென் மேலும் வளர என் வாழ்த்துக்கள்.*

ச.வரசுதாஸ் காரைதீவு-01.

## மாற்றாந் தாய் மனப்பான்மை

*மாவனெல்லை சம்பவம் தொடர்பாக ஆசிரியரின் நடுநிலையான கருத்து வரவேற்கத்தக்கது. ஆசிரியரின் கருத்துப்படி, 'தண்டிக்கப்பட மாட்டோம்' என்ற தைரியத்தாலேயே மேலும் இதுபோல் சம்பவங்கள் நடைபெறுகின்றன.*

*ஜூலை கலவரத்தின்போது சில நாட்கள் சென்ற பின்பே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதுபோல் அன்று முதல் இன்று வரை பிரச்சனை ஓரளவு முற்றியவுடன் நடவடிக்கை எடுப்பதும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்காததே இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கு காரணமாயுள்ளது. இனியாவது அரசு வெள்ளம் வந்தவுடன் அணையைக் கட்ட முற்படாமல் வெள்ளம் வரும் முன் அணையை கட்ட முன் வருமா?*

பி.ரெங்கநாதன் அசோக்குமார், ஸ்டேம்போட்ஹில்.

**மடல்கள் மற்றும்**
**ஆக்கங்கள்- உட்பட சகல**
**தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-**
**1772, கொழும்பு.**
**தொலைபேசி: 074-514282**
**தொலை நகல் (Fax):-**
**074-513266**

*சிங்கார நடை போட்டு...*
*வெற்றிக் கொடி கட்டி, வாரம்*
*தவறாமல் நம் கரங்களில்*
*வந்தடையும் உன்னை எப்*
*போதும் மறக்க மாட்டேன்!*
*நண்பன் 'தினமுரசி'ன்*
*வழி கூட தனி வழிதான்!*

என்.எம்.எம். நிஸாம்,
காத்தான்குடி-02.

# தலைவியின் நியமனங்கள் செயலாளரினால் ரத்து

## ரவூப்ஹகீம், பேரியல் அஷ்ரப் தேர்தல் ஆணையாளருடன் தனித்தனியே சந்திப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹகீமுக்கும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் அமைச்சருமான திருமதி பேரியல் அஷ்ரப்புக்கும் இடையிலான விரிசல் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் இருவரும் தனித்தனியாக சென்று தேர்தல் ஆணையாளரை சந்தித்து ஆலோசனை பெற்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய ஐக்கிய முன்னணி கூட்டத்தில் அந்த கட்சியின் தவிசாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அசித பெரேராவும், உபதவிசாளராக முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் நியமிக்கப்பட்டனர்.

அன்றைய தினம் இரவு கூடிய முஸ்லிம் காங்கரஸின் நிறைவேற்றுக்குப் பேரியல் அஷ்ரபினால் வழங்கப்பட்ட இந்த நியமனங்களை செல்லுபடியற்றதாக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளராக இருக்கும் அமைச்சர் ஹகீமின் அனுமதியின்றி இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும், கட்சிக் கூட்டத்தை கூட்டும் அதிகாரமும், பதவிகளை அறிவிக்கும் அதிகாரது அனுமதியின்றி வழங்கிய நியமனங்கள் செல்லுபடியாகாதெனவும் முஸ்லிம் காங்கிரஸ் கூறுகின்றது.

ஆனால் கட்சிக் கூட்டத்தை கூட்டவும் நியமனங்களை வழங்கவும் பேரியல் அஷ்ரபுக்கு அதிகாரமிருப்பதாகக்கூறும் தேசிய ஐக்கிய முன்னணி வட்டாரங்கள், முன்னைய காலங்களில் மறைந்த அமைச்சர் அஷ்ரப் தனதிஷ்டப்படி அவ்வாறு செய்துள்ளதை உதாரணம் காட்டியுள்ளது.

இந்நிலையில் அமைச்சர் ஹகீமும், அமைச்சர் திருமதி. அஷ்ரபும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திசாநாயகவை தனித்தனியே சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதன்போது பேரியல் அஷ்ரப் தான் வழங்கிய நியமனங்கள் தொடர்பான ஆவணங்களை தேர்தல் ஆணையாளரிடம் கையளித்துள்ள அதேவேளை அந்த நியமனங்களை இரத்துச் செய்வது குறித்த ஆவணங்களை ரவூப் ஹகீம் சமர்ப்பித்துள்ளார்.

இரண்டு தரப்பினரது அறிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணையாளர், கட்சி மட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எந்த அறிக்கையையும் தேர்தல் திணைக்களம் நிராகரிப்பதில்லை என்று தெரிவித்துள்ளதுடன் தேவை ஏற்படின் அவற்றை மீளப்பெறவும் வாய்ப்பளிப்பதாக கூறியுள்ளார்.

இதற்கிடையில் இவர்கள் இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சிகளில் இரண்டு தரப்பையும் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். சமாதானத்தூதுகள் தொடர்ந்து நடைபெறுகின்ற போதும் எந்த விதமான முன்னேற்றமும் இன்றி முறுகல் நிலை தொடர்வதாக தெரியவருகிறது.

## விமான எதிர்ப்பு ஏவுகணைகளுடன் வில்பத்து காட்டில் புலிகள்!

வில்பத்து காட்டுப்பகுதியில் ஊடுருவி இருப்பதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளை தேடிப்பிடிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த காட்டுப்பகுதிக்கு மேலாகப் பறந்த விமானப்படை விமானம் ஒன்றுக்கு ஏவு கணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக எழுந்துள்ள சந்தேகத்தின் பின்னர் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேசிய படைவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட கடந்த 7ம் திகதி அனுராதபுரத்தில் இருந்து பலாலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்துக்கு வில்பத்து காட்டுப் பகுதியில் வைத்து ஏவுகணை செலுத்தப்பட்டதைப் போன்ற புகை மூட்டம் ஒன்றை சமீபமாக இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவதானித்துள்ளார். ஆனால் இவ்வாறான எதனையும்தான் காணவில்லை என்று குறிப்பிட்ட விமானத்தின் விமானி கூறியுள்ளார்.

எனினும் இது குறித்து நடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து அந்த புகை மூட்டம் புலிகளினால் ஏவப்பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணையாகவே இருக்கும் என்ற முடிவுக்கு வந்த படைத்தரப்பு வில்பத்து வனப்பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த வருடம் பலாலியில் இருந்து அநுராதபுரத்துக்கு வந்து கொண்டிருந்த விமானம் ஒன்று தலாவ என்ற இடத்தில் வீழ்ந்து நொருங்கியது.

இது இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்ட விபத்து என்று ஆரம்பத்தில் கூறப்பட்ட போதும், பின்னர் வில்பத்து காட்டுப் பகுதியில் வைத்து புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியதிலேயே இந்த அநர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## அரசுக்கு பேச்சுவார்த்தையில் நாட்டமில்லை இராணுவ தீர்வையே விரும்புகிறதென ஆயர்கள் தெரிவிப்பு

இனப்பிரச்சனைக்கு சமாதான வழியான அரசியல் தீர்வொன்றை காண்பதில் அரசாங்கத்துக்கு நாட்டமில்லை என்றும் அது இராணுவ தீர்விலேயே நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் இருவர் கடந்த வாரம் இலண்டனில் நடத்திய செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் விஜயம் மேற்கொண்டிருக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் ஆகியோர் இலண்டன் சென் ஜோர்ஜ் ஆலயத்தில் சர்வதேச செய்தியாளர்கள் மத்தியில் இலங்கை நிலவரம் தொடர்பாக விரிவாகக் கூறியுள்ளனர்.

இதன்போது ஆயர்கள் இருவரும் தெரிவித்ததாவது:- "இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முன்வருமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். உலகெங்கிலும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் தத்தமது நாடுகள் மூலமாகவும் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

அரசாங்கம் இனப்பிரச்சனைக்கு இராணுவ ரீதியிலான தீர்வையே விரும்புகிறது. தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களில் அநேகமானவர்கள் சமாதானத்தை விரும்புகின்ற போதும், சில அடிப்படைவாதிகள் யுத்தம் முடிவுக்கு வருவதை விரும்பவில்லை.

வன்னிப் பிரதேசத்தில் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். தென்னிலங்கையில் இலகுவாகப் பெறக்கூடிய பல அத்தியாவசியப் பொருட்களை வன்னியில் பெருந்தொகைப் பணம் கொடுத்தே பெறவேண்டியுள்ளது. அந்தப் பகுதியில் அரசாங்க ஊழியர்கள்கூட மிகுந்த இக்கட்டான நிலையிலேயே வாழ்கிறார்கள்." இவ்வாறு ஆயர்கள் இருவரும் கூறியுள்ளனர்.

## தோட்ட அதிகாரிகளின் செயலால் மலையக இளைஞர் யுவதிகள் பாதிப்பு

மலையக இளைஞர், யுவதிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்க தோட்ட அதிகாரிகள் மறுத்து வருவதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு குறிப்பிட்ட தோட்ட அதிகாரிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் அவர்கள் விண்ணப்பங்களை உறுதிப்படுத்த மறுத்து வருகின்றனர். சில தோட்டங்களில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் அவை திணைக்களத்துக்கு அனுப்பப்படாமல் தோட்ட காரியாலயங்களிலேயே தேங்கி இருப்பதாக அறிய முடிகின்றது.

சில இளைஞர், யுவதிகள் தோட்டங்களுக்கு வெளியே தொழில் புரிந்தாலும் தோட்டங்களையே வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர். இவர்களின் விண்ணப்பங்களை ஏற்க கிராம சேவை அலுவலகங்கள் மறுத்து விடுகின்றன. தோட்டத்தில் வேலை செய்யவில்லை என்பதை காரணம் காட்டி தோட்ட அதிகாரிகள் விண்ணப்பத்தினை உறுதிப்படுத்த மறுக்கின்றனர். கிராம சேவகரோ இவை தோட்டங்களுக்கு பொறுப்பானவை என விண்ணங்களை தோட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி விடுகின்றனர்.

இதனால் பல இளைஞர், யுவதிகள் தேசிய அடையாள அட்டை இன்றி பல்வேறு சிரமங்களை நாளாந்தம் எதிர்நோக்குகின்றனர்.

## ஆசிரியர் சங்கம் அமைச்சருக்கு மகஜர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த செவ்வாய்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது பிரச்சனைகள் தொடர்பான 30 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. சங்கத்தின் தலைவர் மகாசிவம் அமைச்சருடனான சந்திப்பின் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து எடுத்துக்கூறியதுடன் சம்பளப்பிரச்சனைகள் கஷ்டப்பிரதேச சேவை கொடுப்பனவுகள் போன்றவற்றை ஆசிரியர்களுக்கு உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## யாழ்.கோட்டை படையினரால் புனரமைப்பு

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் புலிகளினால் சேதமாக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையை மீண்டும் ஓரளவுக்கேனும் மீளமைத்து பலப்படுத்தும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். கோட்டையையும் அதனை அண்டிய கரையோர பிரதேசங்களிலும் புதிதாக காவலரண்களை படையினர் அமைத்து வருகின்றனர்.

கோட்டைக்கு உள்ளேயும் புல்டோசர்கள் மூலம் துப்புரவாக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இவற்றை அவதானிக்கும் போது குடாநாட்டில் மீண்டும் பாரிய போர் வெடிக்கப்போகிறதோ என்ற அச்சம் தோன்றுவதாக மக்கள் கூறுகின்றனர்.

## வடபகுதிக்கான நிதி ஒதுக்கீட்டில் பல அமைச்சுக்கள் பாரபட்சம்

பல அமைச்சுக்கள் வடபகுதி அபிவிருத்திக்காக மிகக் குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடுகளை செய்திருப்பதாக தெரியவந்துள்ளதுடன் சில அமைச்சுக்களின் செயலாளர்களும் சிரேஷ்ட அதிகாரிகளும் யாழ்ப்பாண நகரம் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதைகூட அறியாதவர்களாக இருக்கும் விந்தை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடபகுதி அபிவிருத்தி வடக்கு கிழக்கு தமிழ் விவாகார அமைச்சில் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன்போது ஒவ்வொரு அமைச்சினாலும் வடக்கு மாவட்டங்களின் நிதி ஒதுக்கீட்டு விபரங்கள் தொடர்பாக வினவப்பட்ட போது அமைச்சுக்களின் செயலாளர்களினால் அதிர்ச்சி தரும் பல தகவல்கள் வெளியிடப்பட்டன.

மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்த பல முக்கிய அமைச்சுக்கள் வடபகுதி அபிவிருத்திக்காக சில இலட்சங்களை மாத்திரமே ஒதுக்கியுள்ளன. உதாரணமாக விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சு வடக்கின் தொழிநுட்பத் துறையை அபிவிருத்தி செய்ய 3 இலட்சம் ரூபாவை மாத்திரமே ஒதுக்கியிருக்கிறது.

தமிழ் மக்கள்மீது காட்டப்படும் இந்த பாரபட்சம் குறித்து இக்கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சில அமைச்சு செயலாளர்கள் யாழ்ப்பாணத்தில் சிவில் நிருவாகம் நடைபெறுவதையும் யாழ். நகரம் அரசாங்க கட்டுப்பாட்டில் இருப்பதையும்கூட அறியாதவர்களாக இருக்கின்றனர் என்பது தெரியவந்தது.

ஒவ்வொரு அமைச்சுக்குமான பன்முகப்படுத்தப்பட்ட நிதி குறைக்கப்பட்டதை காரணம் காட்டி வடக்குக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

## பிணையில் விடுதலை

மாவனெல்லையில் நடந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 12 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மாவனெல்லை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார்.

எனினும் மாவனெல்லை வன்முறைகளுக்கு மூலகாரணமாக இருந்த கப்பம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இம்மாதம் 18ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கையை உயர்த்தச் சொன்னவருக்கு கண்ணிமைக்கும் பொழுதில் துப்பாக்கிச்சூடு

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஒருவர் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் ஒருவரால் சுடப்பட்டார்.

வீதிச் சோதனையின்போது விடுதலைப் புலி உறுப்பினரை வழிமறித்து சோதனை செய்த பொலிஸ்காரர் கையை உயர்த்துமாறு கூறியதும் தரையில் வைத்திருந்த துப்பாக்கியை வேகமாக உருவி எடுத்த புலி உறுப்பினர் முகமட் ஜவ்பர் என்ற இந்த பொலிஸ்காரரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

ஏறாவூரில் கடந்தவாரம் ஹாஜா முஹைதீன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் மெய்பாதுகாவலராகக் கடமையாற்றியவர்.

இச்சம்பவம் கடந்த 07ம் திகதி இரவு 7.45 மணியளவில் இடம் பெற்றது. முஸ்லிம்களைப் போன்று தொப்பியும், சாரமும் அணிந்து வந்தே சுட்டு விட்டுத் தலைமறைவாகியதாகக் கூறப்படுகிறது.

## வடக்கு-கிழக்கு மருத்துவமனை பணிகள் முற்றாக ஸ்தம்பிதம்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கடமையாற்றும் அரசாங்க மருத்துவர்கள் திங்கட்கிழமை முதல் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் காரணமாக இந்தப் பகுதிகளில் வைத்தியசாலைப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் அவசர சிகிச்சைகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன.

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடமையாற்றும் வெளிமாவட்ட வைத்தியர்களுக்கு வழங்கப்படும் விஷேட கொடுப்பனவு இந்த பகுதிகளில் பணி புரியும் சகல வைத்தியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த வேலை நிறுத்தம் இடம் பெறுகின்றது.

தமது கோரிக்கைக்கு சுகாதார அமைச்சு சாதகமான பதில் வழங்கும் வரை போராட்டம் தொடரும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஆசிரிய ஆலோசகர் நியமிக்கக் கோரிக்கை

பண்டாரவளைக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் பயிலும் 22 ஆயிரம் சிங்கள மாணவர்களுக்கென 52 ஆசிரிய ஆலாசகர்கள் நியமிக்கப்பட்டிருக்கும் அதேவேளை 18 ஆயிரம் தமிழ் மாணவர்களுக்கு ஓர் ஆசிரிய ஆலோசகர்கூட இல்லையென முறையிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த கல்வி வலயத்தில் பணியாற்றும் ஒரேயொரு உதவி கல்விப் பணிப்பாளரான தமிழ் பெண்மணிக்கு தமிழ்மொழியில் பேசவோ எழுதவோ தெரியாதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஊவா மாகாண பிரதிநிதி கல்வி அமைச்சரை கேட்டுள்ளார்.

## உள்ளூர் உணவுகளை வாங்க குடாநாட்டு படையினர் தீர்மானம்

யாழ்ப்பாணத்திலுள்ள படையினருக்குத் தேவையான காய்கறி, மீன், இறைச்சி, முட்டை, பழ வகைகள் என்பனவற்றை அங்கேயே கொள்வனவு செய்வதற்கு படைத்தரப்பு தீர்மானித்துள்ளது.

படையினருக்குத் தேவையான மேற்படி பொருட்களை கொழும்பிலிருந்து விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதில் அதிக செலவாகிறது. அத்துடன் மரக்கறி, பழங்கள் என்பன பழுது பட்டும் போகின்றன. இதனாலேயே உள்ளூரில் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் தரப்பினரின் இந்த முடிவால், யாழ்ப்பாண உள்ளூர் உற்பத்தியாளர்கள் நன்மையடைவர் எனக் கூறும் இராணுவத்தினர், காய்கறி பழவகை உற்பத்தியாளர்களும் மீன், இறைச்சி முட்டை விற்பனையாளர்களும் பாதுகாப்பு படையின் சிவில் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## இரண்டு படகுகளுடன் 7 மீனவர்களைக் காணவில்லை

ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளின் முஸ்லிம் மீனவர்கள் ஏழு பேரையும் அவர்கள் பயணம் செய்த இரண்டு படகுகளையும் காணவில்லையென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மே மாதம் 26ம் திகதியிலிருந்து இவர்கள் காணாமல் போயுள்ளார்கள். அன்றைய தினம் ஆழ் கடல் மீன் பிடிப்புக்காகச் சென்றவர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை. இது குறித்து காணாமல் போனவர்களின் உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏ.எல் முஸ்ஸம்மில், எம்.ஏ.எம்.றூமி எம்.ஏ.அஹமது லெப்பை, எஸ்.எல்.நஸீர், எம்.ரீ.சுலைமாலெப்பை, எ.எல்.ஜெய்னுதீன் எஸ்.பாயிஸ் ஆகியோரே காணாமல் போன மீனவர்களாவர்.

இவர்கள் கடத்தப்பட்டார்களா அல்லது கடலில் திசை தடுமாறி வேறு நாடுகளில் கரையொதுங்கிக் காப்பாற்றப் பட்டார்களா என்பது பற்றி இன்னமும் எதுவும் தெரியாமலுள்ளது.


## கிழக்கு வளாக 'நூலக வாரம்'

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'நூலக வாரம்-2001' இம்மாதம் 22ம் திகதி,வெள்ளிக்கிழமை முதல் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

பிரபல எழுத்தாளர்களது சேகரிப்பு நூல்கள், பழங்கால ஓலைச்சுவடிகள், அரிய நூல்கள், மின்னியல் ஆவணங்கள் பலவும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதுடன் நூல் விற்பனையும் இடம்பெறும்.

மேலும் நூலக வாரத்தை முன்னிட்டு விசேட விரிவுரைகளும், எழுத்தாளர் சந்திப்பு, பயிற்சிப்பட்டறை,நூல் விற்பனை முகவர்களுடனான சந்திப்பு ஆகியவையும் நடைபெறவிருக்கின்றன.



**STOP!! Today's Price Rs. 6990/=**

Attractive discount for out station agents

386, 4MB RAM, 200MB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
486DX2-66, 12MB RAM, 400MB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
486DX2-66, 24MB RAM, 800MB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 100, 32MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 120, 32MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 133, 32MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 166MMX, 64MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 200MMX, 64MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE
PENTIUM 233MMX, 64MB RAM, 2GB HDD, 14" MONITOR, KEY BOARD, MOUSE

*Pre-install Windows 95/98 & Office 97/2000*

**VESPA TRADING CO.**
No. 31, DE FONSEKA PLACE, COLOMBO - 04
TEL. 077-321849, 077-367333,
077-794328, 077-398677
Colombo :- 01-555556, 01-555183

VPI Multimédia

AGENT IN KANDY
**THE FANCY HOUSE**
No. 19, TRINCOMALEE STREET
KANDY.
TEL.077-367333, 08-234459



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்பக்கமாக
Tel: 074-519754


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 11.05.1942



ஆண்டவன் அடியில் 11.06.1999

**அமரர் திருமதி கணபதிப்பிள்ளை சந்திரமதி**

கண்டாவளை

**திதி:துவாதசி 18.06.2001**

அம்மா எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
அன்புத் தெய்வமே

எமது நெஞ்சம் என்றும் நீங்காது நிறைந்திருக்கும் அன்புத்தாயே எமையெல்லாம் விட்டு எங்கு சென்றீர்கள். ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தது அம்மா. கனவில் மட்டும் தான் வருகின்றீர்கள். நிஜமாக வரமாட்டீர்களா. எல்லோரும் ஒன்றாய் ஒரு நாள் சந்திப்போம் என்பது பொய்யாகிப் போனதை எண்ணி எண்ணி துவள்கின்றோம். தந்தையை இழந்தோம் பின் தாயையும் இழந்தோம். இன்று உங்கள் பாசத்திற்காக ஏங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*
*உங்கள் பிரிவால் துயருறும்*

அன்பு மக்கள், மருமக்கள், தாய், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனிமார், உற்றார், உறவினர்.

*தகவல்: மகன் க.முருகதாசன்-அமெரிக்கா.*

# விளம்பரப் பகுதி


## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜூன் 17 முதல் 23 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஜூன் 24 - 27 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஜூன் 30, ஜூலை 01 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜூலை 07, 08 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



**சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.**

## விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்
## காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுமின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ள வும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.



## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், மகளின் திக்குவாய் குணமாகியது**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், ஜாதகத்தில் கூறியது பலிதம்**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நல முடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**
**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 342463
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## யாழ். மீனவர் அமைச்சருடன் சந்திப்பு

**யா**ழ். குடாநாட்டு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று கடந்தவாரம் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் அப்துல் காதர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. எம்.பி.க்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்.பி.க்களும் கடற்படை அதிகாரிகளும் யாழ். செயலக அதிகாரிகளும் மற்றும் மீனவர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த மீனவச்சங்கப் பிரதிநிதிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அமைச்சரிடம் விரிவாக எடுத்துக்கூறினர்.

மீன்பிடித்தலுக்குச் செல்லுவதற்கான நேரம் அரைமணித்தியாலத்தினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரச்சனைகள் தொடர்பாக விரைவில் தீர்வு காணப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

## மாணவி பாதிப்பு

**வ**வுனியாவில் அமைந்துள்ள பிரபல தமிழ் பாடசாலை ஒன்றின் அதிபரது பொறுப்பற்ற செயலால் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவி ஒருவரின் விண்ணப்பம் பரீட்சைத் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

குறிப்பிட்ட பாடசாலையில் பயிலும் யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த செல்வி தியாகராசா தர்சிகா என்ற மாணவி இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கையொப்பம் பெறுவதற்காக அதிபரிடம் கொடுத்துள்ளார். இந்த மாணவி இரண்டாவது முறை பரீட்சை எழுதுவதால் விண்ணப்பப் பத்திரத்தில் இரண்டு இடங்களில் அதிபர் கையொப்பமிட வேண்டும். ஆனால் அதிபர் ஓர் இடத்தில் மாத்திரமே கையொப்பமிட்டுள்ளார். இதனை மாணவி அதிபரிடம் சுட்டிக்காட்டியபோதும் ஒரு கையொப்பம் போதுமென அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் அதிபரின் ஒரு கையொப்பத்துடன் விண்ணபத்தை ஏற்க முடியாதென பரீட்சைத் திணைக்களம் மாணவிக்கு விண்ணப்பப்படிவத்தை திருப்பி அனுப்பியுள்ளது.

நிராகரிக்கப்பட்ட விண்ணபத்தை அதிபரிடம் காட்டியபோது "நீர் 2002ல் பரீட்சை எழுதும்" என்று அவர் சர்வசாதாரணமாக கூறியுள்ளார்.

குறிப்பிட்ட பெண் அதிபரின் நடவடிக்கை தொடர்பாக மாணவியின் பெற்றோரும் சக மாணவிகளும் கடும் அதிருப்தி தெரிவித்தனர்.


## K.N.S.SHOPPING CENTRE &TAKEAWAY-SWISS

மளிகைப் பொருட்கள், ஒறிஜினல் வீடியோ, ஓடியோ, கசற்றுக்கள் COMPACT டிஷ்குகள், வீடியோ C.Dகள், 22 கரட்டில் தங்க நகைகள், பத்திரிகை, சஞ்சிகைகள் இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள

**K.N.S.SHOPPING CENTRE**
K.N.SUKUMARAN
ANKER-STR-16
8004 Zurich Switzerland.
T.P 01-2427111 FAX 01-2427144

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 12 மணிவரை (ஞாயிறு உட்பட) கடை திறந்திருக்கும்.



## அற்புத சித்தர் மாந்திரீகம்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் அதில் உடன் வெற்றிகாண மட்டக்களப்பு-மலையாள-சோதிட மாந்திரீகச் சித்தர். பேராசிரியர்-கலாநிதி. "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம், குடும்பப் பிணக்கு, தொழில் விருத்தி, திருமணத் தடங்கல், பிரயாணத்தடை, சத்துரு ஜெயம் முதலான சகல விடயங்களிலும் நிச்சயம் வெற்றி பெறலாம். ஏழு தலைமுறை பாரம்பரியமும், 30 வருட சுய அனுபவ ஆற்றலும் கொண்ட "சக்தி சரவணா"வினால் நினைத்த காரியம், ஜாதகபலன், சோதிட அருள்வாக்கு, எண்சோதிடம் முதலான பிற சோதிட சேவைகளும் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரிதசேவை மேற்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் தொடர்பு கொள்ளும் உள்ளூர் அன்பர்கள் 20 ரூபா முத்திரையுடன் தொடர்பு கொண்டு பதில் பெறலாம். இரகசியங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும். காலதாமதம்-பணவிரயம் இன்றி உடன் பரிபூரண வெற்றி பெற தொடர்பு கொள்ளுங்கள். நேரில் சந்திக்க- காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை.


தொடர்பு (வியாழன் விடுமுறை)

HON.PROF.DR.SHAKTHY SARAVANA;
Majestic Inn, Room-203
49, Galle Road, Colombo-04.
T.P: 584686

தொலைபேசி தொடர்பு காலை 9முதல் இரவு 9 வரை வெளிநாட்டினர் தொடர்பு கொள்ள
T.P: 0094 1 584686


## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16.10.1948



விண்ணில் 17.06.1998

**அமரர் கந்தையா இராசகோபால் (கற்கண்டு)**

RC and DC-உத்தியோகத்தர் கணுக்கோணி, முள்ளியவளை.

எம் அன்பு அப்பா மூன்று ஆண்டுகள் உருண்டு விட்டதப்பா.
அப்பா அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன!
ஆறுதல் செய்ய ஆண்டவன் இருந்தென்ன!
அப்பா உங்கள் அன்புக்கு ஈடாகுமா-அப்பா-அப்பா-அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கிறோம்.
உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, மகள், மருமகள், மகன்மார் மைத்துனர், மாமி, ராஜா குடும்பம் கனடா.

*தகவல்: மகள், மருமகன், ஜெயந்தி (சுவீட்டி), குகதாஸ்--கனடா.*


**WWW.tamilhotmail.com-Free E-mail**

# கேட்பாரின்றித் தொடரும் பாலியல் வல்லுறவுகள்

தலைநகரிலும் சரி ஏனைய யுத்தப் பிரதேசங்களிலும் சரி தமிழ் பெண்கள் பாதுகாப்புப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதென்பது தற்போது சர்வ சாதாரணமான விஷயமாகிப் போய்விட்டது.

புலியெனக்கூறி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் விசாரணையின் ஒரு கட்டமாக கைரேகைகளை பதிவு செய்வதைப் போல பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட வேண்டும் என்பது வழக்கத்தில் இருந்து வரும் ஒன்றுதானா என்று கேட்கும் அளவு நிலமை மோசமாகியுள்ளது.

மிக அண்மைய சம்பவம், பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் பெண்கள் மோசமான பாலியல் சித்திரவதைக்கு ஆளானதாகும்.

இந்த இருவருக்கும் மிகவும் அநாகரிகமான பாலியல் சித்திர வதைகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு பெண்ணின் பெண்ணுறுப்புக்குள் குண்டாந்தடிகள் செலுத்தப்பட்டதாக சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

பட்டதாக செய்திகள் வந்தால், மறுநாள் பத்திரிகைகளில் சில தமிழ் கட்சிகளின் பெயரில் கண்டனம் வரும். அல்லது 'குறிப்பிட்ட சம்பவத்தை விசாரிக்குமாறு ஜனாதிபதிக்கு அவசர பெக்ஸ்' என்று செய்தி வரும்.

அடுத்த ஓரிரு நாளில் 'தமிழ் கட்சிகள் கூடி ஆராய்வு' 'அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லைத் தவிர்ப்புக்குழு பொலிஸாருக்கு உத்தரவு' இப்படியான பத்திரிகைச் செய்திகள் கொட்டை எழுத்தில் இருக்கும். அதோடு மறக்கப்பட்டு விடும். சிலவாரங்கள் கழித்து 'போதிய சாட்சிகள் இல்லாததால்....' என்ற காரணத்தின் பேரில் அந்த குற்றச்செயலின் கதை முடிக்கப்பட்டிருக்கும். இதுவேதான் ஆண்டாண்டு காலமாகத் தொடர்கிறது.

தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கு தண்டனை இல்லை என்ற தைரியத்திலோ என்னமோ இப்போது பாதுகாப்பு படையினர் மட்டுமன்றி வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து வந்து தலைநகரில் தங்கியிருக்கும் யுவதிகளை மிரட்டி லொஜ்காரரும் தமது ஆண்மையை காட்ட வெளிப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இத்தனைக்கும் தமது பொலிஸ் நிலையத்தில் அவ்வாறான எந்தவித பாலியல் வல்லுறவும் நிகழவில்லை என்று பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எமது தமிழ் பிரதிநிதிகளில் அநேகமானவர்கள் பாராளுமன்றத்தில் வெளுத்து வாங்கினார்கள்.

இதற்கு முன்னர் நடந்த இத்தகைய சம்பவங்களின் விசாரணைகளுக்கும் வழக்குகளுக்கும் நடந்த கதியை பார்க்கும்போது, எதை விசாரித்து என்ன பலன் என்றுதான் தோன்றுகிறது.

சாரதாம்பாள் கொலை வழக்கு, சாட்சியம் இல்லை என்று புதைக்கப்பட்டது. இரண்டு பிள்ளைகளின் அப்பாவித் தாயை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொன்று பற்றைக்குள் மறைத்த அக்கிரமத்துக்கு எந்த சாட்சியும் இல்லாமல் போய்விட்டது!

அண்மையில் மன்னார் உப்புக்குளத்தில் நடந்த சம்பவத்தின் முடிவும் அநேகமாக இப்படித்தான் இருக்கும். இந்த சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இன்னமும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை. அவர்களுக்கு பாதுகாப்புப் பிரச்சனையாம்! எப்படியிருக்கிறது சட்டம்!

இப்படியெல்லாம் தமிழனை பேய்க்காட்ட முடியும் என்றிருக்கிறபோது, நாட்டில் எங்கே பாலியல் வல்லுறவு குறையப்போகிறது?

எங்கேயாவது ஓர் இடத்தில் தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் இருபெண்களில் கல்வயலைச் சேர்ந்த கந்தையா சிவரஞ்சனி என்ற யுவதி கொழும்பில் அவர் தங்கியிருந்த விடுதி முகாமையாளராலும் மேலும் 3 சிற்றூழியர்களாலும் பலாத்காரம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"புலியென்று பொலிஸில் பிடித்து கொடுப்போம்" என இந்த யுவதியை மிரட்டியிருக்கும் விடுதி முகாமையாளர் இவருடன் உறவு கொண்டிருக்கிறார்.

இதேவேளை இதற்கு முன்னரும் தலைநகர லொஜ்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நடைபெற்று அச்சம் காரணமாக அவை வெளியில் சொல்லப்படாமல் மறைக்கப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது.

இன்று வரையில் குறிப்பிட்ட விடுதி முகாமையாளர்மீது முறைப்படியான சட்ட நடவடிக்கை எடுக்க யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை.

குறைந்தது நம்நாட்டின் பெண்ணியல்வாதிகளாக கூறிக்கொள்ளும் யாராவது இதில் ஆர்வம் காட்டினார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

அரசாங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சிகளில் கூலிங்கிளாஸ் போட்டுக்கொண்டு முன்வரிசையில் அமர்ந்திருக்கவும், வெளிநாடுகள் வழங்கும் உதவிகளை விழுங்கி ஏப்பமிடவும் மட்டும்தான் இந்த நாட்டில் பெண்கள் அமைப்புக்களா என்று நினைக்கத் தோன்றுகிறது.

எது எப்படியிருந்தாலும் அடக்கு முறை சட்டங்களை பயன்படுத்தி தமிழ் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியிலான பலாத்காரங்களை தடுத்து நிறுத்த பொறுப்புள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

"எனது மனைவியும் மகளும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அதனால் இதில் நான் சம்பந்தப்படமாட்டேன்" என்று எவரும் நினைக்கக்கூடாது.

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முன்னர் நிலைமையை ஆழம்பார்ப்பதது போல ஏற்கனவே திட்டமிட்டபடி பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அந்தக் கட்சியினால் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.


இவ்விரண்டு அமைப்புக்களும் தமது நியாயாதிக்க அதிகாரங்களுக்கு அப்பால் சென்று ஒன்றை ஒன்று கட்டுப்படுத்த முனையக் கூடாதெனவும் ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது.

சரத் என். சில்வா மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்த்து தீர்ப்பளித்தவர்கள் அவராலேயே நியமிக்கப்பட்ட நீதிபதிகள் என்பது ஐ.தே.க.வின் குற்றச்சாட்டு.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நடக்க முடியுமா என்று உயர்நீதி மன்றத்திடமே எப்படிக் கேட்பது?

இப்பொழுது சபாநாயகர் எடுக்கப் போகும் முடிவு என்ன என்பதை அரசியல் வட்டாரங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றன. இது குறித்து இறுதி முடிவை அடுத்த வாரம் அறிவிப்பதாக அநுர பண்டாரநாயக கூறியிருக்கிறார்.

# என்ன சொல்லப்போகிறார் அநுரா...?



ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் 77 பேரின் கையொப்பங்களுடன் கடந்த 6ம் திகதி இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகர் அநுர பண்டாரநாயகவிடம் கையளிக்கப்பட்டது. அன்றைய தினமே உயர் நீதிமன்றம் வழங்கிய சர்ச்சைக்குரிய தீர்ப்பொன்றினால் இலங்கையில் இதுவரை காலமும் ஏற்பட்டிராத அரசியலமைப்பு நெருக்கடி தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரம் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும், இதனால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் கூறி சட்டத்தரணிகள் மூவர் சமர்ப்பித்த மனுவொன்றை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதை தடை செய்யும் உத்தரவொன்றை சபாநாயகருக்கு பிறப்பித்தது.

உயர் நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்ட நேரத்தில் அது தொடர்பான முடிவெடுக்கும் சபாநாயகரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தும் உத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளதன் மூலம் உயர் நிலை மேலாண்மை கொண்டது பாராளுமன்றமா நீதிமன்றமா என்ற அரசியலமைப்பு சிக்கல் தோன்றியுள்ளது.

இது குறித்து சட்டத்துறை நிபுணர்கள் பல்வேறு வகையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். சிலர் நீதிமன்ற உத்தரவுக்கு பாராளுமன்றம் கட்டுப்பட வேண்டும் என்கின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்துக்கு நீதி மன்றம் உத்தரவிடமுடியாதென சிலர் சொல்கின்றனர்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை ஆராயவும் விசாரிக்கவும் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படுமானால் அங்கே முறைப்பாடு செய்தவர்களும் தீர்ப்பு சொல்லப்போகிறவர்களும் ஒரே பிரிவினரே என்பது அரச தரப்பு வாதம்.

நீதியரசர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது சட்ட விரோதமானதல்ல. இதற்கு அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறானதொரு நம்பிக்கையில்லா பிரேரணையால் நீதிமன்றத்தின் சுயாதிபத்தியத்துக்கு பங்கம் தேர்ந்துள்ளதாக கூறப்படுவது இதுவே வரலாற்றில் முதற் தடவையாகும்.

எவ்வாறிருந்தாலும் தற்போது இது நீதி மன்றத்தின் முன்னிலையில் உள்ள ஒரு வழக்கு. உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் ஒரு விடயத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க முடியாது.

பாராளுமன்றம் இப்போது யாரிடம் சட்ட ஆலோசனை பெறப்போகிறது? பொதுவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒரு சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானதா இல்லையா என்பதை சபாநாயகர் உயர் நீதி மன்றத்திடம் கேட்பதுதான் வழக்கம்.

இங்கே அப்படி செய்ய முடியாது.

1991ம் ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது இதே போன்று சபாநாயகரின் முடிவுக்காக காத்திருக்க வேண்டி ஏற்பட்டது ஞாபகம் இருக்கலாம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்களும் ஐக்கிய தேசிக் கட்சியைச் சேர்ந்த சிலருமாக சேர்ந்து பிரேமதாசவுக்கு எதிராக தயாரித்த நம்பிக்கையில்லா பிரேரணையை அப்போதைய சபாநாயகர் எம்.எச்.முகம்மதிடம் கையளித்தார்கள். அதனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்த அவர் உடனடியாக பிரேமதாசவுக்கும் தெரியப்படுத்தினார்.

பிரேமதாச உடனே பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்தார். பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டால் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ள அனைத்து யோசனைகளும் செல்லுபடியற்றதாகிவிடும். இதன் காரணமாக நம்பிக்கையில்லா பிரேரணையும் செல்லுபடியற்றதாகிவிடுமா என்ற சட்டப் பிரச்சனை அன்று தோன்றியது.

தமக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறியக்கிடைத்த பின்னர் ஜனாதிபதியினால் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைக்க முடியாதென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று இந்தப் பிரச்சனைக்கு சபாநாயகர் கொடுத்த தீர்ப்பு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு சார்பாகவே அமைந்தது. இன்று பிரதம நீதியரசர் விஷயத்தில் சபாநாயகர் அநுரபண்டாரநாயகவின் தீர்ப்பு எப்படி இருக்கப்போகிறது என்பதை அறிய அடுத்த வாரம் வரை காத்திருக்க வேண்டும்.

இந்நிலையில் இரண்டு தரப்பும் சபாநாயகர் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் தான் யாருடைய அழுத்தத்துக்கும் பணியப் போவதில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

எவ்வாறெனினும் இது தொடர்பாக பாராளுமன்றம் வழங்கும் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ●

# தோசை கேட்ட சொல்ஹெய்முக்கு அரசாங்கம் கொடுத்த அல்வா!

எம்.பி.எம். பர்ஸான்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணப்பட வேண்டும் என்று கடந்த ஒன்றரை வருட காலமாக ஓடித்திரிந்த நோர்வே விசேடத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை அந்த முயற்சியில் இருந்து ஓரங்கட்ட இலங்கை அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

சொல்ஹெய்ம் ஒரு நேர்மையான ஏற்பாட்டாளராக பணியாற்றுவது அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவரை இதிலிருந்து எப்படியாவது கழற்றி விட வேண்டும் என்று அரச தரப்பு பலமுறை முயற்சி செய்தது. ஒரு நிலையில் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக பகிரங்கமாகவே சொல்ஹெய்ம் விலகிக் கொள்வது நல்லதென கூறியிருந்தார்.

இதன் உச்சகட்டமாக கடந்த வாரம் கொழும்பில் ஜனாதிபதிக்கும் நோர்வே வெளியுறவு அமைச்சர் தொர்பஜோன் ஜக்லாண்ட்டுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போது சொல்ஹெய்முக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் எரிக் சொல்ஹெய்மை ஒரு விடுதலைப்புலி ஆதரவாளராக காண்பிக்க தென்னிலங்கையில் பேரினவாத அரசியல்வாதிகளும் சில பத்திரிகைகளும் தீவிர பிரயத்தனம் மேற்கொண்டன. ஆனால் யார் என்ன சொன்னாலும் அவர் தன் முயற்சியில் சளைக்காதவராகவே இருந்தார். இலங்கையில் சமாதான முயற்சி என்ற கயிற்றின் மேல் நடக்கும் பணியில் தான் எந்தப்பக்கமும் சாய்ந்து விடக்கூடாது என்பதில் சொல்ஹெய்ம் மிகவும் கவனமாக செயற்பட்டார்.

இணையத்தளம் ஒன்றில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சொல்ஹெய்ம் பதிலளித்துவருகிறார். ஒரு முறை அவரிடம் "உங்களுக்கு பிடித்தமான இலங்கை உணவு எது?" என்று கேட்கப்பட்டபோது, "காலையில் மசாலாத்தோசை சாப்பிடப் பிடிக்கும். பகல் நேரத்தில் தென்பகுதியில் சமைக்கப்படும் மரக்கறி வகைகளை விரும்பிச் சாப்பிடுவேன்" என்று புத்தி சாதுர்யமாக பதிலளித்திருந்தார்.

அதாவது தமிழர்களின் மசாலாத் தோசைதான் தனக்குப் பிடிக்கும் என்றோ சிங்களவர்கள் சமைக்கும் மரக்கறி வகைதான் பிடிக்கும் என்றோ ஒன்றை மட்டும் கூறி எவருடைய மனதையும் நோகடிக்காமல் இதில் கூட தனது நடுநிலையை வெளிப்படுத்தியிருந்தார்.

கடைசியில் அவர் இவ்வளவு காலம் பட்ட கஷ்டங்களுக்கு தோசையும், மரக்கறியும் சாப்பிட்டதுதான் மிச்சம் என்றாகிவிட்டது. எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் இந்த நாட்டில் சமாதானம் மலர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பாடுபட்ட சொல்ஹெய்ம் கொழும்பில் இருந்த சமயம் ஜனாதிபதியை சந்திக்க அனுமதி தரமுடியாது என்று கூறப்பட்டதன் மூலம் தெளிவான அவமானத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அதன் பின்னர் அவர் வழங்கிய பத்திரிகைப் பேட்டிகளில்கூட இது குறித்து எந்தவிதமான அதிருப்தியும் தெரிவிக்காமல், தான் ஒரு நாகரிகம் தெரிந்த மனிதன் என்பதை நிரூபிக்கும் வகையிலேயே கருத்து வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

எப்படியிருந்தாலும், இவ்வாறான நிகழ்வுகளின் பின்னர் சொல்ஹெய்மின் முன்முயற்சிகள் அரசாங்கத் தரப்பினரால் வித்தியாசமான கண்ணுடன்தான் நோக்கப்படும்.

சொல்ஹெய்ம் தொடர்பாக அரசாங்கத்துக்கு இருக்கும் முக்கிய பிரச்சனை அவர் இலங்கை அரசியல் தலைவர்களைப்போல பொய்யும் புரட்டும் இல்லாமல் நேர்மையாக நடந்து கொள்கிறார் என்பதுதான்!

புலிகளிடம் ஒன்றைச் சொல்லி அரசாங்கத்திடம் இன்னொன்றைச் சொல்லி பத்திரிகைகளுக்கு வேறொன்றைக்கூறும் ஒருவராகவோ, அல்லது முன்னைய காலங்களில் மத்தியஸ்த முயற்சி என்ற பெயரில் சம்பாதிக்க வந்த சில இந்திய இராஜதந்திரிகளைப் போன்று கிடைப்பதை பொக்கற்றில் போட்டுக் கொண்டு பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் ஒருவராகவோ இருந்திருந்தால் சொல்ஹெய்மையும் அரச தரப்பு மெச்சிப் புகழ்ந்திருக்கும்.

இந்திய இராஜதந்திரிகளிடம் கண்ட எந்த 'வீக்பொயிண்டையும்' சொல்ஹெய்மிடம் காண முடியாமல் போனதால் அரசாங்கத்துக்கு அவர் மேல் கெட்ட கோபம். சிறிது காலமாகவே சொல்ஹெய்ம் வேண்டாத விருந்தாளிதான்! ஆனால் தாம் சிக்குண்டு கிடக்கும் பொறியில் இருந்து மீள வேறு வழியில்லாததால், அவர் வரும்போதெல்லாம் கூப்பிட்டு வைத்து சமாளிக்க வேண்டியதாக இருந்தது.

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நோர்வே அரசின் உயர்மட்ட பிரவேசத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறித்தான் சொல்ஹெய்ம் அவுட் ஆக்கப்பட்டிருக்கிறார். இந்த 'உயர் மட்டக் கதை' அரசாங்கத்தின் மற்றொரு அல்வா. ஆனால் இதன்மூலம் அவருக்கு ஒன்றும் நஷ்டமில்லை. அரசாங்கம் பேரினவாதிகளை திருப்திப்படுத்தப்போய் தனக்குத்தானே காதில் பூ சுற்றிக் கொள்கிறது!

தங்களுடன் கலந்தாலோசிக்காமல் சொல்ஹெய்மை சமாதானப் பணியில் இருந்து ஓரங்கட்ட அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவுக்கும், அதற்கு சம்மதம் தெரிவித்த நோர்வே வெளிவிவகார அமைச்சுக்கும் விடுதலைப் புலிகள் ஏற்கனவே தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் ஒரு மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளரின் தெரிவில் இத்தனை சிக்கல்கள் என்றால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வொன்று இறுதி வடிவம் பெறுவதென்பது இந்த நூற்றாண்டிலாவது நடக்குமா என்று நம்ப முடியாமல் இருக்கிறது!

நோர்வே அரசாங்கம் புதிதாக ஒருவரை தேடிப்பிடித்து இனிமேல் இந்தப் பணிக்கு அமர்த்தி அவரை அரசும் புலிகளும் ஏற்று மீண்டும் ஒரு நிலைக்கு இந்த விடயத்தை ஒப்பேற்றி எடுப்பது இலகுவான காரியமல்ல. அப்படி ஒரு நல்ல நிலை உருவானால் இறுதிநேரத்தில் அரசாங்கம் அவரையும் 'வேண்டாம்' என்று சொல்லாதென கூறுவதற்கில்லை.

அரச தரப்புக்கு சொல்ஹெய்ம் மீது உச்சகட்ட வெறுப்பேறியது, அவர் கடந்த முறை இலங்கை வந்து நோர்வே திரும்பிய பின்னர் அமெரிக்காவுக்குப் போய் அந்த நாட்டு வெளிநாட்டமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்ததுதான். 'எங்களிடம் கேட்காமல் எங்கள் பிரச்சனைபற்றி சொல்ஹெய்முக்கு அமெரிக்காவுடன் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது" என்ற கருத்து அரசாங்க உயர் மட்டங்களில் இருந்து வெளிப்பட்டது.

அத்துடன் சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்கவுடன் நல்ல உறவுகளை பேணி வந்தார். இலங்கையை பொறுத்தவரையில் இனப்பிரச்சனை தீர்வுக்கு எதிர்க்கட்சியின் ஆதரவு கட்டாயம் தேவை என்பதை உணர்ந்திருந்த சொல்ஹெய்ம், அடிக்கடி ரணிலுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு வந்தார். இதுவும் அரசாங்கத்துக்கு அவர்மேல் ஆத்திரத்தை உண்டு பண்ணியுள்ளது.

அத்தோடு வெளிநாட்டமைச்சர் சொல்லும் பொய்களுக்கு "ஆமா" போடுகிறவராக சொல்ஹெய்ம் இருக்கவில்லை.

கடந்த மாதம் நோர்வே வெளிநாட்டமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதிய லக்ஷ்மன் கதிர்காமர், அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் முக்கிய பல விடயங்களில் உடன்பாடு காணப்பட்டு விட்டதாக முக்கியமான பொய் ஒன்றை சொன்னார். அதனை உடனடியாக புலிகள் தரப்பு மறுத்தது. போதாக் குறைக்கு சொல்ஹெய்மும் 'அப்படி ஒன்றும் உடன்பாடு ஏற்படவில்லை' என்று கூறிவிட்டார். நமது வெளிநாட்டமைச்சருக்கு பலத்த சங்கடமாய்ப்போனது. இந்த விடயம் அவருக்கு எந்தளவு அவமானத்தில் முடிந்ததென்றால், கடைசியில் அந்தக் கடிதத்தில் தான் எழுதியவைகள் இடையில் யாராலோ திரிபு படுத்தப்பட்டு 'சதி' நடந்துவிட்டது என்று பொய் மேல் பொய் சொல்லி மானத்தை காப்பாற்ற வேண்டியதாகி விட்டது. இப்படியான சந்தர்ப்பங்களில் சொல்ஹெய்ம் தனக்கு உதவவில்லை என்ற கோபம் கதிர்காமருக்கு இருக்கவே செய்யும்.

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து பார்த்தவர்கள், சொல்ஹெய்ம்மை அநாகரிகமான முறையில் ஓரங்கட்டிவிட்டார்கள். குறைந்த பட்சம் கௌரவமான ஓர் அறிவித்தலின் மூலமாவது அவரது பணியை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் நோர்வே அரசு சொல்ஹெய்ம் தான் இலங்கை விவகாரத்துக்கான விசேடத் தூதுவர் என்று இன்னமும் கூறிவருகிறது.

எவ்வாறிருந்தாலும் இத்தகைய செயல்களின் இறுதி விளைவு கொடிய யுத்தம் மேலும் பல அழிவுகளுடன் நீடித்துச் செல்வதுதான். கஷ்டமும் நஷ்டமும் இந்த நாட்டு மக்களுக்குத்தான் சொல்ஹெய்முக்கு அல்ல. ●

# அண்டை மண்டலத்தில்....

கானகன்

# ராமதாசின் கோபம் ஜெயலலிதாவை என்ன செய்யும்?

கொதிக்கிறார் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ். வெற்றி பெற்று அரியணையேறிய அன்புச் சகோதரி ஜெயலலிதா அவரைக் கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. வழக்கம் போல சர்வமும் நானே என்று புரட்சித் தலைவி முழங்க, அவரது தொண்டரடிப் பொடியாழ்வார்கள் 'ஆமாம்' என்று வேகமாக தலையாட்டி, கரகோஷம் எழுப்பிய வண்ணம் அவர்களெல்லாம் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். மத்தியில் இருந்த இரண்டு அமைச்சர்களையும் இழந்துவிட்டார். பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் படுதோல்வி, ஓர் இடம் கூட கிடைக்கவில்லை. தமிழகத்தில் 20 எம்.எல்.ஏக்களைப் பெற்றிருக்கிறார் என்பதென்னவோ உண்மைதான். ஆனால் அவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?

அ.இ.அ.தி.மு.க.விற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தாகிவிட்டது. கூட்டணிக்கட்சிகளின் தயவு அதற்குத் தேவையில்லையே. என்ன செய்வார் பாவம் ராமதாஸ்? கொதிக்கலாம், குமுறலாம், புலம்பலாம். அதைத்தான் அவர் இப்போது செய்து கொண்டிருக்கிறார். ஜூன் 9ம் நாள் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டு விழா மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டது. தேர்தல் முடிவுகளுக்குப்பின் பா.ம.க. நடத்திய முதல் முக்கிய நிகழ்ச்சி. ராமதாஸ் என்ன கூறப்போகிறார் என்றறிய பலரும் ஆவலாயிருந்தனர்.

அவர் எந்தப் பிரச்சனையிலும் மாட்டிக் கொள்ளாமல், தனது எதிர்காலத்திட்டம் என்ன என்பதை சூசகமாகக்கூடத் தெரிவிக்காமல்தான் ராமதாஸ் அந்தக்கூட்டத்தில் பேசினார். ஆனால் ஜெயலலிதா தன்னை மதிக்கவில்லையென்ற ஆதங்கம் அவருக்கிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க., பா.ம.க. உறவில் ஏதோ விரிசல் விழுந்திருக்கிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் பா.ம.க. வலிமை பெற்று விளங்குகிறது. அ.இ.அ.தி.மு.க. கூட்டணிக்கு அந்த வலிமை பயனளித்துள்ளது. "எங்கள் பங்களிப்பு பெரிது, அதனை யாரும் மறுக்க முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறினார் ராமதாஸ்.

அப்படிப்பட்ட கூற்றுக்கள் ஜெயலலிதாவிற்கு எரிச்சலையூட்டும் என்பதில் ஐயமில்லை. அவரது கட்சி வெற்றிக்கு, அவரது அணி வெற்றிக்கு வேறு எவரையும் சொந்தங்கொண்டாட அவர் என்றுமே அனுமதித்ததில்லை.

1991ம் ஆண்டு தேர்தல்களில் மாபெரும் வெற்றியடைந்ததில் காங்கிரஸ் கட்சி பங்கு கோரப்போய்த்தான் சிக்கல் ஏற்பட்டது. ராஜீவ் கொலை நடந்திருக்காவிட்டாலும் அப்போது அ.இ.அ.தி.மு.க வெற்றிபெற்றிருக்கும் என்பதென்னவோ உண்மைதான். ஆனால் அந்தக் கொலை மக்களை வெகுவாக பாதிக்க, எதிர்க்கட்சிகள் எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் போயின. தி.மு.க ஒரே ஓர் இடத்தில்தான் வெற்றி பெற முடிந்தது.

கட்சி உருக்குலைந்து போய்க்கொண்டிருந்த அந்த நேரத்தில் காங்கிரசார் என்ன செய்வார்கள்? எங்கள் தலைவனின் தியாகத்தின் விளைவாகவே தேர்தலில் மாபெரும் வெற்றி என்று கூட்டம்போட்டு பேசி, கலைந்து போனார்கள். ஆனால் அதுகூட ஜெயலலிதாவிற்கு பொறுக்கவில்லை.

மதுரையில் வீரவரலாற்று வெற்றி மாநாடு ஒன்றினை நடத்தி, "பொதுத் தேர்தல் வெற்றிகளுக்கு வேறு யாரும் சொந்தங் கொண்டாடக்கூடாது, எல்லாம் எனக்காக விழுந்த வாக்குக்கள்" என்று பிரகடனம் செய்தார்.

அப்போது அவருக்கு கைகட்டி கோஷம் செய்து கொண்டிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியே அந்தப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்தார். அதன்பிறகு இருகட்சிகளுக்கும்இருந்த உறவு சீர்கெடத் துவங்கியது.

இப்போது அவை கூட்டணிக்கட்சிகள் தான், ஆனால் இன்னமும் அவர்கள் உறவு சுமுகமாகவேயில்லையே.

காங்கிரசின் நிலை அகில இந்திய அளவில் படுமோசமாகிக் கொண்டிருப்பதால் இனி காங்கிரஸ் உறவே தனக்கு தேவையில்லை என்ற ரீதியில் பேசத் துவங்கியிருக்கிறார் ஜெயலலிதா.

சமீபத்தில் புதுடில்லி சென்றபோது, சோனியாவை சந்தித்த பிறகு, செய்தியாளர்களுடன் பேசும்போது, "கூட்டணியெல்லாம் தேர்தலோடு முடிந்துவிட்டது" என்று கூறியிருக்கிறார் ஜெயலலிதா. அவர் பாரதீய ஜனதா அணியில் மீண்டும் இணைவதற்காக காய்களை நகர்த்திக்கொண்டிருக்கிறார் என்பது தனிக்கதை.

அதுவும் சமீபத்திய தேர்தல் வெற்றியைப் பற்றி இன்னொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் வாரிசு, அ.இ.அ.தி.மு.க வாக்கு வங்கி அவரால் உருவாக்கப்பட்டது. அந்த மகிமையில்தான் அவர் கதை ஓடுகிறது என்று சொல்லப்படுவதுண்டு.

எம்.ஜி.ஆர் பெயரை அடிக்கடி சொல்லிக்கொண்டாலும், தன் சொந்த வாழ்க்கையில் பல்வேறு பிரச்சனைகள் உருவாக அவர்தான் காரணம் என்று ஜெயலலிதா நம்புகிறார், ஒருசமயம் பகிரங்கமாகக் கூறியும் இருக்கிறார். எனவேயே தேர்தல் நேரம் தவிர மற்ற சமயங்களில் எம்.ஜி.ஆர் பெயர் அ.இ.அ.தி.மு.க. நிகழ்ச்சிகளில் இருட்டடிப்பு செய்யப்படுகிறது. ஜெயலலிதா அணி 1989 சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. அதன் பிறகு ஒன்றுபட்ட அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. அதன் பிறகு 1991 பொதுத் தேர்தல். இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் எம்.ஜி.ஆர் பெயர், அல்லது காங்கிரஸ் கூட்டணி அல்லது இரண்டுமே அ.இ.அ.தி.மு.க.விற்கு கைகொடுத்திருக்கிறது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்களில் பெற்ற பெரும் வெற்றிக்குத்தான் ஜெயலலிதா பெருமளவில் உரிமை கொண்டாட முடியும், கூட்டணிக் கட்சிகளின் வாக்கு வங்கிகள் அவருக்கு உதவியிருந்தாலும்கூட எல்லோரும் ஜெயலலிதாவின் செல்வாக்கினை மனமார ஏற்றுக் கொள்ளும் இவ்வேளையில், இப்படி ராமதாஸ் பேசியிருப்பது புரட்சித் தலைவியின் கோபத்தை அதிகப்படுத்தத்தான் செய்யும்.

ராமதாஸ், வெற்றியில் எனக்கு முக்கிய பங்கிருக்கிறது என்றதோடு நிற்கவில்லை. ஒருபடி மேலே சென்று ஜெயலலிதாவிற்கு எப்படி ஆட்சி நடத்தவேண்டுமென்று ஆலோசனை வேறு கூறியிருக்கிறார்.

தவிரவும் அன்புச்சகோதரிக்கு அவரோ அவரது மகன் அன்பு மணியோ பெரிய புகழாரம் ஒன்றும் சூட்டிவிடவில்லை. கருணாநிதியைப் பற்றிப் பேசும்போதுகூட அவரைத் தாக்கவில்லை. "முன்கோபத்தால் 1996 தேர்தல்களில் தி.மு.க அணியில் இடம்பெற்ற கணிசமான இடங்களில் வெற்றிபெறும் வாய்ப்பை இழந்துவிட்டேன், இனி அப்படி நடந்து கொள்ளமாட்டேன், நமது கட்சிக்கு அதிக இடங்களைப் பெறுவதில் குறியாக இருப்பேன்" என்றும் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

சமீபத்திய தேர்தல்களுக்கு முன் நான் ராமதாசை சந்தித்துப் பேசியபோது, கடுமையான சொற்களால் கருணாநிதியைத் தாக்கி, அவர் தனது பரமவைரி என்ற ரீதியில் பேசிய ராமதாசா இப்படி எதுவும் நடவாதது போல பாவனை செய்யமுடிகிறது என்ற வியப்புத்தான் எழுகிறது. அவருக்கும் ஜெயலலிதாவிற்கும் அப்படி என்ன பிரச்சனை?

முதலாவதாக பாண்டிச்சேரியில் ஆட்சி அமைப்போம் என்று வீரம்பேசிய அவர் மண்ணைக் கவ்வினார். ஓரிடம் கூட கிடைக்கவில்லை.

பா.ம.க–அ.இ.அ.தி.மு.க. அணி தனித்துப் போட்டியிட்டதால்தான் அவ்விரு கட்சிகளுக்கும் தோல்வி என்பது பொதுவான கணிப்பு. அதுவும் பா.ம.க. ஒன்றுமில்லாமல் போனபிறகும், மூன்று இடங்களில் வெற்றி பெற்ற அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ்–த.மா.கா கூட்டணியுடன் ஒட்டிக்கொண்டு ஓர் அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டுவிட்டது. பா.ம.க நட்டாற்றில் விடப்பட்டது.

தமிழ்நாட்டில் தொகுதிப்பங்கீடு குறித்து பேரம் நடந்தபோது, காங்கிரசும், த.மா.கா.வும் பாண்டிச்சேரியில் பா.ம.க. தலைமையினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஜெயலலிதா வற்புறுத்தவில்லை, தோல்விக்கு ஆறுதலும் சொல்லவில்லை, மாறாக தன் கட்சிக்காரர்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டார் என்று ராமதாசிற்கு கோபம். தவிரவும் மாநிலங்களவைத் தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன. தமிழக சட்டமன்றம் ஏழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும். அ.இ.அ.தி.மு.க தயவில் தனது கட்சியிலிருந்து ஒருவரை மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கலாம் என்று ராமதாஸ் திட்டம் போட்டார், ஆனால் அதற்கும் ஜெயலலிதா மசிவதாகத் தெரியவில்லை.

இப்படித் தன்னை ஒரேயடியாகப் புறந்தள்ளுகிறாரே என்றுதான் ராமதாசிற்கு அன்புச் சகோதரி மேல் கோபம். அதுதான் அவரது மாமல்லபுரம் உரையில் வெளிப்பட்டதாகக் கருதவேண்டும். சரி, இவரது கோபம் புரட்சித்தலைவியை என்ன செய்யும்? ஒன்றும் செய்யாது. தேவைப்பட்டால் பதிலடி கொடுப்பார். அல்லது கண்டுகொள்ளாமலேயே இருந்துவிடுவார். அவரது தற்போதைய அணுகுமுறையை வைத்துப் பார்க்கும்போது, ஜெயலலிதா பதிலுக்கு ஏதாவது பேசி பிரச்சனையை வளர்ப்பார் என்று தோன்றவில்லை. இன்னும் சில மாதங்களில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. அப்போதும் ராமதாசிற்கு ஜெயலலிதாவின் தயவு தேவைப்படும். அதேபோல அ.இ.அ.தி.மு.க.விற்கும் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு வேண்டும்தான். ஆனாலும் ராமதாஸ் தி.மு.க பக்கம் போகமாட்டார் என்ற நம்பிக்கை ஜெயலலிதாவிற்கு இருப்பதால், கொடுப்பதை வாங்கிக்கொண்டு அணியில் இருங்கள் என்று ராமதாசிற்கு எச்சரிக்கை விடுவார் என்றே நம்பப்படுகிறது.



ராமதாஸ் எப்படியாவது மீண்டும் பாரதீய ஜனதா அணியில் சேர்ந்துவிடவேண்டுமென்று மனுப்போட்டுக் கொண்டிருக்கிறார். பாண்டிச்சேரியில்தான் ஒன்றுமில்லை மத்திய அரசிலாவது மந்திரிப்பதவி அனுபவிக்கலாமே என்ற எண்ணம்தான்.

தனது அமைச்சரவைக்கு ஏதும் ஆபத்தில்லை என்ற வலுவான நம்பிக்கை பிரதமர் வாஜ்பேயிக்கு காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த முலாயம் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சி இவை ஒன்று சேரப்போவதில்லை. வெளியிலிருந்து ஆதரிக்கும் தெலுங்கு தேசம் ஆதரவை விலக்கிக் கொள்வதாக இல்லை. எனவே ஐந்தாண்டுகள் பிரதமராக நீடிப்போம் என்று இறுமாந்திருக்கும் வாஜ்பேயி வெளியே போனவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. பிரிந்துபோய், காங்கரசுடன் கூட்டணி அமைத்து தோல்வியுற்ற மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திரிணாமூல் காங்கிரஸ் தலைவி மமதா பானர்ஜி, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கதவுகளைத் தட்டித் தட்டி அலுத்துவிட்டார். அது மாதிரி தனக்கு ஆகிவிடக்கூடாது என்பதில் ராமதாஸ் கவனமாயிருக்கிறார்.

மற்ற சாதிக்கட்சிகளெல்லாம் மண்ணைக் கவ்விய நேரத்தில் 20 இடங்களைப் பெற்று தனது வாக்கு வங்கியினை உறுதிப்படுத்திக் கொண்டாலும், 'எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறோம், என்ன செய்தால் தனிப்பெரும் கட்சியாக உருவாக முடியும்' என்பது பற்றியெல்லாம் ராமதாஸ் சற்றுக் குழம்பித்தான் போயிருக்கிறார். ■

# கச்சதீவின் பெயரில் காத்திருக்கும் ஆபத்து!

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வந்த கச்சதீவின் உரித்துடமை தொடர்பான பிரச்சனை முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் பேரில் இலங்கைக்கு சொந்தமாக்கப்பட்டதன் பிறகு நிலைமை சீரானது.

இடைக்கிடையே மீனவர் பிரச்சனைகளுடன் சம்பந்தப்படுத்தி கச்சதீவை மீண்டும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற வகையிலான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும், மிக அண்மைக்காலம் தொட்டு இந்த விடயம் சற்று உரத்த குரலில் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலின்போது கச்சதீவை மீட்பது குறித்து வாக்குறுதிகள் முன்வைக்கப்படும் அளவுக்கு தமிழகத்தில் ஒரு பேசப்படும் பிரச்சனையாக இது பரிணமித்துள்ளது.

இந்தத் தீவை இலங்கையிடம் இருந்து மீளப்பெறவேண்டும் என்று இந்திய மத்திய அரசை கோரப்போவதாக முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்ட அதேவேளை ஆளுநர் பாத்திமா பீபியும் அதே கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

கச்சதீவு வளம் நிறைந்த ஒரு பிரதேசமல்ல. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடற்பரப்பின் மத்தியில் அமைந்திருக்கும் ஒரு கரடுமுரடான மணற்திட்டு. ஆரம்ப காலங்களில் இந்தத் தீவில் இந்திய-இலங்கை பாதுகாப்புப் படைகள் தனித்தனியே பயிற்சி ஒத்திகைகளை நடத்தியதாக கூறப்படுகின்ற போதும் அண்மைக் காலங்களில் அவ்வாறாக எதுவும் இடம் பெறுவதில்லை. விடுதலைப் புலிகளை பொறுத்த வரையில்கூட இது முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பல்ல.

கச்சதீவின் பயனை அனுபவிப்பது இலங்கை இந்திய மீனவர்களும், இரு நாடுகளுக்கும் இடையில் கடத்தல் வியாபாரம் செய்பவர்களும்தான்.

மீன் பிடித்தலுக்காக நீண்டநாள் கடல் பயணம் மேற்கொள்பவர்களுக்கு கூடாரம் அமைத்து தங்கியிருக்க வசதியான ஒரு இடமாக இது அமைந்துள்ளது.

கடத்தல் வியாபாரிகளும் இந்தத் தீவினால் பல வழிகளில் பயன் பெறுகின்றனர்.

கடந்த காலங்களில் இலங்கை பாதுகாப்புப் படையினரால் இந்திய மீனவர்கள் பலர் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களை அடுத்தே தமிழ்நாட்டில் இதுவொரு பிரச்சனையாக உருவெடுக்க ஆரம்பித்தது. கடற்படையினரால் கணக்கு வழக்கின்றி இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் தொடருவதால் அதனைத் தடுக்கும் ஒரு திட்டமாக கச்சதீவை இந்தியா இலங்கையிடமிருந்து மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஜெயலலிதா பதவிக்கு வந்ததும் வராததுமாக இந்தப் பிரச்சனைபற்றி பேசியது இது மீண்டும் ஒரு பாரிய சர்ச்சையாக உருவெடுக்கலாம் என்ற சந்தேகத்தை அரசாங்க வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது.

ஆளும் பாரதீய ஜனதா கட்சிக்கு எதிரான போக்கை கடைபிடிக்கும் ஜெயலலிதா இதனை ஒரு கருத்து ரீதியிலான வெளிப்பாடாக மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் இந்தக் கோரிக்கையை வலியுறுத்த ஆரம்பித்தால் பிரச்சனை வளரலாம் என்ற பயம் இரு தரப்பு அரசியல் வட்டாரங்களிலும் காணப்படுகின்றது.

காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் ஜெயலலிதாவுக்கு தமிழக மக்கள் வழங்கிய ஆதரவு வாஜ்பாய் அரசாங்கம் மீது அவர்களுக்குள்ள வெறுப்பின் வெளிப்பாடாகவும் கருதலாம். இந்நிலையில் தமிழகத்திலிருந்து பலமாக எழும் கோரிக்கையை நிராகரித்துவிட்டு தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையின் துப்பாக்கிகளுக்கு இரையாவதை கண்டு கொள்ளாமல் இருக்க வாஜ்பாய் அரசாங்கத்தினால் முடியாது.

இதேவேளை தனக்கு பெருவாரியாக வாக்களித்த மீனவ சமுகத்துக்கு நன்றிக்கடன் தீர்க்கும் நோக்குடன் கச்சதீவை எப்படியாவது மீளப்பெற வேண்டும் என்ற முடிவுக்கு ஜெயலலிதா வருவாரானால் அது இலங்கை இந்திய உறவுகளில் விரிசலை ஏற்படுத்த போடப்படும் பிள்ளையார் சுழியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானதாக இருந்த போதிலும் அது பெரும்பாலும் கைவிடப்பட்ட ஒரு பிரதேசமாகவே இருந்து வருவதால் இந்தத் தீவை மையமாகக் கொண்ட இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவி இந்நாட்டு கடல் வளங்களை சூறையாடுகிறார்கள் என்ற குற்றச் சாட்டும் வட பகுதி மீனவர்களால் முன்வைக்கப்படுகிறது.

அத்துடன் தமிழ் நாட்டில் இருந்து சட்ட விரோதமான முறையில் பொருட்களை கடத்தி வருபவர்கள் இந்தத்தீவை தமது தற்காலிக களஞ்சியமாக பயன்படுத்துகிறார்கள். இதனை தடுக்கவும் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற நிலையில் தப்பித்தவறி கச்சதீவை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கேட்டால் இலங்கை அரசு பெரும் தர்ம சங்கடமான நிலைக்கு தள்ளப்படும்.

ஏனெனில் இந்தத் தீவினால் இலங்கைக்கு எந்தப் பிரயோசனமும் இல்லாவிட்டாலும்கூட அதனை இந்தியாவுக்கு திருப்பிக்கொடுக்க தலைப்பட்டால் தென்னிலங்கையில் உள்ள பேரினவாத அமைப்புகளுக்கு இந்தியாவைத் திட்ட அதுவே போதிய வாய்ப்பாக அமைந்து விடும்.

சிஹல உறுமயவுக்கு ஆர்ப்பாட்டம் நடத்தவும், பிக்குகளுக்கு உண்ணாவிரதமிருக்கவும் எதிர்க்கட்சிகளுக்கு அறிக்கை விடவும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாகிவிடும்.

ஆனால் அந்த அளவுக்கு இதுவொரு பிரச்சனையாக மாட்டாது. ஜெயலலிதா ஒரு முறை 'சும்மா' கேட்டதோடு விட்டு விடுவார் என்பதுதான் தற்போதைய நிலைமை குறித்து பரவலான அபிப்பிராயம்.

~மதி~

எவ்வாறெனினும் கச்சதீவை மீளப்பெறாவிட்டாலும் இந்த பிரச்சனையை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு கொடுக்கப்படும் அழுத்தத்தின் மூலம் அப்பாவி இந்திய மீனவர்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதை நிறுத்தவாவது ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் மீனவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ■

## அலசுவது - இராஜதந்திரி

# 'இரத்தினக்கல்லுக்கு மயங்காத; விலாங்குக் குணமில்லாத' எரிக் சொல்ஹெய்ம்

"இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வில் நோர்வே மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இதன்காரணமாக இலங்கை விவகாரத்தைக் கையாளும் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் பெயர் இலங்கையில் அனைவரது இல்லங்களிலும் நன்கு பரிச்சயமானதாகவே இருக்கின்றது"

நோர்வேயின் தேசிய தினக் கொண்டாட்டம் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட் போர்க்கின் இல்லத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது. அப்போது அங்கு உரையாற்றிய போதே நோர்வே தூதரக சிரேஷ்ட அதிகாரி திருமதி. பெட்ஸி டியுனோல்ட் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

திரு.எரிக் சொல்ஹெய்ம் இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தைக் கையாள ஆரம்பித்த நாளிலிருந்தது பல சவால்களுக்கு முகங்கொடுத்தவராகவே இருக்கின்றார்.

இருந்தபோதிலும் அவர் உணர்ச்சி வசப்பட்டவராகவோ அல்லது தமது நடவடிக்கைகளைக் கையாளுவது தொடர்பாக நம்பிக்கை இழந்தவராகவோ இருக்கவில்லை. தாம் கையாளுகின்ற விடயங்கள் சிக்கல் நிறைந்தவையாக இருந்த போதிலும், ஒரு சமரசத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கை திரு.சொல்ஹெய்மிடம் இருந்து வந்தது.

இதன் காரணமாகவே, அவர் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாகக் கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிடும்போது, "சமாதானத்துக்கான பயணம் மிக நீண்டது; ஆயினும், மெதுவாக அதே சமயம் நம்பிக்கை தளராது பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்" என்று அடிக்கடி கூறிவந்தார்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு சமரசம் செய்ய நோர்வே இணங்கியபோது முன்னாள் நோர்வே வெளியுறவு அமைச்சரான திரு.வெல்லபெக் மத்தியஸ்தராகக் கடமையாற்ற முன்வந்திருந்தார். திரு.வெல்லபெக் நோர்வே இராஜதந்திர வட்டாரங்களில் ஒரு முக்கிய புள்ளி.

பாலஸ்தீன-இஸ்ரேலிய சர்ச்சையைக் கையாளுவதில் பெரும்பங்காற்றியவர். மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக்ராபின், பாலஸ்தீனத்தலைவர் யாசீர் அரபாத் ஆகியோரை ஒருங்கிணைத்து இரு தரப்பையும் பேச்சுக்களில் ஈடுபட வைப்பதில் திரு.வெல்லபெக் முக்கிய பங்காற்றியிருந்தார்.

இதுதவிர தென் அமெரிக்காவில் இடம் பெற்ற அரசியல் சர்ச்சை, மத்திய அமெரிக்காவில் நிலவிய பிரச்சனை போன்றவற்றை அணுகுவதிலும் திரு.வெல்லபெக் பாராட்டப்படக்கூடிய விதத்தில் நடந்து கொண்டார்.

திரு.வெல்லபெக் இலங்கை விவகாரத்தைக் கையாள ஆரம்பித்ததும், இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் முன்னேற்றம் ஏற்படலாமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நோர்வேயில் திடீர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதையடுத்து, திரு.வெல்லபெக்கின் பங்களிப்பும் இலங்கை விடயத்தில் மாற்றங்கண்டிருந்தது.

இதனையடுத்தே திரு.எரிக் சொல்ஹெய்ம் இலங்கை இனப்பிரச்சனை குறித்த சமர நடவடிக்கைகளைக் கையாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

திரு.எரிக் சொல்ஹெய்ம் தென்னாசிய விவகாரத்தைப் பொறுத்தவரை நிபுணத்துவம் மிக்கவராகவே கருதப்படுகிறார். இதன் காரணமாகவே திரு.சொல்ஹெய்மிடம் இலங்கை விடயத்தைக் கையாளும் பொறுப்பு நோர்வே அரசினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப் பிரச்சனையின் தன்மையை திரு.சொல்ஹெய்ம் நன்கறிந்திருந்தார். உள்நாட்டில் சிக்கல் நிறைந்ததாக இருக்கும் அதேசமயம் பிராந்திய ரீதியாகவும் இந்தியாவுடன் சம்பந்தப்பட்டதாக இலங்கை விவகாரம் இருப்பதை திரு.சொல்ஹெய்ம் நன்கறிந்திருந்தார். இதன் காரணமாகவே தமது சமரச நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கும் திரு.சொல்ஹெய்ம் அவ்வப்போது விளக்கமளித்து வந்தார்.

பிராந்திய ரீதியாக மட்டுமல்ல. இலங்கையின் நேசநாடுகள், மற்றும் சர்வதேச ரீதியாக இலங்கை விவகாரத்தை அறிந்து வைத்துள்ள நாடுகள் என்பவற்றிடமும் தமது சமரச நடவடிக்கைகளுக்குத் திரு.சொல்ஹெய்ம் ஆதரவு தேடிவந்தார்.

அப்பழுக்கற்ற விதத்தில், நடுநிலையாகவே திரு.சொல்ஹெய்மின் சமரச நடவடிக்கைகள் இடம் பெற்று வந்தன.

இலங்கை இனப்பிரச்சனையோடு சம்பந்தப்பட்ட எந்தவொரு சக்தியாலும் பக்கச் சார்பான முறையில் கவர்ந்திழுக்கப்பட முடியாதவராக திரு.எரிக் சொல்ஹெய்ம் பணியாற்றியிருந்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழீழ விடுதலைப்புலிகளை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட்டோ அல்லது அவர்களிடம் தனது எதிர்பார்ப்புக்களைத் திணித்தோ திரு.சொல்ஹெய்ம் சமரச நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

இலங்கை அரச தரப்போடு ஒரு சமாந்தரமான நிலையில் வைத்தே தமிழீழ விடுதலைப் புலிகளைத் திரு.சொல்ஹெய்ம் அணுகியிருந்தார்.

இதன் காரணமாகவே தற்போது இலங்கை அரசின் கசப்புணர்வுக்கு திரு.சொல்ஹெய்ம் உள்ளாகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.


இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் தனிநபர் மத்தியஸ்த நடவடிக்கை என்பது புதிதானதல்ல.

ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தனவின் காலத்தில் இந்தியா இலங்கை இனப்பிரச்சனை குறித்து நிறையவே ஆர்வங்காட்டியிருந்தது. அப்போது இந்தியாவின் கீர்த்திமிக்க இராஜதந்திரிகளில் ஒருவரான ஜி.பார்த்தசாரதி இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான அரசியற் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி கூட திரு.ஜி.பார்த்தசாரதியின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்திருந்தார். ஆனால் இந்திராகாந்தியின் திடீர் மறைவு, மற்றும் திரு. ராஜீவ் காந்தியின் அனுபவமற்ற அணுகுமுறைகள் என்பவை ஜே.ஆர். அரசுக்கு ஏற்ற விதத்தில் அரசியல் சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கலாயின.

திரு.ராஜீவ் காந்தியின் அனுபவமற்ற தன்மையை ஜே.ஆர்.ஜயவர்த்தன தமக்கு மிகச் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டார்.

அரசியல் சாணக்கியம் கொண்ட ஜி.பார்த்தசாரதியை இலங்கை இனப்பிரச்சனையிலிருந்தும் விலக்கி வைப்பதில் ஜே.ஆர். ஜயவர்த்தன வெற்றி பெற்றிருந்தார்.



ராஜீவ் காந்தி- ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோருக்கிடையே நிலவிய நெருக்கம், ஜி.பார்த்த சாரதிக்குப் பதிலாக ரொமேஷ் பண்டாரி என்ற மற்றுமொரு இராஜதந்திரியை இலங்கை விவகாரத்தைக் கையாள வைத்திருந்தது.

ரொமேஷ் பண்டாரி ஒரு சொகுசுப் பேர்வழி. இலங்கைக்கு அவர் வந்திருந்த போதெல்லாம் அரச தரப்பினர் அவரை உல்லாசமாக வைத்திருப்பதில் ஆர்வங்காட்டியிருந்தனர்.

இலங்கையில் உல்லாசப் பயணம் மேற்கொள்ள விரும்பிய ரொமேஷ் பண்டாரியை ஹெலிகாப்டரில்கூட கூட்டிச் சென்று ஜே.ஆர்.தரப்பினர் இடங்களைக் காண்பித்திருந்தனர்.

இதுதவிர இலங்கையின் இரத்தினக் கற்களின்மீது ரொமேஷ் பண்டாரியின் கவனம் திரும்பியதால், அவருக்கு அக்கற்கள் அன்பளிப்பாகவும் அப்போது வழங்கப்பட்டிருந்தன எனவும் சில தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதன்பின்னர் இலங்கை விவகாரத்தை மற்றுமொரு சிரேஷ்ட இந்திய இராஜதந்திரியான ஏ.பி.வெங்கடேஸ்வரன் என்பவர் கையாண்டிருந்தார்.

திரு.வெங்கடேஸ்வரன் இலங்கைப் பிரச்சனையை மிகக் குறுகிய காலமே அணிகியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக இருந்த திரு.ஜே.என்.டிக்ஸிற் கொழும்பிலிருந்தவாறே இலங்கை விவகாரத்தைக் கையாண்டிருந்தார்.

திரு.ஜே.என்.டிக்ஸிற்றின் காலப்பகுதியிலேயே கொழும்பில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குமிடையே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது.

இந்த ஒப்பந்த விடயத்தில் திரு.ஜே.என்.டிக்ஸிற் 'பாம்புக்கு வாலையும், மீனுக்குத் தலையையும் காண்பிக்கும்' விலாங்கு மீனைப் போலவே நடந்து கொண்டார்.

வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களது ஆயுதங்களைக் கையளிக்கச் செய்த அதேசமயம், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் திணிக்க இந்தியப் படையினரையும் ஏவி விடுவதில் திரு.ஜே.என்.டிக்ஸிற் 'குள்ளத்தன'த்தோடு நடந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் அயல் நாடான இந்தியா- இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் வழங்கிய மத்தியஸ்த நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவியிருந்தன.

1991ம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் இந்தியா, இலங்கை விவகாரத்தை முற்றுமுழுதாகவே கைகழுவி விட்டிருந்தது.

இதன் பின்னரே ஏறத்தாழ எட்டு வருடங்களின் பின்னர் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் என்ற ரீதியில் நோர்வே இலங்கை இனப்பிரச்சனையைக் கையாள முன்வந்திருந்தது.

அரசியல், சமூக, பொருளாதார, ரீதியான அம்சங்களை நோர்வே, இலங்கை, இந்தியா ஆகியவற்றுக்கிடையே ஒப்பிட்டுப் பார்த்தால் ஏணி வைத்தும் எட்டப்பட முடியாத உயரத்தில் நோர்வே இருப்பதைக் காணமுடியும்.

இலங்கை இனப்பிரச்சனையைத் தனது சொந்த லாபங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நோர்வேயிடம் இல்லை.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடுவதற்கு முன்னரே நோர்வே ஆண்டுதோறும் பல தசாப்த காலமாக இலங்கைக்குப் பல கோடிக் கணக்கான உதவிகளை வாரிவழங்கி வருகின்றது.

நோர்வேயின் இராஜதந்திரிகள், மத்தியஸ்தர்கள் ஆகியோர் விலைக்கு வாங்கப்பட முடியாதவர்களாக இருக்கின்றனர். அத்துடன் எவ்விதத்திலும் வல்லரசுக் கெடுபிடிகளுக்குள்ளாகாத விதத்திலும் நோர்வே இருந்து வருகின்றது.

சுருங்கக்கூறின் இலங்கையில் ஒரு நிரந்தரமான, நியாயமான அரசியல் தீர்வை எட்ட வேண்டுமென்பதிலேயே நோர்வே உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்திவருகிறது.

ஆனால் இலங்கையின் ஆட்சியாளரது நோக்கு வித்தியாசமானதாகவே இருக்கின்றது. இலங்கை இனப்பிரச்சனை குறித்த சமரச முயற்சிகளின் தரத்தை உயர்த்த வேண்டுமெனவும், எனவே திரு.சொல்ஹெய்மும் அவரது பணியிலிருந்து மாற்றப்படவேண்டுமென்று இலங்கை அரச தரப்பு எதிர்பார்க்கின்றது.

சமரச முயற்சியில் எத்தகைய தரத்தைப்பேண இலங்கை அரச தரப்பு எத்தனிக்கின்றதென்பதே புரியாத தொன்றாக இருக்கின்றது.

இனப்பிரச்சனை குறித்த அடிப்படை அம்சங்களிலேயே ஒரு புரிந்துணர்வுக்கு வரமுடியாது அரச தரப்பு இருந்து வருகின்றது.

அரச தரப்பு இராணுவத்தையே பெரிதும் நம்பியிருக்கிறது. ஆனால் அதன் இராணுவ பலத்தின் தரம் எத்தகையதென்பதை முழு உலகுமே நன்கறியும்.

இனப்பிரச்சனை விடயத்தில் மட்டுமல்ல. இலங்கையின் எந்தவொரு உள்நாட்டு விவகாரத்திலும் நேர்த்தியான, சுத்தமான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க முடியாது சந்திரிகா அரசு குழம்பிப்போய் நிற்கின்றது.

இந்நிலையில் இனப்பிரச்சனை விடயத்தைக் கையாளுவதில் அரச தரப்பு எதிர்பார்க்கும் 'தரமுயர்வு' கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

திரு.எரிக்சொல்ஹெய்ம் சமரச நடவடிக்கைகளிலிருந்து ஓரங்கட்டப்படுவாரேயானால், புதியவர்கள் மீளவும் அனைத்தையும் புதிதாக ஆரம்பிக்கவேண்டியதாகவே இருக்கும்.

மத்தியஸ்த்த நடவடிக்கைகளில் பரஸ்பர விசுவாசம் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்புக்குமிடையே ஒரு நடுவர் என்ற வகையில் இருதரப்பினரதும் நிலைப்பாடுகளை திரு.எரிக் சொல்ஹெய்ம் நன்கறிந்தே வைத்துள்ளார்.

சர்வதேச சமூகம்கூட திரு.எரிக் சொல்ஹெய்மின் சமரச நடவடிக்கைகள் மீது மிகுந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கொந்தளிக்கும் ஆழ்கடலிலிருந்து உயிர் தப்பக்கிடைத்த ஒரு தெப்பமாகவே திரு.எரிக்சொல்ஹெய்ம் விளங்குகிறார்.

அவரை ஓரங்கட்டுவதும், நிந்திப்பதும், 'ஓயாத அலைகளை' மீளவும் மேலோங்கச் செய்வதாக இருக்குமென்றே கருதமுடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**தவளையும்** தன் வாயால் கெடுமெண்ணுவாங்கள் பாருங்கோ. அதுபோல தேவையில்லாமல் வாய் குடுக்கப்போய் நல்லா வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார் வினையறுக்கப்போன ஒரு மூர்த்தியார். என்ன விஷயமெண்டு கேப்பியள். குடாநாட்டு அமைச்சர் கூட்டிக் கொணந்த யாழ். மீனவர்கள் மீன்பிடி அமைச்சரைச் சந்திச்ச கூட்டத்தில யாழ். எம்பிமார் கலந்து கொண்டவையல்லே. அதில போய் மீனவற்ற பிரச்சனைகளைத் தான்தான் ஏதோ பிச்சுப்பிடுங்கிறமாதிரி வாய்விரம் காட்ட வெளிக்கிட்டிருக்கிறார் அவர். கெம்பி எழும்பிட்டாங்கள் மீனவர்கள். "உந்தாளக் கதைக்க வேண்டாமெண்டு சொல்லுங்கோய்யா. எங்களுக்கு கிடைக்க இருந்த வீட்டுத்திட்டத்தையும் நிப்பாட்ட வெளிக்கிட்டவர் உவர். மீனவ சமாசத்துக்கு ஒருலட்சம் ஒதுக்கிறதாச் சொல்லி ஏமாத்தினவர். இப்ப வந்திட்டார் பேச..." எண்டு அவ்வளவு பேரும் கொதிச்செழும்பினத அமைச்சர் தான் ஒருமாதிரி சமாளிச்சு நிப்பாட்ட வேண்டியதாய்ப் போச்சு. வெலவெலத்துப் போன ஆசாமி அதோட கப்சிப். விநாயகா, ஏனப்பா உனக்கிந்த விஷப்பரீட்சை!

**கொழும்பு வந்த யாழ்.** மீனவர்கள் சுத்திப்பாக்க வெளிக்கிட்டு பேருவளை போச்சினமாம். பேருவளையில என்ன பார்தியலெண்டு கேட்டியலெண்டால் ஆக்களுக்கு கெட்ட கோபந்தான் பொத்துக்கொண்டு வருது. என்ன தெரியுமோ? அங்க தாங்கள் கப்பல் பாத்திச்சினமாம். கப்பல் கோபிக்க என்ன இருக்கெண்டு கேப்பியள். அது ஆற்ற கப்பல் தெரியுமோ? எங்கட யாழ். எம்.பி ஒருத்தற்றையாம். "நாங்கள் இங்கு நாளாந்த வாழ்க்கைக்கு அல்லாடுறம். அவர் ஏதோ எங்களுக்காகக் குரல் குடுக்கிறதா நடிச்சுக் கொண்டு இங்க 70 லட்சத்துக்கு கப்பல் வாங்கிவிட்டு பிஸ்னஸ் பண்ணுறாரோ! உவையப்பற்றி ஊரிலபோய்ச் சொல்லுற"மெண்டு கறுவிக்கொண்டு போகுதாம் சனம். ஓ மகேஸ்வரா! மக்களுக்கும் கண்ணிருக்குதடா!

**தொலைக் காட்சிக்கு** ஏன் தொல்லைக் காட்சியெண்டு பெயர் வைக்காமல் விட்டாங்களெண்டு கேக்கத் தோணுதுங்கோ. போன ஞாயிறு ரூபவாஹினி தமிழ் நியூஸ் பாத்திருந்தால் தெரிஞ்சிருக்கும். விட்டுப்போன ஒரு செய்திய ஒட்டறதுக்காக ஒரே நியூஸை ரெண்டுதரம் வாசிச்சாங்கள். சரி, விட்ட செய்தியில ஏதும் பெரிசா இருக்குதோவெண்டு பாத்தால் ஒண்டுமில்லை. புலிகளின்ட தடையை நீக்கிறதுபற்றி எங்கட கிழக்குத் தமிழ் பிரதியமைச்சரிட்ட ஒரு பேட்டித் துண்டு. அதில அவர் அரசாங்கம் தடையை எடுக்க வேணுமா, இல்லை எடுக்கக் கூடாதா எண்டு ரெண்டில ஒண்டும் சொல்லாமல் ரெண்டும் கெட்டான் தனமாப் பேசினதைத்தான் தேடிப் பிடிச்சுக் காட்டினாங்கள். தேவையா இது?

**மனுஷன் குரங்கிலிருந்து** பிறந்தானெண்டாலும் இப்ப மனுஷனப்பாத்து குரங்கெண்டு சொல்றது நாகரிகமில்லதானே! டில்லியில மனிதக்குரங்கு பிரச்சனை பெரிசா இருக்கைக்கே இங்கயும் ஒரு குரங்கு பிரச்சனையை கிளப்பி விட்டிருக்கினம். நம்மட ஜயசூரியா இருக்காரல்லே, அவரப் பார்த்து அவுஸ்திரேலிய அணியின்ர மக்கிராத் குரங்கென்று சொன்ன கதைய ரொஷான் மகாநாம புத்தகம் எழுதி பூதாகரமாக்கிப் போட்டார். முதல்ல இருந்த மனைவிய டைவர்ஸ் பண்ணிட்டு புதுசாதான் ரெண்டாவது இனிங்ச ஆரம்பிச்சார் ஜயசூரியா. உந்தக் குரங்குக் கதையால மனமுடஞ்சி போயிருக்கார். உதுல பாருங்கோ உது பத்தின சர்ச்சை கிளப்பின புத்தகத்த அவுஸ்ரேலியாவுல இருந்தபடி மகாநாம எழுதியிருக்கார். அந்த நாட்டுக் காரர் சொன்னதை திட்டி எழுதிப் போட்டு அங்கயே உயிருடனும் இருக்கிறார்; இங்கென்றால் இன்நேரம்...!

உண்மைத் தொடர் 11

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**மி**ருகக்காட்சிசாலைகளில் உள்ள மிருகங்களுக்கு கொடுக்க உணவில்லை. அதனால் இரவு வேளைகளில் அவை பயங்கர மரண ஓலம் எழுப்புவதை மியூனிச் உட்பட முக்கிய நகரங்களில் கேட்கக் கூடியதாக இருந்தது.

இரவில் நகரங்கள் இருட்டாகவே காணப்பட்டன. அவற்றுக்கு ஒளியூட்டும் வசதி அரசாங்கத்துக்கு இருக்கவில்லை. இந்த நிலையில் இரவு வேளையில் நகரங்களில் நடந்து செல்வது ஒரு திகில் நிறைந்த அனுபவமாகவே இருந்தது.

ஜெர்மனி எவ்வளவு இருள் நிறைந்த காலத்தை கடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு நாட்டில் ஆங்காங்கே நிகழும் குற்றச் செயல்களே போதிய எடுத்துக் காட்டாக அமைந்தன.

திருடர்களினதும் கொள்ளையர்களினதும் கைவரிசை பெருவாரியாக அதிகரித்திருந்தது. பல வெளி நாட்டுக் கப்பல்கள் கடற் கொள்ளையர்களினால் அபகரிக்கப்பட்டது. வங்கி நடைமுறை மோசமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அரசாங்க வங்கிகளில் வைப்பிலிட்ட தமது சேமிப்புப் பணத்தை திருப்பிப் பெற முடியாத மக்கள் வங்கிக் கட்டடங்களை அடித்து நொருக்கினார்கள். முதலாம் உலகப் போருக்கு முன்னர் பலர் பெருந்தொகைப் பணத்தை அரசாங்க வங்கிகளில் சேமித்திருந்தார்கள். யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து ஜெர்மன் பல நாடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டி ஏற்பட்டது. இதனால் வங்கிகளில் இருந்த பொது மக்களின் சேமிப்புக்கள் முடக்கப் பட்டன.

தபால் துறையும் அநேகமாக வீழ்ச்சியின் விளிம்பைத் தொட்டிருந்தது. கடிதப் போக்கு வரத்துகள் சீராக நடைபெறவில்லை.

அரசாங்கத்துக்கு முத்திரை விற்பனையால் கிடைக்கும் வருமானத்தைவிட முத்திரைகளை அச்சிடுவதற்கான செலவு அதிகமென கணக்கு காண்பிக்கப்பட்டது. பொதுச் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன. மக்கள் செய்வதறியாது தவித்தார்கள்.

ஒரு சர்வாதிகாரியின் தோற்றத்துக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கும் பலவீனமான சமுக அமைப்பாக ஜெர்மனி மாறிக் கொண்டிருந்தது.

✲☆✲

**ப**கலில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஹிட்லர் இரவை அநேகமாக கெதரினுடன்தான் கழிப்பான். அவனது அத்தனை அலுப்புக்கும் உடல் வருத்தத்துக்கும் அவளிடம் மருந்திருக்கிறது!

சோர்வாகச் சாய்ந்திருந்த ஹிட்லரை தொந்தரவு செய்யாமலேயே அவனது ஆடைகளை ஒவ்வொன்றாக களைந்து கொண்டிருந்தாள் கெதரின்.

பக்கத்திலிருந்த 'வைன்' போத் தலை அவளே திறந்து கொடுத்தாள். கொஞ்சம் கொஞ்சமாக மொத்தத்தையும் குடித்தவன், போதை ஏறும் முன்னரே அவளை இறுக்கி அணைத்து முத்த மிட்டான். அந்த அணைப்பில் பரவிய சூடு அவளது உடம்புக்கு இதமாக இருந்தது.

மிகக்குறைந்த ஆடைகள் மட்டுமே இருந்த அவளது உடம்பில் மேடு பள்ளங்கள் அத்தனையிலும் ஹிட்லரின் கரங்கள் ஒடி விளையாடின. அவனது உதடுகள் செய்த சில்மிஷத்தில் அவள் மூர்ச்சையற்றவள் போல கட்டிலில் விழுந்து கிடந்தாள்.

குடித்திருந்த 'வைன்' வேலை செய்யத் தொடங்கியது. 'எடுத்துக் கொள்' என்பது போல கைகளை விரித்து மல்லாந்து கிடந்த கெதரினை ஒவ்வொரு அங்குலமாக ஆக்கிரமிக்கத் தொடங்கினான் ஹிட்லர்.

✪★✪

**நா**டு மிகுந்த இக்கட்டானதொரு சூழ்நிலையில் இருந்த சமயம் 1923ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் மேற்கு ஜெர்மனியின் முக்கியமான வர்த்தக நகரம் ஃபிரான்ஸின் ஆதிக்கத்துக்கு உள்ளானது.

ஏராளமான கைத்தொழில் நிலை யங்கள் காணப்பட்ட மிகவும் வளம் நிறைந்த மாவட்டம் ஒன்றை ஃபிரான்ஸ் படைகள் திடீரென தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. நாட்டுக்குள் இருந்த கொந்தளிப்பு மேலும் பல மடங்கு அதிகரித்தது. பெர்லின் அரசாங்கம் அவசரகால நிலமையை பிரகடனம் செய்து நாடு போர் ஆயத்தத்தில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தளபதி சகல அதிகாரங்களையும் கொண்ட இடைக்கால நிருவாகியாக நியமிக்கப்பட்டார். உள்ளூர் பாராளுமன்றமான பவாரியாவின் அதிகாரங்களும் உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாரோன் வொன்காரல் என்ற அதிகாரி பவாரியாவின் நிருவாக அலகுக் குள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அதிகாரமிக்க பொலிஸ் குழுவுக்கு தலைமை தாங்கினார்.

இவர் தன்னை ஒரு சர்வாதி காரியாகவே நினைத்து செயற்படத் தொடங்கினார். நாட்டில் உள்ள குழப்பங்களின் பின்னணியில் மார்க்சிய வாதிகளே இருப்பதாக குற்றஞ் சாட்டினார். அனைத்து பவாரியாக்களினதும் தலை மையகம் மியுனிச் நகரிலேயே அமைந்திருந்தது. பெர்லின் நாட்டின் தலை நகரமாக விளங்கியபோதும், நிருவாக செயற்பாடுகள் மியூனிச்சை மையமாக வைத்தே இயங்கின.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையும், ஃபிரான்ஸின் ஆக்கிரமிப்பினால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதில் படையினரிடையே இருக்கும் குழப்ப நிலைக்கும் மத்தியில் பவாரியாக்களின் பிரதம நிருவாகி பாரோன் வொன்காரரை கைது செய்து இராணுவ சதிப்புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சியை கைப்பற்றுவதென்று ஹிட்லர் முடிவுசெய்தான்.

இந்த திட்டத்தை செயற்படுத்த பவாரியாவின் முக்கிய இராணுவத் தளபதியான லுன்டன்டோப் என்பவரின் ஆதரவும் ஹிட்லருக்குக் கிடைத்தது.

இதுவரை காலமும் தனது மனதில் மறைத்து வைத்திருந்த சதித்திட்டத்தை செயற்படுத்த நாள் குறித்தான் ஹிட்லர்.

1923ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி இதற்கான நல்ல நாளாக அவனால் தெரிவு செய்யப்பட்டது.

பெர்லினில் முடியாட்சி கவிழ்க்கப்பட்ட 5ஆவது வருட நினைவுநாளாக நவம்பர் 8ம் திகதி கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் மியூனிச் நகரில் உள்ள 'சிடிசன் பியர் ஹால்' என்ற மாபெரும் மண்டபத்தில் தளபதி வென்காரல் உரையாற்றுவார். இந்த வைபவத்தின் போது, இவரை கைது செய்வதாகவே ஹிட்லர் திட்டமிட்டிருந்தான்.

குறிப்பிட்ட நாள் உதயமானது. அதிகாலையிலிருந்தே அந்த மண்டபத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் ஹிட்லரின் எஸ்.ஏ.படையணியின் உளவாளிகள் தீவிரமாக நோட்டமிட்டனர்.

தனது படையணியுடன் மண்டபத்திலிருந்து சிறிது தூரத்தில் தயாராக இருந்த ஹிட்லருக்கு தளபதி காரல் கூட்டத்துக்கு வருகை தந்த செய்தி அங்கிருந்த உளவாளிகளால் உடனடியாக அறிவிக்கப்பட்டது.

கறுப்பு நிறத்தில் காற்சட்டையும், வெள்ளை நிற ஷேர்ட்டும்அணிந்து கைத்துப்பாக்கியுடன் தனது மெய்பாதுகாவலர்கள் சகிதம்ஹிட்லர் மண்டபத்துக்குள் நுழைவதற்கும் தளபதி காரல் உரையாற்ற எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது.

## ஷானு

வேகமாக உள்ளே நுழைந்த அவன் "தேசிய விடுதலைப்புரட்சி ஆரம்பமாகி விட்டது" என்று கூறிக்கொண்டே தனது கைத்துப்பாக்கியினால் மேல் நோக்கிச் சுட்டான். கூட்டம் கலைந்தோடியது. மக்கள் நடப்பதென்ன வென்று தெரியாமல் சிதைந்தோடினார்கள். காரலின் படைகள் உஷாரடைவதற்கு முன்னர் அவர் ஹிட்லரின் மெய்பாதுகாவலர்களினால் கைது செய்யப்பட்டார். அவருடன் இருந்த மேலும் சிலரும் கைதுசெய்யப்பட்டனர்..

இராணுவத்தளபதி லுன்டன்டோப் ஹிட்லருக்கு பக்கபலமாக இருந்து ஆதரவு வழங்கினார்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹிட்லரின் உத்தரவின் பேரின் அருகில் இருந்த இருட்டறை ஒன்றில் சிறை வைக்கப்பட்டனர்.

ஆனால் பெர்லினில் உள்ள ஜெர்மனியின் நிறைவேற்று அதிகாரியும் அவரது படைத்தளபதிகளும் மியுனிச்சில் நடப்பதை உடனடியாக அறிந்து கொண்டார்கள்.

காரல், ஹிட்லரின் சதியால் கைது செய்யப்பட்ட செய்தி பெர்லினுக்கு உடனடியாக எட்டியிருந்தது.

மாற்று நடவடிக்கைக்கான திட்டம் அங்கு தயாரானது. இன்னும் சில மணி நேரத்தில் நாட்டின் தலைவராக வரமுடியும் என்ற கனவுடன் ஹிட்லர் காத்திருந்தான்.


மியூனிச் நகர மத்திய பகுதியை நோக்கி பாரிய ஊர்வலம் ஒன்றை மேற்கொள்வதே ஹிட்லரின் அடுத்த திட்டம். அவனது ஆதரவாளர்கள் சகிதம் அந்த ஊர்வலத்தை நடத்திச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதற்கிடையில் பெர்லினில் இருந்து ஏதேனும் செய்தி வருகிறதா என்பதை அவன் எதிர்பார்த்திருந்தான். காரல் கைது செய்யப்பட்ட அந்த மண்டபத்திலேயே அவன் காத்திருந்தான்.

**வருவான்...**



## போதைப் பொருட்களின் பிடியில்
# மும்பை நட்சத்திரங்கள்-பிரபலங்கள்



'**கொ**க்கெய்ன்' என்ற போதைப் பொருளைக் கடத்திய குற்றச்சாட்டின் பெயரில் பிரபல இந்தி நடிகர் ஃபர்தீன் கான் கைது செய்யப்பட்டுள்ளார்.

'பிரேம் அஹன்', 'ஜங்கிள்', 'பியார் துனே கியா கியா' ஆகிய இந்திப் படங்களில் நடித்திருக்கும் ஃபர்தீன் கான் பிரபல நடிகர் 'குர்பானி' புகழ் ஃபெரோஸ்கானின் மகன் ஆவார்.

பிடி பட்ட ஃபர்தீன்கான், பாதி நடித்திருக்கும் இந்திப் படமொன்றை முடித்துக் கொடுப்பதற்காக இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் இந்த 'கொக்கெய்ன்' போதைப் பொருள் ஒரு கிராம் சுமார் 4 ஆயிரம் இந்திய ரூபாய்களுக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஃபர்தீன் கானிடம் இருந்து நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம், 'கொக்கெய்ன்' வாடிக்கையாளர்களில் 30 பேர் மும்பை திரையுலகப் பெரும்புள்ளிகள்.

இவர்களைவிட முன்னாள் உலக அழகிகள், பிரபல மொடல் அழகிகள் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இத்தனை பேருடன் பிரபல இந்திய பொப் பாடகர், மும்பை அரசியல்வாதி ஒருவரின் மகள் ஆகிய பிரபலங்களுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

## நாய்களுக்கு நடத்தப்பட்ட சுயம்வரம்

**மு**ற்காலத்தில் அரசகுமாரியை மணம் முடிக்க நடத்தப்படும் சுயம்வரத்தில் அரசர்கள், அரசகுமாரர்கள் கலந்து கொள்வார்கள். அண்மையில் தமது செல்லப்பிராணிகளுக்கு ஜோடி சேர்க்க நவீன சுயம்வரத்தை நடத்தினார்கள் சில செல்வந்தர்கள்.

நாய்களுக்காக நடத்தப்பட்ட இந்த நவீன சுயம்வரம் கொலம்பியாவில் பக்கோடா நகரில் நடைபெற்றது. உலகின் பல நாடுகளில் இருந்தும் பல வசதி படைத்தவர்கள் தமது செல்லப்பிராணிகளை அலங்கரித்து அழைத்து வந்திருந்தார்கள்.

தமது செல்லப்பிராணிகளுக்கு ஏற்ற ஜோடிகளை எஜமானர்கள் தேர்ந்தெடுக்க, இந்தச் சுயம்வரத்தை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்கள் செல்லப்பிராணிகளின் திருமணத்தை ஜாம் ஜாமென்று நடத்தி வைத்தனர்.

## ஜாக்சன் தங்கை பாடலுக்குத் தடை

**பி**ரபல பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜாக்சனின் தங்கையான ஜெனட் ஜாக்சனின் பொப் பாடல்களுக்கு சிங்கப்பூரில் தடை விதிக்கப்பட்டுள்ளது.



மைக்கல் ஜாக்சனைப் போலவே ஜெனட்டும் ஒரு பிரபல பொப்பாடகி. இவர் அண்மையில் பொப் பாடல்கள் அடங்கிய இசை அல்பத்தை வெளியிட்டிருந்தார். 'ஒல் ஃபோர் யூ' என்ற இந்த அல்பத்திற்கு சிங்கப்பூரில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த அல்பத்தில் உள்ள பாடல் ஒன்றில், தனி ஒரு பெண்ணுக்கு நேரும் பாலியல் அனுபவங்கள் பிரதானமாக வைத்துப் பாடப்பட்டுள்ளன. இந்த ஆபாசமான பாடல் வரிகள் தான் தடைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

37 வயதான ஜெனட் ஜாக்சன் இரண்டு தடவைகள் திருமணம்செய்து விவாகரத்து ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நம் நாட்டிலும் 'புகை' பெண்கள்



**வெ**ளிநாட்டு பெண்களுக்கு மட்டுமே உரித்தென்றிருந்த சிகரட் பிடிக்கும் பழக்கம் தற்போது நம்நாட்டுப் பெண்களிடமும் வேகமாக தொற்றிவருகிறது.

இந்த புகை மோகத்தில் தற்போது நமது இளசுகள் அதிக ஆர்வம் காட்டுகின்றன. நகர்புறங்களில் நண்பர்களுடன் சேரும் போது பொழுதுபோக்காக ஆரம்பிக்கும் இந்தப் பழக்கம் போகப் போக ஆளை அடிமையாக்கும் அளவுக்கு சென்று விடுகின்றது.

வெளிநாடுகளில் பெண்களை மையமாக வைத்து புகைத்தல் விளம்பரங்கள் செய்யப்படுவது பழைய கதை. இப்போது இந்த டெக்னிக் இங்கும் கையாள எத்தனிக்கப்படுகின்றது.

புகைத்தலினால் ஏற்படும் நோய்களால் நம்நாட்டு அம்மணிகள் பலர் பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவ தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இவை தவிர புகையானது மாதவிலக்கு பிரச்சனைகளையும் உண்டு பண்ணி விடுகிறது. 'அந்த' நாட்களில் அளவுக்கு அதிகமான வலி ஏற்படுதல், சராசரி அளவைவிட கூடுதலான ரத்தப்போக்கு, முறையற்ற மாதவிலக்கு போன்றவை உருவாக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

அடிக்கடி வாந்தி ஏற்படுதல், மூட்டு வலி, சிறு நீர் தொந்தரவு போன்றவையும் ஏற்படும்.

30 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக புகை விடும் பெண்கள் மார்பக புற்று நோயில் மிக எளிதில் சிக்கி விடுகிறார்கள். புகையானது ஆண்களைவிட பெண்களைத்தான் கடுமையாக தாக்குகிறது. அதுவும் 'புகை. கர்ப்பிணிகள் பெரும்பாலும் எடை குறைவான குழந்தைகளைத் தான் பெறுகிறார்கள். தாய் புகை பிடிப்பதால் குழந்தையின் மூளை சேதமாகி விடுகிறது. அது வாழ்நாள் முழுவதும் நோயில் சிக்கிக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.

## சேலை கட்டும் பமீலா




**சே**லை கட்டும் இலங்கை, இந்தியப் பெண்கள் மேலை நாட்டவர்களைப் பார்த்து அவர்களது நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றிக் கொண்டிருந்த காலம் போய், இப்போது மேலை நாட்டவர்கள் இவர்களைப் பார்த்து ஆடை அலங்காரம் பண்ணி வருகிறார்கள்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த இங்கிலாந்தில் மறைந்த இளவரசி டயானா, அமெரிக்க முன்னாள் முதல் பெண்மணி ஹிலாரி கிளின்ரன்,' பிரபல ஹொலிவூட் நடிகை டெமி மூர் போன்றவர்கள் இந்தியப் பெண்களைப் போல் சேலை அணிந்து கொண்டார்கள்.

இப்போது இந்தச் சேலை மோகம் 'பே வோட்ச்' தொலைக்காட்சித் தொடர் புகழ் நடிகையும் கவர்ச்சித் தாரகையுமான பமீலா அண்டர்சன் லீயை ஆட்கொண்டுள்ளது.

இந்தியாவின் பிரபல ஆடை வடிவமைப்பாளர் ரோஹித் பாலிடம் தனக்கு புத்தம் புதிய சேலைகளை வடிவமைத்துத் தரும்படி கூறியிருக்கிறார் பமீலா.

## மிகப்பெரிய டைனோசர்

பண்டைக்காலத்தில் நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பிலிருந்த எகிப்தில் இன்று உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம் காணப்படுகிறது. இந்தப் பாலைவனம் கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பசுஞ்சோலை வனமாகத் திகழ்ந் திருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் கிடைத்துள்ளன. இங்குள்ள கானல் நீர் பகுதியொன்றில் ஆராய்ச்சியாளர்கள், புதை பொருள் ஆய்வில் ஈடுபட்டிருந்த போது இறுகிப்போன மணலில் பதிந்திருந்த படிமம் ஒன்றைக் கண்டு திகைத்துப் போனார்கள். இந்தப் படிமம் ஓரளவு சிதைவடைந்திருந்தது. மிக நுட்பமான ஆராய்ச்சியின் பின்னர் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மிகப்பெரிய டைனோசர் ஒன்றின் எச்சம் என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதுவரை உலகில் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர்களில் அளவில் இது இரண்டாவது பெரியது எனக் கூறப்படுகிறது.

இப்படம் உண்மையான டைனோசரின் படமல்ல. எகிப்தில் கிடைத்த படிம எச்சங்களை வைத்து உண்மையான உருவம் இவ்வாறு தான் இருந்திருக்க வேண்டுமென்று அமெரிக்க பென்சில்வேனிய பல்கலைக்கழக மாணவரான ஜோசுவா ஸ்மித் என்பவரால் உருவாக்கப்பட்ட அமைப்பு இதுவாகும்.



## சுருங்கி விரியும் உள்ளாடை

காட்சியறைப் பொம்மையும் கட்டிளங்குமரியும் அணிந்திருக்கும் இந்த உள்ளாடைக்கு எந்த உள்ளாடையிலும் இல்லாத விசேட அம்சம் ஒன்று உள்ளது.

சிந்தட்டிக் இழைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த உள்ளாடையை உடலில் வைத்து அழுத்திக் கொண்டாலே போதும், தேவைக்கேற்றபடி சுருங்கி விரியும் தன்மை கொண்டது.

ஜப்பான் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ள இந்தப் புதிய உள்ளாடை, நம் நாட்டிற்கு வர எவ்வளவு காலம் பிடிக்கும் என்று தெரியவில்லை.



தகவல் பெட்டி




## அதிக வயதுப் பாட்டி

இரண்டு கன்னங்களிலும் 'இச்' வாங்கும் இந்தப் பாட்டியின் பெயர் மேரி பிரிமாண்ட். அண்மையில் தனது பிறந்த நாளை முதியோர் இல்லமொன்றில் கொண்டாடியபோது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இந்தப் பாட்டிக்கு ஒரு சிறப்புண்டு. ஃபிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அதிக வயதுக்காரர் என்ற சிறப்புத்தான் அது.

115 வயதான இந்தப் பாட்டிக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. அதனாலென்ன, இந்தப் பாட்டி வசிக்கும் முதியோர் இல்லத்தில் உள்ள தாதிகள் அந்தக் குறையைப் போக்கி விட்டனர். முத்த மழையால் பாட்டியைத் திணறடித்து விட்டனர்.



## சபாஷ் சரியான சவால்!

அமெரிக்காவின் அலாஸ்காவில் ஆரம்பப் பாடசாலை ஒன்று உள்ளது. அப்பாடசாலையின் அதிபர், பாடசாலை மாண மாணவிகளுக்குப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் வர வேண்டும் என்பதற்காக ஒரு சவால் விட்டார்.

“பாடசாலை நூலகத்தில் இருக்கும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை எல்லாம் 6 மாத காலத்திற்குள் மாணவ மாணவியர் படித்து முடித்து விட வேண்டும். படித்து முடித்து விட்டால் “நான் ஒரு பன்றிக்கு முத்தம் கொடுக்கத் தயார்!” என்று சவால் விட்டார் அதிபர்.

கடைசியில் யார் சவாலில் வென்றார்கள் என்பதைப் படத்தைப் பார்த்துப் புரிந்திருப்பீர்கள்.

# காதோடு சொல்லுகிறோம்

மூன்றெழுத்தில் சொந்தமாகப் படமெடுத்து இயக்கி நடிக்கும் 'ஆக்ஷன்' நடிகர், படத்தில் எதற்காக மூன்று நாயகிகளை நடிக்க வைத்தாரோ தெரியவில்லை. ஆனால் அது அவருக்குப் பெரும் சாதகமாக அமைந்துவிட்டதாம். மூன்று நாயகிகளும் எங்கே தமது காட்சிகளைக் குறைத்து மற்றவர்களை முன்னிலைப்படுத்தி விடுவாரோ என்ற பயத்தில் ஆளாளுக்கு போட்டி போட்டுக்கொண்டு நடிகருடன் அனுசரணையாக நடந்து கொள்கிறார்களாம்.

'அசத்தும்' படத்தில் 'வைகைப்புயல்' நகைச்சுவை நடிகரோடு ஜோடி சேர்ந்த கவர்ச்சி நடிகை அப்படத்தின் படப்பிடிப்பின் போது நடிகரிடம் படாதபாடு பட்டாராம். படப்பிடிப்பு முடிந்ததும் நகைச்சுவை நடிகரிடம் போய்விட வேண்டுமாம். ஒரு தடவை போக மறுத்ததற்கு, நடிகையின் அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றி உற்சாகபானத்தை ஊற்றிக்கொண்டு, வாய்கூசும் அளவுக்குப் பேசி தோசடித்தாராம் நடிகர்.

பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் தயாராகி விருக்கும் 'ஆளவந்த' படத்தில் 'நாயகனின்' வேண்டு கோளுக்கிணங்க படு கவர்ச்சியாக நடித்திருக்கும் 'தேபான' வரவான இந்தி நடிகை அடுத்து சொந் தப்படமொன்றைத் தயாரிக்கப்போகிறாராம். இந்தியில் தயாராகும் இப்படத்தில் தனது தம்பியை கதாநாயகனாக அறிமுகப்படுத்தும் நடிகை, தனக்காக கௌரவ வேடத்தில் இப்படத் தில் தலை காட்டும்படி 'சூப்பர் நடிகரிடம்' கோரிக்கை விடுத்துள்ளாராம்.

நடன நடிகையை மணந்திருக்கும் நடனப்புயல் நடி கரின் கடைக்கண் பார்வை 'கண்ணழகி' நடிகைமீது விழுந்து இப்போது இரகசியக் குடித்தனம் நடத்துமளவுக்குப் போய்விட்டது. இருப்பினும் 'முதல் மனைவியை விவாகரத்துச் செய்தால்தான் கழுத்தை நீட்டுவேன்' என்று கண்ணழகி நடிகை கண்டிப்பாகக் கூறிவிட்டதால், முதல் மனைவியை விவாகரத்துச் செய்யும் விவகாரத்தில் ஈடுபட்டு வருகிறாராம் நடனப்புயல்.

## சத்யராஜ்–ரம்பா நடிக்கும் 'மிலிட்டரி'

சின்னத்திரையில் பல தொடர்களைத் தயாரித்து வரும் சினி டைம்ஸ் என்டர்டெயின்மெண்ட் என்ற தயாரிப்பு நிறுவனம் பெரியதிரையில் முதன் முறையாகத் தயாரிக்கும் படம் 'மிலிட்டரி'

இப்படத்தில் சத்யராஜ்-ரம்பா ஜோடியாக நடிக்கிறார்கள். இவர்களுடன் லிவிங்ஸ்டன், வடிவேல், மணிவண்ணன், விஜுச் சக்கரவர்த்தி, கசன்கான், வையாபுரி, மயில்சாமி, சாப்ளின் பாலு, பிரமிட் நடராஜன் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

டி.சங்கர் ஒளிப்பதிவு செய்ய, தேவா இசை யமைக்கிறார். இப்படத்தின் கதை-திரைக்கதை அமைத்து இயக்குகிறார் சாய்கரேஷ். இவர் சத்யராஜ்-ரம்பா நடித்து வெளியாகவுள்ள 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படத்தை இயக்கியவர்.

## ராஜீவ்மேனன் இயக்கத்தில் விஜய்,கும்ப்ளே

பல விளம்பரப்படங்களை இயக்கியிருக்கும் ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனன் 'மின்சாரக் கனவு', 'கண்டுகொண்டேன் கண்டு கொண் டேன்' ஆகிய படங்கள் இயக்கியுள்ளார். இவர் அடுத்து இயக்கும் படத்தில் பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் அனில்கும்ப்ளே நடிக்கவுள்ளார். இதற்கு முன்பதாக அண் மையில் விஜய் நடிக்க குளிர் பான விளம்பரப்படம் ஒன்றையும் இயக்கியிருந் தார் மேனன்.

## ரேகாவின் முயற்சி

பாரதிராஜாவின் 'கடலோரக் கவிதைகள்' படத்தில் அறிமுகமான ரேகா, 'புன்னகை மன்னன்' படத்தில் இடம் பெற்ற முத்தக்காட்சி மூலம் பரபரப்பாகப் பேசப்பட்டார். பெரிய திரையில் வாய்ப்புக்கள் இல்லாததை அடுத்து இப்போது சின்னத்திரையில் நடித்து வருகிறார் இவர்.

மறுபடி பெரியதிரையில் தலை காட்டும் முயற்சியில் இறங்கியிருக்கும் ரேகா, தனக்கு நெருக்கமான பட அதிபர்களிடம் சென்று வாய்ப்புக் கேட்டு வருகிறார்.

## வருகிறார் 'வடுகப்பட்டி மாப்பிள்ளை'

விவேக், வடிவேல், செந்தில், விசு, அம்சவிர்தன், ரேஷ்மா, அனுஷா, சமித்ரா, கோவை சரளா, பாண்டு, போண்டா மணி உட்பட பலர் நடித்துள்ள 'வடுகபட்டி மாப்பிள்ளை' படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் முடிவடைந்துள்ளன.

சிற்பி இசையில் பழனிபாரதி பாடல்களை எழுதியுள்ளார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கிறார் வி.சி.குகநாதன்.

இம்மாத இறுதியில் வெண் திரைக்கு வருகிறார் 'வடுகப்பட்டி மாப் பிள்ளை'.



கார்த்திக்-மாளவிகா படம்: லவ்லி

சி I னி I வி I சி I ட்

மா…

…பட… தே… படத்தில் … தும் செய்த… ளரின் தலை… காவின் தங்கை… 'லவ்லி' பட அழ… மிக்க பண்ணிய கோர…

## மும்தாஜ் …

நடிகைகள் முன்னணியில் இ… கும்போது அவர்களது பெயர்களில் ப… கள் வருவதுண்டு. அந்த வரிசையில் … போது மும்தாஜ் பெயரில் புதிய படமொன்… தயாராகிறது.

இப்படத்தில் இரட்டை வேடங்களில் நடிக்கிற…

## முகப்பில்

ரஜினி

கௌசல்யா



கமல்-ஸோனியா படம்: …

# மினி சினி

* பிரபு கதாநாயகனாக நடிக் கும் 'சூப்பர் குடும்பம்' படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்து வரும் பிரத்யுஷா, பரமேஷ்வர் இயக்கத்தில் பிரபு நாயகனாக நடிக்கும் 'மாம்ஸ்' படத்திலும் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

* பிரசாந்த் நடித்து அடுத்து வெளிவருவதாக அறிவிக்கப்பட்ட 'விரும்புகிறேன்' படத்தின் வெளியீடு தள்ளிக் கொண்டே போவதால், அதற்கு முன் பிரசாந்த் நடித்த 'ஸ்டார்' படம் வெளியாகவுள்ளது.

* கே.பாலச்சந்தர் இயக்கத்தில் 'பார்த்தாலே பரவசம்' படத்தில் இணைந்து நடிக்கும் மாதவன்-சிம்ரான் ஜோடி மறுபடி மணிரத்னம் இயக்கத்தில் இணைந்து நடிக்கப்போகிறார்கள். இப்படத்திற்கு 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்று பெயரிட்டிருப்பதாகக் கேள்வி.

* திருமணத்திற்குப் பின் பல படவாய்ப்புக்களை இழந்த தேவயானி, புதிதாக ஒரு படத்தில் ஒப்பந்தமாகியிருக்கிறார். தமிழில் அல்ல, மலையாளத் தில். இப்படத்தில் சுரேஷ்கோபி கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'முகவரி' படத்தை இயக்கிய துரை தற்போது விக்ரம் நடிக்கும் 'காதல் சடுகுடு' படத்தை இயக்கி வருகிறார். இதில் விக்ரமிற்கு ஜோடியாக, 'சுவாசம்' படத்தில் எஸ்பி ஜோடியாக அறிமுகமாகும் பிரியங்கா திரிவேதி நாயகியாக நடிக்கிறார்.

* … இயக்கி நடிக்கும் '…' படத்திற்காக … சொந்தக் குரலில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். இப்படத்திற்கு தேனிசைத் தென்றல் தேவா இசையமைக்கிறார்.

* புதிய பட வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கும் வித்யா, கடுமையான உடற்பயிற்சிகள் மூலம் உடம்பைக் குறைத்துக்கொண்டுள்ளார். அத்தோடு கவர்ச்சியான வேடங்களில் நடிக்கவும் தயாராகி விட்டார்.

* அர்ஜுன் இயக்கி நடிக்கும் 'வேதம்' படத்தில் இடம்பெறும் பாடல் காட்சிகள் முழுவதையும் வெளிநாடுகளில் படமெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். இப்படத்தில் மும்தாஜ்-அபிராமி-திவ்யா உன்னி ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

203

திரையுலக மறுபக்கம்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## மதுபோதையால் மயங்கி விழுந்த மாது

பிரபல இயக்குநர் ஒருவரின் சகோதரர் 'அந்த மாதிரியான' படங்களைத் தனது 'பினாமி' பெயரில் தயாரித்து வெளியிட்டுப் பெரிய அளவில் பணம் பார்த்து வருகிறார்.

அண்மையில் 'அந்த மாதிரியான' படமொன்றின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள பிரபல ஸ்டூடியோ ஒன்றில் நடைபெற்றது. அப்படப் பிடிப்பில் நடித்துக் கொண்டிருந்த நடிகை 'தொபுக்கடீர்'என மயங்கிக் கீழே விழுந்து விட்டார்.

பதறிப் போன படப்பிடிப்புக்குழுவினர் நடிகையைக் காரில் அள்ளிப் போட் டுக் கொண்டு தனியார் மருத்துவமனைக்கு விரைந்தனர். நடிகையைப் பரிசோதித்த மருத்துவர், வீட்டுக்குக் கூட்டிச் செல்லும்படி கூறிவிட்டார்.

மது போதையால்தான் நடிகை மயங்கி விழுந்து விட்டார் என்று கூறி, அங்கிருந்தவர்களுக்குப் புரிய வைத்தார் அந்த மருத்துவர். இதைக் கேட்டவர்களுக்கு ஒரே திகைப்பு.

இருக்காதா பின்னே? காலையில் இருந்து வேறு ஓரிடமும் செல்லாமல் நடித்துக் கொண்டிருந்த நடிகை எப்படிக் குடித்திருக்க முடியும் என்பதுதான் அவர்களின் திகைப்புக்குக் காரணம்.

பலவாறு யோசித்த பின்னர்தான் நடிகைக்குப் போதை ஏறிய விஷயம் அவர்களுக்குப் புரிய ஆரம்பித்தது.

நடிகை எங்கே சென்றாலும் தன்னுடன் உதவியாளர் ஒருவரையும் கூடவே அழைத்துச் செல்வார். படப்பிடிப்புத்தளங்களில் அடிக்கடி நடிகைக்குக் குளிர்பானம் கொடுப்பதுதான் அந்த உதவியாளரின் பிரதான வேலை.

நடிக்க வந்த புதிதில் சில பிரமுகர்களுக்கு 'கம்பனி' கொடுக்கச் சென்ற நடிகைக்கு மெல்ல ஏற்பட்ட குடிப்பழக்கம் நாளடைவில் அவரை அதற்கு அடிமையாக்கி விட்டது.

குளிர்பானம் என்ற பெயரில் உற்சாகபானத்தை படப்பிடிப்புத்தளங்களிலும் ஊற்றிக் கொள்ள ஆரம்பித்தார். அன்றும் அப்படித்தான் அளவுக்கு அதிகமாக உற்சாக பானத்தை ஏற்றிக் கொண்ட நடிகை மயங்கி விழுந்து விட்டார்.

இந்த விஷயம் அடுத்த நாளே கோடம்பாக்கம் முழுவதும் 'லீக்' ஆகிவிட்டது. 'அடி குடிகாரி' என்று நடிகையின் காதுபடவே சக நடிகைகள் கிண்டலடித்திருக்கிறார்கள்.

இதனால் கோபமடைந்த நடிகை, 'இவளுகள் மட்டும் என்ன குடிக்காதவளுகளா?' என்ற பாணியில் கூற ஆரம்பித்தவர், சில நடிகைகளின் பெயர்களைக் கூறி எங்கெங்கு யார் யாருடன் குடித்தார்கள் என்று விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மயங்கி விழுந்த நடிகை வேறு யாருமல்ல. தமிழில் நன்கு பிரபலமானவர்தான். மணியான நகைச்சுவை நடிகருடன் ஜோடி சேர்ந்து பல படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்துள்ளார் இந்த நடிகை. கேரளாவில் இருந்து கதாநாயகி வாய்ப்புத் தேடி வந்த அக்கா-தங்கை நடிகைகளில் ஒருவரான இந்த நடிகை நடிக்கும் 'பலான' படங்களுக்கு இப்போது கேரளாவில் அதிக மவுசு. 'ஷ'வில் தொடங்கும் மூன்றெழுத்துப் பெயருடையவர் இவர்.




சத்யராஜ்-ரம்யா கிருஷ்ணன்
படம்: அசத்தல்

## சூர்யா 'சுட்ட'கதை

தமிழில் 'வாலி', 'குஷி' ஆகிய இரண்டு வெற்றிப் படங்களையும் தெலுங்கில் 'குஷி' வெற்றிப்படத்தையும் இயக்கியிருக்கும் எஸ்.ஜே.சூர்யா அடுத்து அஜித் நடிக்க 'நியூ' என்ற படத்தை இயக்க வுள்ளார்.

இப்படத்தை சூர்யாவே சொந்தமாகத் தயாரிக்கவும் உள்ளார். படத்தின் பெயரைப் போலவே கதையும் 'நியூ'வாக இருக்கும் என்று கூறியுள்ளார் சூர்யா. படத்தின் கதை இதுதான்.

பக்கத்து வீட்டுப் பருவப் பெண்ணுடன் இணைபிரியாத் தோழனாக இருக்கிறான் 8 வயது சிறுவன். ஒரு கட்டத்தில் காதலில் சிக்கிக்கொள்ளும் அந்தக் கன்னி சிறுவனின் நட்பைத் துண்டித்து விடுகிறாள்.

அவளின் இழப்பை ஈடுசெய்ய முடியாமல் தவிக்கும் சிறுவன், தான் பெரியவனாக இருந்திருந்தால் தானே அவளது காதலனாகி இருக்கலாம் என்று நினைக்கிறான். எப்படியாவது தான் பெரியவனாகி விடவேண்டும் எனத் துடிக்கும் சிறுவன், புதிய கண்டுபிடிப்பின் மூலம், கண்ணிமைக்கும் நேரத்தில் பெரியவனாகி விடுகிறான். 20வயது வாலிபனாகிவிட்டாலும் 8 வயதுச் சிறுவனின் அறிவே அவனுக்கு இருக்கிறது.

இதனால் அவன் சந்திக்கும் ஏமாற்றங்கள், தோல்விகள், பிரச்சனைகள் தான் படத்தின் கதை. இந்த மனவளர்ச்சி குறைந்த இளைஞன் வேடத்தில் தான் அஜித் நடிக்கிறார்.

இந்தக் கதையைக் கேட்க சுவாரஸ்யமாக இருந்தாலும், பல வருடங்களுக்கு முன் வெளியான 'பிக்' என்ற ஆங்கிலப்படத்தில் இருந்து 'சுட்ட'கதைதான் இது.

## ரஜினியின் கடைசிப்படம்

சில வருடங்களுக்கு முன் வருடத்திற்கு 3 படங்களில் மட்டுமே நடிப்பதாகத் தீர்மானித்திருந்த ரஜினி வருடத்திற்கு ஒரு படம் நடித்தார்.

இப்போதெல்லாம் 2, 3 வருடங்களுக்கு ஒரு படம் என்ற ரீதியில் போய்க்கொண்டிருக்கிறது.

ரஜினி நடித்து கடைசியாக வெளியான படம் 'படையப்பா'. இப்படம் வெளியாகி 2 வருடங்களாகி விட்டன. இப்போது ரஜினி நடிக்கும் புதிய படத்தின் வேலைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் ரஜினி தன் வாயால் கூறும் வரை எதுவும் உண்மையில்லை.

ரஜினியின் பேச்சு, செயல்களில் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. அவருக்கு நடிப்பதில் அவ்வளவு நாட்டமில்லை. அடுத்து வெளிவரும் படம் அவரின் கடைசிப்படம் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## ...ளவிகா–தேவயானி மிக்ஸ்

...லி' படத்திற்கு கார்த்திக்-தேவயானி-மோனல்-
...க் கட்டிப் பிடித்தபடி போஸ் கொடுக்கவைத்துப்
...டுத்து பட அழைப்பிதழை வடிவமைத்தார்
... இயக்குநர் ஷக்தி.
...ணி இரகசியத் திருமணம் செய்ததை அடுத்து,
...து அவரை நீக்கி விட்டு மாளவிகாவை ஒப்பந்
... அழைப்பிதழில் வடிவமைக்கப்பட்ட தேவயா
... கத்தரித்து விட்டு அதற்குப் பதிலாக மாளவி
... அழைப்பிதழை அச்சடித்தனர்.
...தில் மாளவிகா தலையும் தேவயானி உடலும்
...ள் உள்ளது.

## ...டிக்கும் 'மும்தாஜ்'

...மும்தாஜ். இவருடன் ராம்கி, பாபுகணேஷ்,
...வையாபுரி, கோவை சரளா, ஸ்ரீவித்யா, மதன்
...பாப் உட்பட பலர் நடிக்கின்றனர்.

'நினைக்காத நாளில்லை' படத்தைத் தயா
...ரித்த கே.ராஜன் தயாரிக்கும் இப்படத்தை
...பாபுகணேஷ் இயக்குகிறார்.


ரம்பா

## இஷாவின் துணிச்சல்

அரவிந்தசாமி ஜோடியாக 'என் சுவாசக் காற்றே' படத்தில் அறிமுகமான இஷா இதன் பின் 'காதல் கவிதை', 'நெஞ்சினிலே' ஆகிய படங்களில் அடக்கமாக நடித்திருந்தார். இவர் நடித்த இந்த 3 படங்களும் மண்ணைக் கவ்வின.

இதன் பின் ஒரு இடைவெளிவிட்டு விஜயகாந்த் ஜோடியாக 'நரசிம்மா' படத்தில் ஒப்பந்தமானார் இஷா. இந்தப் படத்தின் மூலமாவது தமிழில் ஒரு இடத்தைப் பிடித்து விட வேண்டும் என்ற நோக்கத்தில் தாராளமாக நடித்திருக்கிறார் இஷா.

அதிலும் குறிப்பாக பாடல் காட்சிகளில் ஆடைகளைக் குறைத்து இரசிகர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் வகையில் துணிச்சலாக கவர்ச்சியை வாரி வழங்கி நடித்திருக்கிறார்.

## கமலுடன் கான்

அந்தா வருகிறது இந்தா வருகிறது என்று எதிர்பார்ப்பையும் ஏமாற்றத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கும் 'ஆளவந்தான்' படத்தின் கதையில் ஆங்கிலப் படமான 'டுயல்' படத்தின் சாயல் ஆங்காங்கே தெரிவதாகத் தகவல் கசிந்துள்ளது.

சில சமயம் சாமர்த்திய சாலியாகவும் அதே சமயம் சைக்கோ (மனநோயாளி)வாகவும் வில்லன் வேடத்தில் நடிக்கும் மொட்டைத்தலை கமலுக்கு இணையாக மொட்டையடித்து நடித்திருக்கிறார் பிரபல தொலைக்காட்சி நடிகர் ரியாஸ்கான்.

## குஷியில் ரத்னம்

'இந்தியன்' படத்தைத் தயாரித்து பலகோடி ரூபாய் இலாபம் கண்ட ஏ.எம்.ரத்னம் அதன் பின் 'குஷி' படத்தைத் தயாரித்து மேலும் பல கோடிகளைச் சேர்த்தார்.

அது மட்டுமா? 'குஷி' படத்தைத் தெலுங்கில் தயாரித்து வெளியிட்டார். பவன் கல்யாண்-பூமிகா நடிக்க 'செப்பாலினி உந்தி' என்ற பெயரில் தமிழில் இயக்கிய சூர்யா இயக்கத்தில் தயாரானது தெலுங்கு 'குஷி'.

கடைசி நேரத்தில் 'குஷி' என்ற தமிழ்ப்படப் பெயரையே தெலுங்குத் பதிப்புக்கும் வைத்தார். தமிழைப் போலவே தெலுங்கிலும் 'குஷி' வெற்றிகரமாக ஓட ஏக 'குஷி'யில் இருக்கிறார் ரத்னம்.


ஸ்ரீஜோதி
படம்: காதல் படிகள்

## இன்னொரு நட்சத்திரத் திருமணம்

இயக்குநர் ராஜகுமாரன்-தேவயானி திருமணத்தை அடுத்து இன்னொரு நட்சத்திரத் திருமணம் தமிழ்த்திரையுலகில் நடந்துள்ளது.

'என்னவளே' படத்தை இயக்கிய ஜே.சுரேஷ், பெரியதிரையில் அறிமுகமாகி சின்னத்திரையில் வலம் வரும் நடிகை ரேணுகாவைத் திருமணம் செய்துள்ளார். 'மலைச்சாரல்' படத்தில் சீமா என்ற பெயரில் அறிமுகமான ரேணுகாவின் திருமணத்திற்கு ரேணுகா வீட்டில் கடும் எதிர்ப்பு.

## அஜித்தின் வாமண அவதாரம்

'ஆளவந்தான்' படத்தை இயக்கி முடித்திருக்கும் சுரேஷ் கிருஷ்ணாவும் 'சிட்டிசன்' படத்தை நடித்து முடித்து விட்டிருக்கும் அஜித்தும் இணைந்து தரவிருக்கும் புதிய படத்திற்கு 'வாமனா' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

'ஆளவந்தான்', 'சிட்டிசன்' என்று பரபரப்பான இரு படங்களை தந்தவர்கள் இணைந்து எடுக்கும் வாமண அவதாரமும் பெரிதாகப் பேசப்படும்.

'ஹலோ', 'பார்த்தேன் ரசித்தேன்' ஆகிய படங்களைத் தயாரித்த செரின் மூவீஸ் நிறுவனம் 'வாமனா'வைத் தயாரிக்கிறது.


விக்னேஷ்-சங்கீதா
படம்: என்றும் ஆனந்தம்

## பார்த்திபனின் 'கலிங்கா'

வி.சேகரிடம் உதவியாளராக இருந்த பிரசாத் முதல் முறையாக இயக்கவிருக்கும் படத்தில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு 'கலிங்கா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## பிரபு-சிம்ரான் ஜோடி?

விஜயகாந்த்-சூர்யா இணைந்து நடித்த 'பெரியண்ணா' படத்தைத் தயாரித்த விஜயகாந்தின் உதவியாளர் அடுத்து பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

இப்படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்க வைக்க சிம்ரானை அணுகியுள்ளனர். பிரபு-சிம்ரான் இணைந்து இதுவரை எந்தப்படத்திலும் நடித்ததில்லை.

## ஸ்நேகா மீது பழி

பிரசாந்த்-ஸ்நேகா ஜோடியாக நடித்து வரும் 'விரும்புகிறேன்' படத்தில் இன்னும் சில காட்சிகளே படமாக்க வேண்டியுள்ளன. மணிரத்னத்தின் உதவியாளர் சுசிகணேசன் இயக்கும் இப்படத்தின் வெளியீடு தள்ளிப்போவதற்கு படத்தின் தயாரிப்பாளர் ஃபிரான்ஸின் தான் முழுக்காரணம்.


இருப்பினும் படத்தின் நாயகி ஸ்நேகா சரியான முறையில் ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்று பழியை அவர் மேல் சுமத்தி வருகிறார்.

## மன்றோவின் கடைசிப் படம்



ஹொலிவூட் திரையுலகின் ஈடிணையற்ற கவர்ச்சி நடிகையாகத் திகழ்ந்த மா்லின் மன்றோவின் தோற்றமிது. கடந்த ஜூன் மாதம் 1ம் திகதி மன்றோவின் 75வது பிறந்த தினத்தன்று இப்படம் வெளியிடப்பட்டது. முன்னெப்போதும் வெளியிடப்படாத இப்படம் மன்றோ கடைசியாக நடிக்க ஒப்புக் கொண்ட படத்திற்காக எடுக்கப்பட்டது. 1962ல் தயாரிக்கப்படவிருந்த 'ஸம்திங்ஸ் கொட் டு கிவ்' என்ற படம் மா்லின் மன்றோ இறப்பினால் கைவிடப்பட்டது.


## பேனா நண்பர்கள்



பெயர்:கே. சுதாகரன்
வயது: 20
முகவரி:
3ம் குறுக்குத் தெரு,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்: ஆர். மஞ்சு
வயது: 19
முகவரி:
மருக்காரம் பிள்ளை
வீதி, நெளுக்குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
முஹமட் இம்தியாஸ்
வயது: 21
முகவரி: 172/2,
அம்பகஸ்தன்ன,
வெலம்பொடை, கம்பளை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## தேன் கிண்ணம்

### தாயெனும் தெய்வத்திற்கு

தாயே நீ தரணியிலே
தேயாத வெண்ணிலவு
பத்து மாதம் கருசுமந்து
உயிர்ப்பித்தாய் உன்மகனை;

தீராத துன்பம் உன்னை
தீண்டிய வேளையிலும்
அயராமல் அன்பு தந்து
ஆளாக்கி வாழவைத்தாய்!

வயிற்றுக்கு உணவின்றி
வாடிய வேளையிலும்
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டினாய் என்தாயே!

வயற் காட்டில் நீவாடி
வருந்திட்ட நாள் தனிலும்
வருத்தம் தெரியாமல்
வளர்த்திட்டாய் என்தாயே!

புவிதனிலே வழிபடவே
தெய்வம் பல இருந்தாலும்
தாயென்னும் கடவுளுக்கு
மேலேதும் இருந்திடுமா?

பிரதிபலன் பார்த்திடாத
பேரருள்ப் பேறவளே
உயிருள்ள கடவுள்தான்
உலாவரும் தாயவளே!

தாய் சொல்லைத் தட்டினாலும்
தறிகெட்டுப் போனாலும்
மகனுக்குத் துன்பமென்றால்
மரணிக்கும் மனமுடையாள்;

ஊனமுள்ள பிள்ளையதாய்
பிறந்திட்ட போதினிலும்
ஒதுங்கித் தள்ளிடாத
ஒப்பற்ற தாயவளே...!

'மஞ்சரிக்கவி'
மாணிக்கன் இளங்கோ,
முன்னம் போடி வெட்டை.

### க(ச)ாதல்



நான் கண்டேன் தேவதையாட்டம்
ஒரு வெள்ளோட்டம்
அவள் பார்த்தாள் ஆந்தையாட்டம்
என் தோற்றம்
நான் சென்றேன் சிங்கநடையாட்டம்
அவள் சுவாசோட்டம்
அவள் கதைத்தால் காதலாட்டம்
நானும் கொண்டேன் காதலேற்றம்.

♥❀♥

சுற்றிச் சுற்றி திரிந்தோம் பல இடத்தில்
ஒட்டி ஒட்டி இருந்தோம் ஓர் இருப்பில்
என் பொன், பணம் பறந்தது ஒரு மாதத்தில்
அவள் ஊர்சென்று வருவதாய் சொன்னாள்
ஒரு நாளில்!

♥❀♥

பார்த்துப் பார்த்து இருந்தேன் அவள் வரவுக்காய்
பல காலம் காத்துக்காத்து இருந்தேன் அவளுக்காய்
நேரங்கள் பல கடந்தன என்னைக் காணாமல்
காலங்கள் சில பறந்தன என்னிடம் சொல்லாமல்.

♥❀♥

ஒரு நாள் கண்டேன் வழியோரம்
அவள் பார்த்துச் சென்றாள் விழியோரம்
நான் கடந்து வந்தேன் தெருவோரம்-அப்போது
அவள் மறைந்து விட்டாள் கானல் நீராட்டம்.


♥❀♥

மீண்டும் கண்டேன் அவளை வழியோரம்
அவள் என் வழி நீங்கிச் சென்றது,
பார்க்க நேர்ந்தது அவள் கழுத்தோரம்
அதில் தாலி ஒன்று தொங்கி நின்றது.

♥❀♥

புரிந்து கொண்டேன் அவள் காதலை,
விரும்பிச் சென்றேன் என் சாதலை,
அப்போது புரிந்து கொள்ள முடிந்தது விதியை,
இப்போது விரும்பி வாழ்கின்றேன்
அவள் நண்பி விஜியுடன்!

எம்.ரி. குமரன், வத்தளை.



### என்ன மனிதர்கள்...?

பேசிடும் பேச்சில்
எத்தனை உள் அர்த்தம்...
பேசியே மனதை
புண்படுத்துவதில்
என்ன சுகம்...?!

கல்லால் அடித்தால்
வலி-ஆறும் வரை...
சொல்லால் அடித்தால்
வலி-சாகும் வரை...!
இது அனுபவத்தில்
உணர்த்தும் வலி!

நடைப்பிணமாய்
மாற்றி அவனை
ரசிப்பதில் ஒரு
தனி இன்பம்...

ஆளுமையை முளையில்
கிள்ளி எறிந்து
கோழைகளை
வளர விடும்
மனிதக்கூட்டம்...

என்ன வாழ்க்கையடா...!
காட்டு மிருகம்
அதற்கு உள்ள
சுதந்திரம் கூட
இன்று எமக்கு
அற்ற காலமிது
ஏன் இந்த நிலை...?

மனிதனால் மனிதனுக்கு
அதை விட நாம்
தமிழனாய் பிறந்ததாலோ
அதிலும் நாம்
பெண்ணாய்-ஆம்
கூட்டில் அல்ல
வீட்டில்
சிறகுகள் வெட்டப்பட்டு
அடைக்கப்பட்ட
பறவைகளாய் எமை
இன்று ஆக்கிவிட
துடிக்கும் இவர்கள் என்ன
மனிதர்கள்....?

ஜெ.ஜெசி,
மட்டக்களப்பு.

### பேரூந்துக் காதல்

ஊர்ந்தூர்ந்து வரும்
வண்டி அன்று
சர் என்று வந்து,
சற்றுத் தள்ளியே நின்றது.

"வாடி" என இழுத்து
வண்டியில் ஏறினோம்;
நானும் நண்பியும்
நசிந்து சனத்திடையே...

கண்கள் அலைந்து
கனதூரம் சென்று மீண்டது
காணவில்லை 'அவனை'
கஷ்டமாய் இருந்தது.

அவன் வண்டியில் ஏறுவதும்,
எதிர்ப்படுவதும், சிரிப்பதுவும்,
நித்தம் முன்னால் வந்து
கண்ணால் பேசுவதும் இருக்கும்.

ஏது நடந்தது இன்று...?
எப்படி மறப்பான்....?
பெப்ரவரி 14 இன்று
இதயம் அழுகிறதே!

சந்தியில் நின்று,
சற்றுத் தள்ளாடி வண்டி
சடுதியாய் சென்றது...
சட்டென்று அவன் முகம்!

புன்னகை பூத்த முகம்
கைகளில் ஏதோ ஒன்று
கனவுகள் சுமந்த கண்கள்
எனை நோக்கி முன்னேற்றம்!

தடதடத்த நெஞ்சுக்கு
தாழ்ப்பாள் போட்டேன்.
ஆயிரம் அல்லிகள் நெஞ்சில்
ஆனந்தம் பாடின.

கிட்டே வந்து விட்டான்
அது ரோஜாவே தான்
உயர்ந்தன கைகள் பூவுடன்
நாணத்தோடு நிமிர்ந்தேன்.

கோடி அமிலத்தை
கொட்டியபடி
கொடுத்தான் பூவை;
என்னிடம் அல்ல...
என் நண்பியிடம்!

ஈ.ஜீவாணி, வேப்பங்குளம்.

## நில் கவனி முன்னேறு

### வெற்றியின் உரிமை

இறைவனுடைய படைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உள்ளது. கடமை இல்லாத மனிதனே உலகில் இல்லை. கடமையை எப்படிச் செய்ய வேண்டும்? எப்படிச் செய்தால் வெற்றி பெற முடியும்? எந்த விதமாகப் பணியாற்றினால் பெருமை பெற இயலும் என்ற உண்மையை உணர்ந்து கொண்டால், அதனைச் செய்யும் முறையை புரிந்து கொண்டால் நிச்சயமாக நாம் வெற்றி பெற முடியும்.

கடமைச் செய்வதின் மூலமே வெற்றி பெறமுடியும். கண்ணியத்தை உருவாக்க இயலும். கடமை என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். இது பதிலே குறியாக இருக்க வேண்டும்.

எண்ணம் மட்டும் தெளிவுடன் இருக்குமானால் செயலும் செழிப்பாக அமையும். கடமையைச் செய்வது நம்முடைய வாழ்க்கையோடு ஒன்றியது. அதனைத் தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது.

கடமை இல்லையென்றால் சமுதாய வளர்ச்சியே இருக்காது. உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு கடமையைச் செய்தபடியினால்தான் முன்னேற்றம் அடைந்த உலகத்தை இன்று நாம் காண முடிகிறது. கடமையைச் செய்யாமல் இருந்தால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது.

எப்படியும் முன்னேற வேண்டும் என்ற வேகம் இருந்தே ஆகவேண்டும். அப்பொழுதுதான் வெற்றி பெற முடியும். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அங்கு வாழும் மக்களின் கடமையைப் பொருத்ததுதான். வளம் பெற வேண்டுமானால் கடமையைச் செய்தாக வேண்டும்.

இதன் மூலம் நாம் மட்டும் அல்ல, நம்முடைய குடும்பமும் குதூகலமாக இருக்க முடியும். நாமும் உயர்ந்து நம்முடைய குடும்பமும் உயர்ந்து சமுதாயமும் மேன்மை பெற்றால் அதனைவிட சிறப்பு வேறு என்னவாக இருக்க முடியும்.



ஒவ்வொருவருடைய சூழ்நிலைக்கு ஏற்றபடி அமைந்திருக்கும் அதனை நமக்கு உகந்த வகையில் செய்து கொள்வதில் தான் நம்முடைய திறமையும், பெருமையும் அடங்கி இருக்கும்.

கடமையைச் செய்யவே நாம் பிறந்திருக்கிறோம் என்று நினைவு நம் மனதில் என்றும் இடம் பெற்றே ஆக வேண்டும். கடமையை என்றுமே தள்ளிப் போடக் கூடாது. நம்முடைய எண்ணம் எப்பொழுதும் கடமையைச் செய்ய வேண்டும் என்

காலையில் எழுந்ததில் இருந்து மாலை வரை நம்முடைய கடமைகளை வரையறுத்துக் கொண்டால் நம்முடைய வாழ்க்கை சிறப்புடன் அமையும். கடமை என்ற சக்தி காலையில் நம்முடன் எழுந்து இரவில் நம்முடன் ஒய்வு எடுக்கச் செல்கிறது.

வாழ்க்கையில் நோக்கமும், கடமை உணர்வும் தூய உள்ளமும் இல்லாமல் வெற்றி பெற இயலாது என்பதனை என்றும் நினைவில் வைக்க வேண்டும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

17.06.2001 தொடங்கி 23.06.2001வரை

**மேடம்:**
(அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும், பண வரவும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் பதவி உயர்வுகளைப் பெறுவர். விவசாயிகள் வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை) தொழில் விடயங்களில் முன்னேற்றமும், பொருளாதார வருவாயும் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிலவும். உத்தியோகஸ்தர்களுக்கு முன்னேற்றமுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வித்தடைநீங்கும்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் நிலையிலும் குடும்பத்திலும் சில பிரச்சனைகள் தோன்றி மறையும். வார இறுதியில் இது நிவர்த்தியாகும். உத்தியோகத்தில் உள்ளோர், விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். பொருளாதாரத் தடைகள் விலகும். உத்தியோகத்தில் உள்ளோர் நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வி மேன்மையுண்டு. விவசாயிகள், வியாபாரிகள், முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் ரீதியாக, மறைமுக எதிர்ப்புக்களுண்டு. பணவரவில் தடங்கல்கள் ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்ச்சிகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் நன்மையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

**கன்னி:**
உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை. தொழில் நிலையிலும், குடும்பத்திலும், ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் மறையும், பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர், உயர்ச்சி பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை சுவாதி, விசாகத்து முன்முக்கால்) குடும்பத்திலும், தொழிலிலும் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீர்ந்து மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) எந்த விடயத்திலும், விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. பொருள் வரவு, காரியானுகூலம் வார இறுதியில் சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள், சிரமங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கிரக நிலை

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், வியாழன், இராகு |
| தனு | - செவ்வாய், கேது |
| மேடம் | - வெள்ளி |
| இடபம் | - புதன், சனி |

**சந்திரன், மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.**

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கஷ்டங்கள் தீர்ந்து மகிழ்ச்சியும், குடும்பத்தில் சந்தோஷமும் நிலவும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள். இலாபமடைவர்.
அதிஷ்டநாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) தொழில் நிலையிலும், குடும்பத்திலும், சில பிரச்சனைகள் தோன்றி மறையும். குடும்பத்தில் துக்க நிகழ்ச்சியொன்று மனக்கவலை தரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.


**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் நிலையில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். பணக்கஷ்டம் தீரும். உத்தியோகத்தில் பதவி உயர்வுகளுக்கு இடமுண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும்.
அதிஷ்ட நாள்: சனி.
அதிஷ்ட இலக்கம்: 04.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) எதிர்பார்த்த கருமங்களில் தடைகள் உண்டாகி வார இறுதியில் மறையும்பணக்கஷ்டம் தென்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளினால் தொல்லைகள் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# அடி-உதை வேண்டாமே



எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!' என்பதை நீங்கள் அறியாதவர்களா என்ன அன்னையரே?

குழந்தைகளை வளர்க்கின்ற தாய் அதற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

நீங்கள் "நாயே, பேயே" என்று திட்டிக் கொண்டே, குழந்தைகளை மட்டும் தீய வார்த்தைகளால் பேசக்கூடாது என்றால் அது எடுபடுமா?

குழந்தை எதைச் செய்ய வேண்டுமோ, எதைக் கற்க வேண்டுமோ, அதை நீங்கள் உணர்த்துவதில்தான் விஷயம் இருக்கிறது.

சாப்பிடும்போது காய்கறிகளை 'ஆஹா என்ன சுவை' என்று நீங்கள் சாப்பிட்டால் அவர்களும் சாப்பிடத் தொடங்கி விடுவார்கள்.

தினமும் ஏதாவது புத்தகம், பத்திரிகை படிக்கத் தொடங்குங்கள். அவர்களும் உங்களை பார்த்துப் படிக்க ஆரம்பிப்பார்கள்.

தினமும் உடற்பயிற்சி, நடைப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் கணவரையும் செய்யச் சொல்லுங்கள். அவர்கள் அதைப்பார்த்துப் பழகுவார்கள்.

குழந்தைகளை இப்படி அறிவால் உணரச் செய்ய முதலில் பார்வைக்குப் படும்படியாக சில காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும். இது ஒரு மனோதத்துவ முறை.

குழந்தைகளிடம், "நீ படிக்கிற படிப்புக்கு எவ்வளவு செலவு செய்கிறேன். படிச்சுத் தொலை." என்று திட்டிக் கொண்டிருந்தால் நாளடைவில் அதையேதான் திரும்பத் திருப்பச் செய்வார்கள்.

மாறாக, "அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார். நீ நல்ல புத்திசாலியாச்சே, நன்றாகப்படி" என்று சொல்லிப் பாருங்கள். உற்சாகத்தில் குழந்தை படிக்கத் தொடங்கி விடும்."

எந்த விஷயத்தையும் குழந்தை உடனே பின்பற்றி விட வேண்டும் என்று துடிக்காதீர்கள். அது நடக்காது.

குடும்ப சூழ்நிலை, சுற்றுப்புறம் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு மெல்ல மெல்ல உணர வையுங்கள்.

எதையும் ஆவேசமாகச் சொல்லாமல், அமைதியாகச் சொல்லுங்கள். அதிகப்படியான கண்டிப்பு. இன்றைக்கல்ல, என்றைக்காவது ஒருநாள் தவறாகவே முடியும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

குழந்தைகளைத் திட்டமிட்டு வளர்த்தால் நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். அடி-உதை கொடுத்து அதட்டிப் பணிய வைக்கலாம் என்று நீங்கள் நினைத்தீர்களானால் அதை அப்படியே மறந்துவிடுங்கள்.

# அவசியம் முள்ளங்கி சாப்பிடுங்கள்

முள்ளங்கியை வாரம் இருமுறை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். சாம்பாரிலோ, சூப்பிலோ அல்லது கறிவைத்தோ சாப்பிடவேண்டும். முள்ளங்கியை உணவில் சேர்த்துக் கொள்வதால் நல்ல பலன் கிடைக்கும்.

முள்ளங்கி சாப்பிடுவதால் உடலுக்குக் குளிர்ச்சி கிடைக்கும். சிறுநீரகக் கற்கள், கல்லீரல் கற்கள் ஏற்படாமல் தடுக்கும். சிறுநீர் பிரியாமை, நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் ஆகியவை ஏற்படாமல் செய்யும்.

இதய பலவீனம், மூட்டு வீக்கம், அதிக இரத்தக்கொதிப்பு, வயிறு வீக்கம் உள்ளவர்கள் அவசியம் முள்ளங்கி சாப்பிட வேண்டும்.

கரும்புச் சாறுடன் முள்ளங்கிச்சாறு சாப்பிட்டால் மஞ்சள் காமாலை நோய்குணமாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JQ

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**


பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-06-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர்; த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## இறக்குவானை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்



செல்வி ஆர். வனஜா, 409/B கொட்டல, இறக்குவானை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# நீக்ரோவின் இரத்தமும் சிவப்புத்தான்...

**மனித உரிமைகள் குறித்தும் பெண் அடிமைத்தனம் தொடர்பாகவும் வாய்கிழியக்கத்தும் அமெரிக்கா தமது சொந்த நாட்டில் கறுப்பினத்தவருக்கு எதிராக மேற்கொள்ளும் அடாவடித்தனங்களை கண்டு கொள்வதில்லை.**

**அமெரிக்காவில் வெள்ளையர்கள் குடி யேறத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் தங்கள் பண்ணைகளிலும், வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்வதற்காக ஆபிரிக்கர்களைக் கப்பல், கப்பலாக ஏற்றிச் சென்றார்கள்.**

**இந்த நீக்ரோக்கள், அன்று சொல்லொணாக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.**

**அவர்களும், அவர்களுடைய குழந்தைகளும் வாழ்நாள் பூராவும் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள். அவர்களை வெள்ளை எஜமானர்களின் 'சொத்து' என்று சட்டம் சொல்லிற்று. அவர்களைக் குடும்பத்திலிருந்து பிரிக்கலாம். வேறொருவருக்கு விற்கலாம்: அடிமைகளைக் கொலை செய்தால் கூட அந்த எஜமானர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாது.**

**பத்தொன்பதாம் நூற்றாண்டு வாக்கில் இந்தக் கொடுமை உச்சத்தில் இருந்தது. அமெரிக்காவில். வர்ஜீனியா மாநிலத்தில் பீட்டர்ஸ்பர்க் என்ற ஊரில் நடைபெற்ற அடிமை விற்பனையை நேரில் பார்த்த டாக்டர் எல்வுட் ஹார்வி என்பவர் அதைப் பற்றி எழுதியிருக்கிறார்.**



பீட்டர்ஸ்பர்க்கின் அருகே சிறிது நிலமும், வேறு சில உடைமைகளும் விற்கப்படுவதைப் பார்க்கப் போயிருந்தேன். நானும், என் நண்பர்களும் எதிர்பாராத நிகழ்ச்சி இது.

"நிலத்தை மட்டுமே விற்கப் போகிறோமே ஒழிய, உங்களை விற்கப் போவதில்லை" என்று பொய் சொல்லி, எல்லா அடிமைகளையும் அங்கே அழைத்து வந்திருந்தார்கள்.

நிலத்தை விற்றானதும், "நீக்ரோக்களைக் கொண்டு வாருங்கள்!" என்று ஏலம் போடுகிறவர் கூவினார். அடிமைகள் திகிலும், திகைப்பும் முகத்தில் கூத்தாட ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

உற்றார், உறவினர்களைப் பிரிந்து ஒவ்வொருவர் ஒவ்வோர் இடத்துக்கு கொண்டு செல்லப்படுவோம் என்பதை உணர்ந்ததில் அவர்களுக்குப் பீதி!

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு குடிசைகளுக்குள் பதுங்கிக் கொண்டார்கள். பல குழந்தைகள் மரங்களின் பின்னே மறைந்து கொண்டன. ஆண்கள் செயலற்று நின்றார்கள்.

ஏலம் விடுகிறவர் உயரமான இடத்தில் ஏறி நின்றுகொண்டார். "இங்கே ஏலம் விடப்படும் சிறுவர்களும், ஆண்களும் திடகாத்திரமானவர்களா, அறிவு உள்ளவர்களா என்பதைக் குறித்து நாங்கள் உத்தரவாதம் தரமாட்டோம். விரும்புகிறவர்கள் தாங்களே பரிசோதித்துக் கொள்ளலாம்" என்று அறிவித்து எல்லோரையும் வரிசையாக நிறுத்தி வைத்தார்.

ஆண்டாண்டு காலமாக உழைத்து நலிந்த வயோதிபர்கள், தங்களுக்கிருக்கும் நோய்களைப் பற்றியும், பலவீனம் பற்றியும் தாங்களே சொல்லிக் கொண்டது பரிதாபமாக இருந்தது.

அடிமைகளை வாங்க வந்திருந்த கூட்டத்தினர் அந்த வயோதிபர்களைக் கேலியும், கிண்டலும் செய்து சிரித்தார்கள்.

பதினைந்து வயதான ஒரு சிறுவன், மேடைமீது நிறுத்தப்பட்டான். அவன் வெள்ளை நிறமாக இருந்தான். நீக்ரோ என்பதற்கு எந்த அடையாளமும் அவனிடம் காணப்படவில்லை.

அதைப் பற்றிக் கூட்டத்தினர் ஆபாசமாகப் பேசிச் சிரித்தார்கள். "கருப்பு நீக்ரோவைச் சமாளிக்கலாம். வெள்ளை நீக்ரோக்கள் பெரும் தொல்லை" என்றார் ஒருவர். "வெள்ளை நீக்ரோவை விற்கக்கூடாது"என்று வேறொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஏலத்தார், "இந்தப் பையன் இருநூறு டாலர்" என்று ஏலத்தை ஆரம்பித்த சமயம், எங்கிருந்தோ அவனுடைய அம்மா ஓடிவந்தார். 'என் பிள்ளை! ஐயோ என் மகன்! அவனை விட்டுவிடுங்கள்!' என்று கதறினாள். ஆனால் அவளைத் தள்ளிக் கொண்டு போய் ஒரு வீட்டுக்குள் அடைத்து விட்டார்கள்.

அன்னியர்களின் முன்னே வாய்விட்டு அழக்கூடாதென்று அந்தப் பையன் அழுகையை அடக்கிக் கொண்டிருந்தான். எனினும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அதைச் சட்டை நுனியால் துடைத்துக் கொண்டிருந்தான். அடிமைகளிடையே ஓலமம், ஒப்பாரியும் ஒலித்தன. ஆனால் வாங்க வந்திருந்தவர்கள் யாரும் இரக்கப்படவில்லை; அனுதாபம் காட்டவில்லை.

ஏலம் பாட்டுக்குத் தொடர்ந்தது. கடைசியில் இருநூற்றைம்பது டாலருக்கு அவனை விற்றார்கள். அடிமைகளின் கதறலைக் கேட்டு என் இதயம் பிளந்தது.

ஒரு பெண்ணை அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஒரு குழந்தை அவள் இடுப்பில் இருந்தது. அதை ஒரு முறை இறுக அணைத்துக் கொண்டபின், அருகிலிருந்த ஒரு மூதாட்டியிடம் கொடுத்து விட்டு மேடைக்கு வந்தாள். இரு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்திக் கொண்டு கதறினாள். அவளும் விற்கப்பட்டாள்.

என் சினேகிதர் என் தோளைத் தட்டி, "சகிக்க முடியவில்லை. வாருங்கள் நாம் போவாம்" என்றார். நாங்கள் வண்டிக்குத் திரும்பினோம். வண்டியோட்டி ஒரு நீக்ரோ அவனுக்கு இரண்டு சிறு குழந்தைகள் இருக்கிறார்களாம்.

'அவர்ளை விற்க மாட்டேன்' என்று பண்ணையார் உறுதி கூறியிருக்கிறாராம். "மொத்தமே உங்களுக்கு இரண்டு குழந்தைகள்தானா?" என்று கேட்டோம். "இல்லை. எட்டுக் குழந்தைகள் பிறந்தன. மூன்று இறந்துவிட்டன. மூன்றைத் தெற்கே யாருக்கோ விற்றார்கள். எங்கே போனார்கள்; என்ன ஆனார்கள் என்பது தெரியாது" என்றான்.

***

நியூ ஆர்லியன்ஸ் சிறையில் இருந்த நீக்ரோ கைதிகளைப் பார்த்துவிட்டு, அவர்களுடைய குடியிருப்பு வழியாக திரும்பிக் கொண்டிருந்தேன். அங்கே நான் கண்ட காட்சி... என்னை ஒரு வெள்ளைக்காரன் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாயிருக்கிறது.

ஒரு திறந்த வெளி முற்றம். அங்கே படிக்கட்டுகள் அமைத்திருந்தார்கள். அதில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், கிழவர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

'சொடேர்' என்று ஒரு சத்தம் கேட்டது. துப்பாக்கியின் தோட்டா வெடிக்கிற மாதிரியான சத்தம். திரும்பிப் பார்த்தேன். என் நாடி, நரம்பெல்லாம் உறைந்தது. ரோமம் குத்திட்டு நின்றது. உடம்பு ஜில்லிட்டது.

முற்றத்தின் நடுவே ஒரு பலகை போடப்பட்டு, அதில் ஒரு நீக்ரோ பெண் கவிழ்ந்து படுத்திருந்தாள். இரண்டு கையின் கட்டை விரல்களையும் சேர்த்துக் கட்டியிருந்தார்கள். கால்களைச் சேர்த்துக்கட்டி, பலகையின் முனையோடு இழுத்துப் பிணைத்திருந்தார்கள்.

அவள் முதுகின் கீழ்ப்புறத்தில் ஒரு பட்டை சுற்றி, அதையும் பலகையுடன் சேர்த்துக் கட்டியிருந்தார்கள். அவள் உடம்பில் துணி எதுவும் இல்லை.

ஆறடி உயரமுள்ள ஆஜானுபாகுவான ஒருவன் அருகில் நின்றிருந்தான். அவன் கையில் ஒரு நீண்ட சாட்டை இருந்தது. பயங்கரமான வேகத்துடன் அந்தச் சாட்டையால் அவளை அடித்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு அடியின் போதும் அவள் உடம்பின் சதை பிய்ந்து சாட்டையோடு வந்தது. பிய்ந்த சதைத் துண்டுகள் தெறித்து ஓரமாய் விழுந்து துடித்தன. கூடவே ரத்தமும் பெருகி ஓடியது.

அந்தப் பெண் துடித்தாள்; அலறினாள்; தலைமாட்டில் நின்றிருந்த எஜமானரிடம், "என் உயிர் போகிறது! என்னால் தாள முடியவில்லை. என்னை விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சிக் கதறினாள்.

பாய்ந்து சென்று சாட்டையைப் பிடுங்கி வதையை நிறுத்த வேண்டும் போல என் ரத்தம் கொதித்தது. ஆனால் ஒண்டியாளான என்னால் என்ன செய்யமுடியும்? சுற்றிலும் இருந்த மற்ற நீக்ரோக்கள்கூட அதைச் சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, எத்தகைய எதிர்ப்பும் காட்டவில்லை.

அந்தப் பெண் அப்படியொன்றும் பயங்கரமான குற்றம் செய்தவளாகத் தெரியவில்லை. ஆயினும் இந்தச் சாட்டையடி, சட்ட அங்கீகாரத்துடன் சிறையை ஒட்டிய முற்றத்தில் தினசரி நடைபெறுகிறது.

எந்த எஜமானரும் தன் அடிமையை இங்கே கொண்டு வரலாம். நீதிபதி, ஜூரி, நீதி மன்றம், விசாரணை முதலிய எதுவும் கிடையாது. சிறைச்சாலைக்கு ஒரு குறிப்பிட்ட கட்டணம் செலுத்தினால், இருபத்தைந்துக்கு மேற்படாத சாட்டையடி கொடுப்பார்கள்.

அல்லது, எஜமானர் தன் பண்ணையிலேயே இது போல ஒரு பலகை அமைத்து வைத்துக் கொண்டு தன் ஆட்களைக் கொண்டே சாட்டையடி கொடுக்கலாம்.

நான்பின்புறமாகத் திரும்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டேன். கடவுள் படைத்த மனிதன், இப்படிக்கூட மிருகமாக மாறுவானா? இந்தக் கேவலத்தைக் கண்டு தலை குனிந்தேன். ■

## பாப்பா முரசு சிறுகதை

# தண்ணீராகிய பால்



அரசன் ஒருவன் இருந்தான். அவனது சபையில் பல அலுவலர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் தான்தான் அரசனிடம் மிகுந்த ஈடுபாடு உள்ளவன் என்றும், அரசனுக்காக உயிரைக் கூட விடத் தயாராக இருப்பதாகவும் சொல்லி வந்தனர்.

ஒருநாள் அரசவைக்கு ஒரு துறவி வந்தார். அரசன் அவரைப் பார்த்து,

"இத்தனை ஈடுபாடுள்ள அலுவலர்களைப் பெற்ற அரசன் என்னைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது"" என்று தனது அலுவலர்களைப் பற்றி புகழ்ச்சியாகச் சொன்னான்.

துறவி புன்சிரிப்புடன்,

"இதை நான் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டேன்!" என்று சொன்னார்.

அதற்கு அரசன்,

"வேண்டுமானால் நீங்கள் அதைச் சோதித்துப் பார்க்கலாம்" என்றான்.

துறவியும் அதற்கு ஒத்துக்கொண்டு, சோதனை ஒன்றை வைத்தார்.

"அரசனின் ஆயுளும் ஆட்சியும் பல்லாண்டுகள் நீடிப்பதற்காகத் தாம் ஒரு பெரிய வேள்வி செய்யப்போவதாகவும் அதற்குத் தேவையான பாலுக்காக ஒரு பெரிய குடம் வைக்கப்படும் என்றும், அதில் ஒவ்வொரு செம்புப் பாலை ஒவ்வொரு அலுவலரும் நடு இரவில் ஊற்ற வேண்டும்" என்றும் துறவி சொன்னார்.

அரசன் புன்முறுவலுடன் "இது தானா சோதனை?" என்று ஏளனமாகக் கேட்டான்.


பின்னர் அவன் அலுவலர்களை அழைத்து நடக்கப் போவதை கூறிய போது, அவர்கள் எல்லோரும் அந்த யோசனைக்குத் தங்கள் மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்து திரும்பி விட்டனர்.

நள்ளிரவில் எல்லோரும் அந்தப் பெரிய குடத்தின் அருகில் சென்று, தங்கள் செம்புகளில் இருந்ததை அதற்குள் ஊற்றி விட்டுத் திரும்பினர்.


மறுநாள் காலையில் குடத்தைப் பார்த்தபோது குடம் நிறையத் தண்ணீர் தான் இருந்தது. துணுக்குற்ற அரசன் அலுவர்களை அழைத்து விசாரித்தார்.

"எல்லோரும் பாலையே ஊற்றுவர். தாம் மட்டும் அதில் தண்ணீர் ஊற்றினர். எப்படித் தெரியப்போகிறது என்று ஒவ்வொருவரும் எண்ணினர். ஆனால் ஒருவர் கூடப் பால் ஊற்றவில்லை" என்பது விளங்கியது.

துறவி கூற்றின் உண்மையை ஏளனம் செய்த அரசன் அதற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டு, உண்மையை உணர்ந்து கொண்டான்.



1முதல் 25 வரையான இலக்கங்களை ஒரு பென்சில் மூலம் கோடு இழுத்து பாருங்கள். மறைந்திருப்பது என்னவென்று தெரியும்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.06.2001.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **399**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 397

பரிசுக்குரியவர்:
காண்டீபன் ருஷாந்,
சரஸ்வதி வித்தியாலயம், கிண்ணையடி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பொன்னம்பலம் கமல்ராஜ்,<br>கோளாவில் விநாயகர் மகா வித்., அக்கரைப்பற்று. | எஸ். வேர்ஜின்,<br>முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்,கம்பளை. |
| அசானா ஹில்மா அம்சிக்,<br>புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை. | இ.சாருஜன்,<br>தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| எஸ். கவிஷாலினி,<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | எம்.எஸ். ரமீஷா,<br>தமிழ் மகா வித்தியாலயம்,(தே.பா.),பசறை. |
| சி.சிவசங்கர்,<br>மட்/விபுலாநந்த வித்தியாலயம், கருவேப்பங்கேணி. | பி. பிரவீண் பிரகாஷ்,<br>திருத்துவக் கல்லூரி, கண்டி. |
| நி.நிலூபா,<br>அல்-மின்ஹாஜ் முஸ்லிம் வித்., திருகோணமலை. | எஸ். சஞ்சயன்,<br>சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு. |

## சின்னச் சின்னச் செய்திகள்

* பறவை இனங்களில் மிகப்பெரியது தீல் பறவை. மிகச்சிறியது ஹம்மிங் பேர்ட்.
* ஒரு நிமிடத்தில் 20 ஆயிரம் தடவைகள் இறக்கை அடித்துப் பறக்கிறது இலையான்.
* திமிங்கலம் மீன் இனத்தைச் சேர்ந்தது. இருப்பினும் இது குட்டி போட்டுப் பால் கொடுக்கிறது.
* ஒரு தடவையில் 50 முதல் 100 வரை முட்டையிடும் மலைப்பாம்புகள் இரண்டு மாதம் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.
* வெட்டுக்கிளிகளின் இரத்தம் வெள்ளையாக இருக்கும்.
* கேட்டிடிட் என்னும் ஒரு வகை இலையான்களுக்கு காதுகள் அதன் முன்னங்கால்களில் அமைந்துள்ளன.
* நண்டுகளுக்கு அதன் பற்கள் வயிற்றில் இருக்கின்றன.
* கார்ஃபிஷ் என்னும் ஒருவகை மீன்களின் எலும்புகள் பச்சை நிறமாக இருக்கும்.
* தனது உடலை விட நீளமான வால் உடைய மிருகம் குரங்கு ஒன்றுதான்.
* சிம்பன்சி என்று ஒரு வகைக் குரங்கைத் தவிர வேறு பிராணிகளுக்குத் தடிமன் வராது.
* ராகூன் என்ற மிருகம், தான் சாப்பிடும் உணவைத் தண்ணீரில் கழுவிச் சுத்தப் படுத்திய பின் உண்ணும்.
* முதலை கண்களைத் திறந்து கொண்டு தான் தூங்கும்.
* காண்டாமிருகம் தனது எதிரிகளைக் கொம்பினால் தாக்குவது இல்லை. பற்களினாலேயே கடிக்கிறது.
* மீன்கள் சாகும் வரை வளர்ச்சியடைந்து கொண்டுதான் இருக்கின்றன.
* யானையின் துதிக்கையில் எலும்புகளே கிடையாது. அது முற்றிலும் தசையால் ஆனது.

## அறிந்து கொள்ளுங்கள்



### இனிப்பது ஏன்?

நெல்லிக்காயை உண்டபின் நீரைப்பருகினால் இனிப்புச் சுவை ஏற்படும். இது ஏன் என்று தெரியுமா?
நெல்லிக்காயில் டானின் என்ற வேதிப்பொருள் இருக்கிறது.
இது நீருடன் சேரும்போது கலிக் அமிலம், எலோஜிக் அமிலம் மற்றும் குளுக்கோஸ் ஆகியன உண்டாகின்றன.
இந்தக் குளுக்கோஸ் தான் இனிப்புச் சுவையை ஏற்படுத்துகிறது.

### விநோத வேர்கள்

ஒரு வயதேயான ஆப்பிள் மரத்தின் பக்கவாட்டு வேர்களின் எண்ணிக்கை 3 ஆயிரம்.
'ரை' என்ற பயிரின் வேர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 40 இலட்சம்வரை இருக்கும்.
கோதுமையின் வேர் நிலத்தடியில் 2 மீட்டர் ஆழம் வரைச் செல்லும்.






### எத்தனை எரிமலைகள்?

எரிமலைகளில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று பெசால்டிக், மற்றது அப்சிடியன்.
பூமிக்குக் கீழே 5 கிலோ மீட்டர் ஆழத்தில் ஆறு மாதிரி ஓடிக்கொண்டிருக்கும் எரிமலைகள்தான் பெசால்டிக். இது பூமிக்கு மேல் என்றுமே தலையை நீட்டிப் பார்க்காது. இவ்வகை எரிமலைகள் ஆபிரிக்கக் காடுகளில் உள்ளன.
பூமிக்குக் கீழே 12 கிலோ மீட்டர் ஆழத்தில் இருப்பதுதான் அப்சிடியன் வகை எரிமலைகள். இதுதான் பூமிக்கு வெளியே வந்து வெடித்துச் சிதறும்.

### உடம்பு கவனம்

மனிதனுக்கு வரும் நோய்கள் எந்தெந்த உறுப்புக்களைப் பாதிக்கிறது என்று தெரியுமா?

காசநோய்-நுரையீரல்
ரைஃபொய்ட்-சிறுகுடல்
ரிக்கட்ஸ்-எலும்பு
மலேரியா-மண்ணீரல்
சிறுநீரக அழற்சி-சிறு நீரகம்



# மர்மத் தீவு 07

## சங்கர்லால் துப்பறியும்



**தமிழ்வாணன்**

"உண்மைதான் இந்த ஆராய்ச்சி முடியும் வரையில் இது இந்திய அரசாங்கத் தைச் சேர்ந்தது என்பது எவருக்கும் தெரியாதபடி நடந்து கொள்ள வேண்டும். எவ்வளவோ பேர் இந்தத் தீவில் நுழைய, பார்க்க முயன்றார்கள். அப்படி முயலுபவர்களை அச்சுறுத்தி விரட்டினோம். ஒருவரையும் கொல்லவில்லை!"

"விலை மிகுந்த நாய் ஒன்று நச்சு ஊசி போட்டுக் கொல்லப்பட்டிருந்தது. பாரடைஸ் ஓட்டலில் தங்கியிருக்கும் பூங்கா என்னும் பணக்கார விதவையின் நாய் அது. உங்கள் தீவிற்கு அது நீந்தி வந்ததாகவும் பிறகு அது எப்படி எவரால் கொண்டு வந்து அந்த தீவில் போடப்பட்டது என்பது தெரியவில்லை! அந்த நாயைக் கண்டதும்தான் என் துப்புத் தொடங்கியது." என்றார் சங்கர்லால்.

"இந்த மர்மத் தீவில் எந்தப் பிராணி வந்தாலும் உயிருடன் திரும்புவதில்லை. பிராணிகள் இறப்பதால் குற்றம் இல்லை. அவை வேலிக்கம்பியின் மீது பட்டாலும், மின்சாரத் தாக்குதலினால் இறந்து விடும்!"

"இந்த நாய் நச்சு ஊசி கொடுத்துக் கொல்லப்பட்டு இருந்தது!" என்று மீண்டும் நினைவுபடுத்தினார் சங்கர்லால்.

"சில பிராணிகள் வேலியில் உடம்பு படாமல் பாதுகாப்புடன் எப்படியாவது உள்ளே வந்துவிடுகின்றன. அவற்றைப் பிடித்து எங்கள் ஆராய்ச்சி ஊசிகளைப் போடுகிறோம். அவை இறந்து விடுகின்றன. பிராணிகளுக்கு உரியவர்கள் இவற்றைத் தேடி இங்கே வராமல் இருக்கவேண்டும். இந்தத்தீவில் பிராணிகளுக்கு ஏற்படும் கதிதான் மனிதர்களுக்கும். இதை மற்றவர்கள் தெரிந்து கொள்வதற்காக இறந்துபோன பிராணிகளை, மற்ற தீவுகளில் மனிதர்கள் நடமாடும் இடங்களில் போட்டவிடுகிறோம்! வேறு ஒன்றும் இல்லை!" என்றார் புரபஸர்.

மலர்ச்சோலை, தேநீர் போட்டுக் கொண்டு வருவதற்கும், அங்கே புது மனிதர் ஒருவர் வருவதற்கும் மிகச் சரியாக இருந்தது.

அந்தப் புது மனிதர்–

கொஞ்சம் கள்ளமாக இருந்தார். ஆனால், பருமனாக இருந்தார். இரவில் கூட அவர் விலை உயர்ந்த உடைகளை அணிந்திருந்தார். அவருடைய புருவங்கள் கொஞ்சம் செறிந்து இருந்தன. விரல்களில் பளபளத்த வைர மோதிரங்களும், கையில் அவர் கட்டியிருந்த விலைமிகுந்த தங்கக் கடிகாரமும் அவர் ஒரு பெரும் பணக்காரர் என்பதைப் பறைசாற்றின.

அவர் விலை மிகுந்த சிகரெட் ஒன்றைப் புகைத்தபடி வந்தார். புரபஸர் கொஞ்சம் அச்சத்துடன் எழுந்து நின்றார்.

"இவர் எங்கள் தலைவர் ஷா. கல்கத்தாவைச் சேர்ந்தவர். பெரும் பணக்காரர்களில் ஒருவர். இவர் உதவியுடன்தான் அரசு இந்த ஆராய்ச்சியைத் தொடங்கியது. பொது மக்கள் எவருக்கும் பயம் ஏற்படாமல் இருக்க, இந்தத் தீவை ஷா விலைக்கு வாங்கினார். இங்கே இருக்கும் ஒவ்வொரு பொருளும் இவர் பெயரால் விலைக்கு வாங்கியவை. இங்கே வேலை செய்பவர்கள் அனைவரும் ஷாவைப் பற்றி அறிவார்கள். பிரதம மந்திரிக்கு மிகவும் வேண்டிய மனிதர். பிரதம மந்திரியின் நம்பிக்கைக்கு மிகவும் உரியவர்!" என்று அறிமுகப்படுத்தினார் சங்கர்லாலிடம்.

சங்கர்லால் மெல்ல எழுந்தார்.

ஷாவைப் பற்றிப் புரபஸர் சொன்னது அனைத்தையும் நம்புவதா வேண்டாமா என்று சங்கர்லாலின் மனம் ஒரு கணம் எடைபோட்டது. பகைவனின் கோட்டைக்குள் வந்து விட்ட பிறகு, அவர்கள் சொல்லுவதை அப்படியே நம்ப வேண்டியதுதான் என்று முடிவு செய்தார். ஆனால், ஒன்று மட்டும் சங்கர்லாலுக்கு மிகவும் பிடிக்கவில்லை!

குற்றவாளி எவராக இருந்தாலும் அவர் பொறுத்துக்கொள்ளவோ, விட்டுக் கொடுக்கவோ முன்னேற்பாடுடன் இல்லை!

ஷா, மெல்லச்சிரித்தபடி கையை நீட்டியதும் சங்கர்லால் கையை நீட்டினார். இருவரும் கை குலுக்கிக் கொண்டார்கள்.

"என் பெயர் சங்கர்லால்" என்றார் சங்கர்லால்.

"தொலைபேசியில் தங்களைப்பற்றிச் செய்தி வந்தது. அதனால்தான் நானே புறப்பட்டு வந்தேன்" என்றார் ஷா.

சங்கர்லாலுக்குக் கொஞ்சம் வியப்பாக இருந்தது. அவருக்குத் தொலைபேசியில் யார் செய்தி கொடுத்திருப்பார்கள்? புரபஸர் தொலைபேசியில் பேசவில்லை. உள்ளே தேநீர் போடப்போன மலர்ச்சோலை ஒருவேளை...

"தேநீர் சாப்பிடுங்கள்" என்று சொல்லி மலர்ச்சோலை எல்லாரிடமும் தேநீர் கோப்பைகளை நீட்டினாள்.

அவள் கொண்டு வந்த தட்டில் நான்கு கோப்பைகளில் தேநீர் இருந்தது.

சங்கர்லாலும் புரபஸரும் ஷாவும் ஆளுக்கு ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டதும், மலர்ச்சோலையும் ஒரு கோப்பையை எடுத்துக்கொண்டாள்.

நான்கு பேரும் இப்போது மூங்கில் நாற்காலிகளில் உட்கார்ந்தபடி தேநீரைப் பருகிக்கொண்டே பேசத் தொடங்கினார்கள்.

"இந்தத் தீவுக்கு நீங்கள் வந்து எத்தனை நாட்கள் ஆகின்றன என்று தெரிந்து கொள்ளலாமா?" என்றார் சங்கர்லால், ஷாவைப் பார்த்து

"சுமார் ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஆராய்ச்சிகள் தொடங்கி ஓர் ஆண்டு ஆகிறது. இப்போது ஆராய்ச்சிகள் முடிந்து எல்லாரும் இந்தத் தீவை விட்டே புறப்படப் போகும் நிலையில் இருக்கிறோம். இந்த நேரத்தில் நீங்கள் வந்து இறங்கினீர்கள்!" என்றார் ஷா.

"ஆனால், இன்னும் இருபத்து நான்கு மணி நேரம் கழித்து வந்திருந்தால் இந்தத் தீவில் நாங்கள் எவரும் இருந்திருக்க மாட்டோம்! இங்கே இருக்கும் ஆராய்ச்சிக் கூடங்களும் கட்டடங்களும் அழிக்கப்பட்டிருக்கும். அதன் பிறகு நாங்கள் எல்லாரும் வெளியேறியிருப்போம்" என்றார் புரபஸர்.

"அப்படியானால் மிகச் சரியான நேரத்தில்தான் நான் வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்!" என்றார் சங்கர்லால் மிகக் கேலியுடன்!

"உண்மைதான் சங்கர்லால்" என்றார் ஷா.

பிறகு, அவர் புரபஸரிடம்–

"தேநீர் பருகியதும் சங்கர்லாலுக்கு ஆராய்ச்சிக் கூடங்களைக் காட்டி, ஆராய்ச்சியைப் பற்றி விளக்குங்கள்" என்றார் ஷா.

புரபஸர் பழமலை நம்பி, சங்கர்லாலை அழைத்துக் கொண்டு ஆராய்ச்சிக் கூடத்தைக் காட்டத் தொடங்கினார்.

"எத்தனையோ ஆண்டுகளாக நான் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தேன். அவையெல்லாம் கடந்த ஓர் ஆண்டில் எனக்கு மிகவும் உதவியாக இருந்தன. பெரும் செலவில் என் மூளையைச் செலவிட்டு இந்த ஆராய்ச்சியைச் செய்தேன். இங்கே இருக்கும் பிராணிகள் எல்லாம் ஆராய்ச்சிகளுக்கு உதவ இறுதியாக வந்தவை. இவற்றுக்கு முன்வந்த பிராணிகள் எல்லாம் ஆராய்ச்சியின் வழியாக இறந்து விட்டன" என்று விளக்கினார் புரபஸர்.

"புரிந்தது. நீங்கள் ஆராய்ச்சி செய்யும் போது ஓர் ஊசியைக் குத்தியதும், அதை வெளியே எடுக்கும் முன்னரே பிராணி இறந்துவிடும். அவ்வளவு கொடிய நஞ்சைக்கண்டு பிடித்திருக்கிறீர்கள் அல்லவா?" என்றார் சங்கர்லால்.

"உண்மைதான் சங்கர்லால்! இந்த மருந்தைக் கண்டு பிடிக்க ஓராண்டு காலம் இந்தத் தீவில் நான் இரவுபகலாக உழைக்க வேண்டியிருந்தது. இறுதியில் வெற்றிகரமாக என் சோதனைகளின் முடிவுகளை ஓர் உறையில் போட்டுப் பாதுகாப்புடன் இரும்புப் பெட்டியில் நேற்று மாலைதான் வைத்தேன். நாளைக்கு இந்தத் தீவுக்குப் பாதுகாப்பு அமைச்சர் வருகிறார். அவரிடம் இதை ஒப்படைத்து விடுவேன். என் பணி முடிந்துவிடுகிறது. அதன் பிறகு நானும் என் மகளும் ஷாவும் எங்கேயாவது கொஞ்ச நாட்களுக்கு ஓய்வு எடுக்கப் போகத் திட்டமிட்டிருக்கிறோம். ஸ்விற்ஸர்லாந்துக்குப் போகவேண்டும் என்று தலைவர் ஷாவுக்கு ஆசை. நாங்கள் எங்கே வேண்டுமானாலும் போகலாம். எந்த நாட்டுக்குப் போக வேண்டுமானாலும் எங்களுக்குத் தடை இல்லை. எல்லா நாடுகளுக்கும் எங்களிடம் பாஸ்போர்ட் இருக்கிறது. பணம் இருக்கிறது. அந்தந்த நாடுகளின் அனுமதி இருக்கிறது!"

"இவ்வளவு சொன்னீர்களே, உங்கள் ஆராய்ச்சியால் நம்நாட்டுக்கு என்ன ஊதியம்? அதை சொல்லவில்லையே!" என்றார் சங்கர்லால்.

தொடரும்...

# அந்தத் துப்பாக்கி பேசுமென்றால்....

நேபாள அரச வம்சத்தை பலி கொண்ட அந்த 'வெள்ளிக்கிழமை இராப் போசனத்தின்' போது உண்மையில் என்ன நடந்தது என்ற மர்மம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.



எவ்வாறெனினும் இதுவொரு அரசியல் சதித்திட்டத்தின் விளைவாக இருந்தாலும் கூட இளவரசர் திபேந்திராவினதும் தேவயாணி ரணாவினதும் காதல் களியாட்டங்களும் இந்த சம்பவத்துக்கு தூண்டுதலாக அமைந்திருப்பதை எவரும் மறுப்பதாக இல்லை.

இவர்களது நீண்டநாள் நீங்காக் காதல் குறித்து பல்வேறு வகையான செய்திகளை இப்போது நேபாளப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

இளவரசர் திபேந்திராவினதும் தேவயாணியினதும் காதலை எப்படியாவது 'கட்' பண்ணிவிட வேண்டும் என்று மகாராணி ஐஸ்வர்யா பல அதிரடித்திட்டங்களை முன்னைய காலங்களிலும் செயற்படுத்தியிருக்கிறார்.

தலைநகர் காத்மண்டுவில் அமைந்திருக்கும் அரச மாளிகைக்கு சமீபமாக உள்ள ரெஸ்டுரன்ட் ஒன்றில் காதலர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் செய்தி அரச குடும்ப வட்டாரங்களில் சகலருக்கும் தெரிந்த இரகசியம்! இது குறித்து தாய் ஐஸ்வர்யா பலமுறை திபேந்திராவை கண்டித்த போதும் வயசுக் கோளாறில் இவை எதுவும் அவரது காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

மகாராணி ஐஸ்வர்யாதான் இவர்களது காதலுக்கு வில்லி! திபேந்திராவை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறார். அமெரிக்கா என்ன காதலர்களுக்கு தடை செய்யப்பட்ட இடமா? மறுநாளே தேவயாணி அங்கே சென்று விட்டார். இதைக் கேள்விப்பட்ட தாயார் திபேந்திராவை திருப்பி அழைத்து பிறகு அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பியிருக்கிறார். அங்கேயும் போய் தேவயாணி ஒட்டிக் கொண்டார்.

இவர்கள் இருவரும் அவுஸ்திரேலிய விடுதிகளில் செய்த அட்டகாசங்கள் எல்லாம் இப்போதுதான் அம்பலத்துக்கு வருகின்றன. இந்த ஜோடிக்குயில்கள் சிட்னி கடற்கரைகளில் மெய்மறந்திருந்த காட்சிகளை அவுஸ்திரேலிய பத்திரிகைகள் விலாவாரியாக விவரிக்கத் தொடங்கியுள்ளன. அரை குறை ஆடைகளோடு நிற்கும் தேவ



யாணியை திபேந்திரா இறுக்கி அணைத்து அழுத்தமாக முத்தமிடுவதைப் பார்த்ததாக பலர் கூறியிருக்கிறார்கள். தேவயாணியின் அழகான சிரிப்பிலும் அவரிடம் இருக்கும் 'வேறு பலவற்றிலும்' திபேந்திரா நீண்ட காலமாகவே கிரங்கிக் கிடந்ததாக காத்மண்டு வாசிகள் கூறுகிறார்கள்.

இந்த காதல் சமாசாரம் அரச குடும்பத்துக்குள் தொடர்ச்சியான அமைதியின்மைக்குக் காரணமாக இருந்து வந்துள்ளது.

போதைப் பொருளுக்கு அடிமையான இளவரசர் திபேந்திரா தாயாரின் அச்சுறுத்தலில் ஆத்திரமடைந்ததால் குடிபோதையில் அனைவரையும் சுட்டுத் தள்ளியிருக்கிறார் என்பதே அநேகமானவர்களின் அபிப்பிராயம்.

ஆனால் இந்த கொலைகள் குறித்து சந்தேகங்களுக்கும் வதந்திகளுக்கும் குறைவில்லை. சம்பவத்தை நேரில் கண்டதாக சாட்சி கூறும் சகலரும் திபேந்திராவே கொலையாளி என்கிறார்கள். இது புதிய மன்னர் கயனேந்திராவின் சதி என்று சொல்பவர்களும் அதற்கான பல ஆதாரங்களை முன்வைக்கிறார்கள்.

அத்தகையவர்கள் சொல்லும் பிரதான ஆதாரம் இளவரசர் திபேந்திராவின் முதுகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகிறது என்பதுதான்.

திபேந்திரா தன்னைத்தானே சுட்டுக் கொண்டிருந்தால் அவரது முதுகில் எப்படி சூடுபட்டது என்பது அவர்களின் கேள்வி. அப்படியாயின் அன்றைய தினம் அரச மாளிகைக்குள் இன்னும் ஒருவரிடம் துப்பாக்கி இருந்திருக்க வேண்டும் அவர் யார்?

இந்தக் கேள்விகளுக்கு இன்னமும் பதிலில்லை. ஒருவேளை இவற்றுக்கான பதில் ஒருபோதுமே கிடைக்காமலும் போகலாம். ஆனால் தமக்கு உண்மை தெரிய வேண்டும் என்று நேபாள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவர்களை சமாளிப்பதற்காக மட்டுமே நடத்தப்படும் விசாரணைகள் பெரிதாக எதையும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்போவதில்லை.

அதைவிட புதிய மன்னரை நேபாள மக்கள் அதிகம் விரும்புவதாக இல்லை. அவரது துர்க்குணங்களால் அந்த நாட்டு மக்கள் ஏற்கனவே வெறுப்புற்றிருக்கிறார்கள். அவர் வேகமாக கார் ஓட்டியதில் பலரை கொன்றிருப்பதாக காத்மண்டு வாசிகள் கூறியிருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் தான் மன்னாக



இருந்ததை அறியாமல் கோமாவில் 3 நாள் மன்னர் பதவி வகித்த ஒரே நபர் என்ற சாதனையுடன் செத்துப்போன திபேந்திராவோடு நேபாள மன்னர் பரம்பரை அழிந்து விட்டதாகவே அந்நாட்டு மக்களில் அநேகமானவர்கள் கருதுகின்றனர்.

நேபாளம் இலங்கையைப் போன்று இரண்டு மடங்கு பெரிய நாடு. 78 சதவீதமான மக்கள் கல்வியறிவு இல்லாதவர்கள். வறியவர்கள். இந்தியாவையும் சீனாவையும் பிரிக்கும் ஒருமதில் சுவர் போல் அமைந்திருக்கும் நேபாளம் 1990 ஆம் ஆண்டு முதல் தீவிரமடைந்து வரும் மாவோ வாதிகளின் ஆயுதப் போராட்டத்தினால் பலத்த அரசியல் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது.

இத்தகையதொரு பின்னணியில் நேபாள மக்களுக்கு இருந்த ஒரே நம்பிக்கை மன்னர் பிரேந்திராதான். இப்போது அவரும் இல்லை. இனிமேல் இந்தியாவுக்கு எதிரான வேலைத்திட்டங்களுக்கு நேபாளத்தை ஒரு தளமாக பயன்படுத்த சீனாவும் பாகிஸ்தானும் தீவிர முயற்சி எடுக்கக்கூடும். இதற்கு வசதியாக அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் ஆயுதக் குழுக்களை ஊக்குவிக்க வெளிநாட்டு சக்திகள் முயற்சி செய்யும். இது நேபாளத்தை மேலும் அதல பாதாளத்துக்கு இட்டுச் செல்லும் என்று தான் அங்குள்ள மக்கள் அஞ்சுகிறார்கள்.

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 57



**யா**ழ்ப்பாணத்தில் கல்வி கற்றோரின் தொகை கணிசமாகப் பெருக்கெடுத்தது. மிஷனரிமாரின் வருகையால் ஆங்கிலப் பாடசாலைகள் மூலைக்குமூலை உதயமாயின. இதனால் சாதாரணமாக எட்டாம் வகுப்பு ஆங்கிலம் படித்துத் தேறியவர்களுக்கே வேலை வாய்ப்பு அதிகம் கிடைத்தது. அரசாங்க இலிகிதர்களாக அரச அலுவலகங்களில் பணியில் சேர்ந்தவர்கள் கனவேகமாகப் பதவி உயர்வு பெற்று முக்கியமான பொறுப்புகளை ஏற்கும் தகுதியைப் பெற்றனர்.

கொழும்பில் மட்டுமல்லாமல் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுள்ள அரசாங்கப் பணிமனைகளில் எல்லாத் தலைமைப் பொறுப்புகளிலும் யாழ்ப்பாணத் தமிழர்களே பொறுப்பேற்றனர். ஆட்சி அதிகாரத்திலிருந்த வெள்ளையர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழரின் நேர்மையும் கடமை உணர்ச்சியும் நன்றாகப் பிடித்துப் போய் விட்டது.

இன்றையக் கல்வியில் பல புதிய பிரிவுகள் புகுந்துவிட்டன. ஆனால் அன்றையக் கல்வியில் ஒரு சில பாடங்களே மாணவர்களுக்குப் புகட்டப்பட்டன. அவ்வாறு புகட்டப்பட்ட கல்வி அறிவு ஆற்றல் மிக்கதாக இருந்தது. சாதாரணமாக அன்று ஏழாம் வகுப்பு வரை ஆங்கிலம் கற்றவர்கள் பெற்றிருந்த ஆங்கில இலக்கிய அறிவு பிற்பட்ட காலங்களில் பல்கலைக்கழகத்தில் படித்த பட்டதாரிகளிடம் இருக்கவில்லை.

பட்டதாரிகள் இக்கூற்றுக்காக நம்முடன் போர் பொருத வரமாட்டார்கள் என்றே நம்புகிறேன். இதற்கான ஒரு சிறு சான்றையும் நான் கூற விரும்புகிறேன்.

எனது மூத்த தமையனார் மட்டக்களப்பில் ஆக ஏழாம் வகுப்பு ஆங்கிலம் படித்தவர். இலண்டன் மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த சில மாணவர்கள் அந்த எழாம் வகுப்பு வரை படித்தவரிடம் ஒவ்வொரு நாளும் ஆங்கில இலக்கியமும் இலக்கணமும் படிப்பதை நேரில் கண்டிருக்கிறேன்.

எனது அண்ணன் யாழ்ப்பாணத்தில் படித்தவரல்ல; மட்டக்களப்பில்தான் படித்தார். ஆனால் அவருடைய ஆற்றலையும் பார்க்க யாழ்ப்பாணத்தில் படித்தவர்களின் ஆற்றல் பலமடங்கு அதிகமாக இருந்துள்ளது.

மட்டக்களப்பில் 'காட்டுத் துண்டையும் மாட்டுக் கண்டையும்' மட்டும் நம்பி போதுமென்ற மனத்துடன் வாழ்ந்து வந்த விவசாயியைப் போலல்லாது, யாழ்ப்பாணத்து விவசாயி சொகுசாக வாழ முடியவில்லை. மிகக் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையிலிருந்தனர்.

யாழ்ப்பாண மண் வளம் மிக உயர்ந்தது. எனினும், அதனைப் பண்படுத்துவதற்கு அதிக பிரயாசை எடுக்க வேண்டியிருந்தது. இலை குழைகளைத் தேடிக் கொண்டு வந்து கற்கள் நிறைந்த நிலத்தைக் கொத்திப் பசளையிட்டுப் பண்படுத்த உழைக்கும் உழைப்பு மிகவும் சிரமமானது. நிலத்தைப் பண்படுத்தினாலும் நீர்பெறுவதும் அதைவிடக் கடினமானது. பகல் முழுதும் துலாவில் ஏறி நின்று நீர் இறைக்க வேண்டும்.

## அபிவிருத்திக்கு அவசியமான பாதை அமைப்பு

இவ்வாறு பெரும்பாடுபடும் விவசாயி தன் பிள்ளைகளுக்கு இத்தகைய கடின உழைப்பைக் கையளிக்க விரும்பவில்லை. நாலெழுத்தைப் படிப்பித்தால், 'கோர்ண மேந்து உத்தியோகம் கிடைத்துவிடும்' என்ற நம்பிக்கையில் தன் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களும் நன்றாகப் படித்தார்கள். நல்ல உத்தியோகம் பெற்றார்கள். வாழ்க்கையில் உயர்ந்தார்கள்.

இதே காலகட்டத்தில் மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஆங்கிலேயர்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டனர்.

இலங்கையில் மலையகத்தில் தேயிலை இறப்பர் தோட்டங்களை உருவாக்க தென் இந்தியாவிலிருந்து கூலிகளாகத் தொழிலாளப் பெருமக்களைக் கொண்டு வந்து சேர்த்தது போல், மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஓரளவு ஆங்கிலம் தெரிந்த யாழ்ப்பாணத் தமிழர்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

மலேசியா, சிங்கப்பூர் சென்றவர்கள் மிக விரைவில் பெரும் தனவந்தரானார்கள். குறிப்பிட்ட காலம் வரை பணி புரிந்துவிட்டு, 'சிங்கப்பூர் பென்ஷனியர்' என்ற சிறப்புப் பட்டத்துடன் தாயகம் திரும்பியவர்கள் நேற்று வரை செல்வச் சீமான்களாக வாழ்ந்தனர்.


ஆங்கிலக் கல்வியில் ஓரளவு ஈடுபாடு கொண்ட யாழ்ப்பாணத்து மக்கள் ஓரளவு அரசியல் ஞானம் பெறத் தலைப்பட்டனர். தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சிந்தனைக்கு ஈடாக யாழ்ப்பாணத்திலும் அத்தகைய எண்ணங்கள் ஊற்றெடுத்தமையினால், அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களில் அரசியல் நோக்கங்கள் வேரோடித் தளைக்கலாயிற்று.

எதிர்காலத்தில் இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் தீமையை தீர்க்க தரிசனமாக அவர் கண்டார். இருப்பினும் சாதாரண பாமர மக்களிடம் திரு.பொன்னம்பலத்தின் அரசியல் கருத்துக்களை ஆழமாக விதைக்க முடியவில்லை.

இலங்கை அரசாங்க சபை-STATE COUNCIL- ஆட்சி முறை நீக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சி முறை ஏற்பட ஆயத்தங்கள் எடுக்கப்பட்டபோது திரு.பொன்னம்பலம் தனது ஐம்பதுக்கு ஐம்பது கொள்கையை தமிழ் மக்களிடம் விரிவுபடுத்த எடுத்த முயற்சி போதுமான பலனை அளிக்கவில்லை.

திரு.வி.நல்லையா அவர்களைப் போன்ற ஓரளவு படித்தவர் மட்டக்களப்பின் பிரதிநிதியாக இருந்தமையினால் அவரையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள திரு.பொன்னம்பலம் அவர்கள் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. சகலதுறையிலும் பின் தங்கிய நிலையிலிருந்த மட்டக்களப்பு ஆட்சியிலிருக்கும் ஆளும் கட்சியுடன் உறவாடினால் மட்டுமே ஓரளவு முன்னேற முடியும் என்று அவர் கருதினார். இதனால் திரு.நல்லையா அவர்களையே தமது வழிகாட்டியாகக் கருதிய மட்டக்களப்பு மக்கள் எவரும் திரு.பொன்னம்பலம் அவர்களைப் பின்பற்ற விரும்பவில்லை.

மட்டக்களப்பு இம்பீரியல் படமாளிகையில் (இன்றைய 'சுபராஜ்') திரு.பொன்னம்பலம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்க் காங்கிரஸ் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.



கல்லடிப் பாலம்

இலங்கையில் பெரும்பாலான பிரதேசங்கள் அபிவிருத்தி குன்றிய நிலையிலேயே இருந்தன. மலையகத்தில் கோப்பித் தோட்டங்களைப் போட்டு கோப்பியை அதிகமாகப் பயிரிட்டு அதன் மூலம் கொழுத்த இலாபம் அடைய ஆங்கில அரசு திட்டமிட்டது. மலையகப் பிரதேசத்தில் போக்குவரத்து செய்வதற்கேற்ற சீரான பாதைகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு இருந்தது. கரடுமுரடான மலைகளைக் கொத்திச் சீராக்கி பாதைகளை அமைக்கவும் கோப்பித் தோட்டங்களை உருவாக்கவும் பாடுபட்டு உழைக்கக்கூடிய தொழிலாளர்களை இலங்கையில் பெறுவது முடியாத காரியமாக இருந்தது. இதற்காக தென்னிந்தியாவிலிருந்து ஏராளமான வறிய மக்களை, வசதியான தொழிலும், போதுமான வருவாயும் தருவதாக வாக்களித்த வெள்ளை நிருவாகம் இலங்கைக்குத் தருவித்தது.

தென்னிந்தியாவிலிருந்து அப்போது கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களின் கடுமையான உழைப்பின் பயனாக மலையகம் அபிவிருத்தி அடையத் தலைப்பட்டது.

கோப்பித் தோட்டங்கள் எதிர்பார்த்த பலனைத் தராதமையினால் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை வெள்ளையர் உருவாக்கினர்.

மிகக் குறைந்த கூலியைக் கொடுத்து அதிக பலனை வெள்ளையர் அடைந்தனர். மேலை நாடுகளுக்கெல்லாம் தேயிலை, இறப்பரை ஏற்றுமதி செய்து ஏராளமான பணத்தைக் குவித்தனர்.

மலையகத்தில் விளையும் தேயிலை, இறப்பரை மிக வேகமாக கொழும்புக்கு எடுத்து வந்து அவற்றைக் கப்பல்களில் ஏற்றி அனுப்புவதற்கு வசதியாகவே மலையக நகரங்களிலிருந்து கொழும்பு நகருக்கு வரும் பாதைகள் மிகச் சீராக அமைக்கப்பட்டன.

அன்று தென்னிந்திய தொழிலாளர்களால் பல சிரமங்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட வீதிகளே இன்றுவரை நம் நாட்டின் பொருளாதார வளத்துக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

இப்பாதைகளை அமைத்ததைத் தொடர்ந்து புகையிரதப் பாதையை அமைப்பதற்கும் இந்தியத் தொழிலாளப் பெருமக்களே பேருதவிகளைப் புரிந்திருக்கின்றனர்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி அந்தப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் போக்குவரத்துக்கான சீரான பாதைகளைப் பொறுத்தே செம்மையாக வளர முடியும். காலி நகரிலும் ஒரு துறைமுகம் இருந்தமையினாலும் திருகோணமலையிலும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தமையினாலும் இவ்விரு நகரங்களுக்குமிடையில் வீதிகள் அமைக்கப்பட்டன. யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்புக்கு வருவதற்கு வீதியும் புகையிரதப் பாதையும் அமைக்கப்பட்டன. இதன்மூலம் தலைநகரான கொழும்பிலுள்ள அரசாங்க அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்துக்கு யாழ்ப்பாணத்துக்கான பாதைகள் பெரிதும் உதவின.

## இரா.பத்மநாதன்

மட்டக்களப்புப் பிரதேசம் போதுமான அளவு அபிவிருத்தி அடைய முடியாமல் இருந்து வந்தது. நெல் விளைச்சலைத் தவிர அந்நிய நாட்டுச் செலாவணியை கொட்டிக் கொடுக்கும் விளை பொருட்கள் எதுவுமிருக்கவில்லை. எனவே மட்டக்களப்பு நகருக்கு வாகனங்கள் நேரடியாகச் செல்வதற்கு ஏற்றபாதை அப்போது இருக்கவில்லை.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து, நகருக்கு அணித்தாக உள்ள கல்லடி உப்போடை போன்ற ஊர்களுக்கு நகரத்திலிருந்து தோணிகள் மூலமும், பாதை மூலமும் மட்டக்களப்பு வாவியைக் கடந்து செல்ல வேண்டிய நிலை இருந்தது. இதற்கென நீரில் கடந்து செல்வதற்கேற்ற பாதை வந்து சேர்வதற்கேற்ற இறங்குதுறை இன்னும் மட்டக்களப்பு கச்சேரியின்-டச்சுக் கோட்டையின் கிழக்கே அமைந்திருப்பதை காணலாம்.

மட்டக்களப்பு தென் பிராந்தியத்தை மட்டக்களப்பு நகருடன் இணைப்பதற்கான ஒரு பாலம் 1924ம் ஆண்டு தான் அமைக்கப்பட்டது. அரசாங்க சபையில் திரு.நல்லையா அவர்களுக்கு முன்னர் பிரதிநிதியாகவிருந்த திரு.ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்களின் விடா முயற்சியின் பயனாகவே கல்லடிப் பாலம் உருவானது. இதன் பின்னரே மட்டு நகரிலிருந்து தென் கோடியில் இருக்கும் பொத்துவில் போன்ற இடங்களுக்கு மோட்டார் வாகனங்களில் நேரடியாகச் செல்வதற்கு வசதி கிடைத்தது.

கொழும்பு நகரிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு நேரடியாகச் செல்வதற்கேற்ற பாதையை அமைப்பதற்கு திரு.நல்லையா அவர்கள் பெரும் முயற்சி எடுத்தார்கள். மலை நாட்டிலிருந்து ஊற்றெடுத்து கிழக்கே பாயும் மகாவலி நதி மன்னம்பிட்டிப் பகுதியை ஊடறுத்துச் செல்கிறது. இந்த நதியின்மீது இரயிலில் பயணம் செய்வதற்கு ஏற்ற வகையில் ஒரு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு மோட்டார் வாகனத்தில் செல்பவர்கள் மன்னம்பிட்டியில் தங்களது வாகனங்களை இரயிலில் ஏற்றி வாழைச்சேனை இரயில் நிலையத்தில் வாகனத்தை இறக்கிக் கொண்டுதான் பயணத்தைத் தொடர முடியும்.

இந்தச் சிரமத்தை நீக்குவதற்கு மகாவலி நதிக்கு மேலாக அமைக்கப்பட்டிருந்த-இரயில் மட்டும் செல்லக்கூடிய பாதையை மோட்டார் வாகனங்களும் செல்லக்கூடிய நிலைக்கு மாற்றியமைத்த பெருமை திரு.நல்லையா அவர்களையே சாரும். மகாவலி நதி மன்னம்பிட்டியில் குறுக்கிடுவதுபோல வாழைச்சேனையயை ஒட்டி மட்டக்களப்பு வாவியும் குறுக்கிடுகிறது. இந்த வாவியை இரயில் மூலமும் மோட்டார் மூலமும் கடப்பதற்கேற்றவாறு ஓட்டமாவடியில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தில் வசதியிருந்தது.

அபிவிருத்தி அடையாத பிரதேசங்களில் ஏதாவது அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமானால் அப்பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் ஆளுங் கட்சியுடன் ஒத்துழைப்பவர்களாகவே இருக்க வேண்டும் என்ற நியதி அப்போதிருந்தது என்பதை மறுக்க முடியாது. இதன் காரணமாகவே திரு.நல்லையா போன்றோர் ஆளுங்கட்சியைப் பகைக்காமல் ஐ.தே.கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருக்க நேர்ந்தது.

**(இன்னும் வரும்)**

# வாரம் ஒரு வார்த்தை!



**தென்கச்சி – கோ. சுவாமிநாதன்**

**20 அணுகுமுறை**

அடுத்தவங்க மனசு புண்படாமே நடந்துக்கறதுங்கறது ஒரு தனிக் கலை.

இந்த உலகத்துலே எல்லாரும் இது ஒரு விஷயத்தை மட்டும் சரியா கடைபிடிச்சா போதும். எல்லாரும் சந்தோஷமா இருந்துட்டுப் போயிடலாம்.

இதைவிட பெரிய கலை ஒண்ணு இருக்கு. அது எது தெரியுமா?

ஒருத்தர் ஒரு தவறு செஞ்சுடறார், அவர் செஞ்ச தப்பை அவருக்கு நாசூக்காக சுட்டிக் காட்டணும்!

அதே நேரத்துலே அவங்களுக்கு நம்ம மேலே கோபமோ வருத்தமோ வரக் கூடாது! இது ஒரு தனிக் கலைதான்,

சில பேருக்கு இது கை வந்த கலையா இருந்திருக்கு. அவங்கள்லாம் வாழ்க்கையிலே வெற்றிகரமா இருந்திருக்காங்க!

'சார்லஸ் ஸ்வாப்' அப்படின்னு ஒருத்தர். பல இரும்பு ஆலைகளுக்குச் சொந்தக்காரர் அவர். சிறந்த நிர்வாகின்னு பேரு எடுத்தவர். பகல் உணவு சமயத்துலே தொழிற்சாலையை சுத்திப் பார்த்துட்டு வரலாம்ன்னு புறப்பட்டார். அவர் பாட்டுக்கு ஒவ்வொரு இடமா பார்த்து கிட்டு போயிகிட்டே இருந்தார். ஒரு இடத்துலே-

தொழிலாளர்கள் சில பேரு இயந்திரங்களுக்குப் பக்கத்துலேயே நின்னுகிட்டு புகைப் பிடிச்சிக்கிட்டு இருந்தாங்க! அவங்க தலைக்கு மேலேயே ஒர் அறிவிப்பு பலகை. அதுலே என்ன எழுதியிருக்கு தெரியுமா?

"இங்கே புகை பிடிக்காதீர்கள்!" அப்படின்னு எழுதியிருக்கு! அந்த இடத்துலே-செய்யக்கூடாத ஒரு காரியத்தை அவங்க செஞ்சிக்கிட்டிருக்காங்க!

ஆலை அதிபர் இதைப் பார்த்தார். அவர் கொஞ்சம் கூட கோபப்படலே! கத்தலே! அவர் என்ன பண்ணினார் தெரியுமா?

தன்னுடைய பையிலே இருந்த விலை உயர்ந்த சுருட்டுப் பெட்டியை எடுத்தார். அதை எடுத்துப் பிரிச்சார். ரொம்ப உயர்ந்த ரக சுருட்டு! அங்கே இருந்த தொழிலாளிகள் எல்லாருக்கும் ஆளுக்கு ஒண்ணு கொடுத்தார்.

கொடுத்துட்டு சொன்னார்:

"இது ரொம்ப அருமையான சுருட்டு.. பிடிச்சுப் பாருங்க! அப்புறம் சொல்லுங்க! ஆனா ஒண்ணு! இதை நீங்க இங்கேயே புகைக்கவேணாம், வெளியே போயி புகைச்சிப் பாருங்க!"

இப்படி சொல்லிபுட்டு அந்த இடத்தை விட்டுப் போயிட்டார். அதுக்கப்புறம் அவங்க அந்த தப்பை செய்யலையாம்! நமக்குலாம் இது மாதிரி ஒரு காட்சியைப் பார்த்தா உடனே கோபம் வந்துடும். அதுதான் கஷ்டம்.

பிரபலமான ⁘போட்டோகிராபர் ஒருத்தர் இருந்தார். பிரபலமான நடிகையை ⁘போட்டோ எடுக்கறதுக்காக போனார். ⁘போட்டோ எடுத்தார். அதை பிரிண்ட் போட்டு கொண்டு போய் கொடுத்தார்.

அந்த அம்மா வாங்கிப் பார்த்தாங்க! அவங்களுக்கு ஒரே கோபம்! ⁘போட்டோ நல்லா இல்லையாம்!

"நீங்க அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தரம் என்னை ⁘போட்டோ எடுத்தீங்க! அது அழகா இருந்தது! அது மாதிரி இது அழகா இல்லியே"ன்னு சத்தம் போட்டாங்க!

⁘போட்டோகிராபர் மனசுக்குள்ளே நினைச்சிக் கிட்டார், அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இந்த அம்மா இளமையா இருந்தாங்க! அதனாலே ⁘போட்டோவுலே அழகா இருந்தாங்க. இப்போ வயசாயிட்டுது! அது யாரோட குற்றம்! இதை மனசுலே நினைச்சிக்கிட்டார். ஆனா அந்த அம்மாகிட்டே இவர் என்ன சொன்னார் தெரியுமா?

"சாரி மேடம்! அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நான் இதைவிட இளமையா இருந்தேன்! இப்போ வயசாயிட்டுது! அதனாலே முன்னாடி மாதிரி திறமையா படம் எடுக்க முடியலேன்னு நினைக்கிறேன்!" அப்படின்னாராம்.

அவ்வளவுதான்!

அந்த அம்மா அதை ஒத்துக்கிட்டு சமாதானமாயிட்டாங்களாம்!

இதுதான் நான் சொன்ன அந்த 'தனிக் கலை'.

ஆனா ஒரு விஷயம்.

இந்தக் கலையை சாமர்த்தியமா பயன்படுத்தறதும் ஒரு கலை, சாமர்த்தியமா பயன்படுத்தலேன்னா என்ன ஆகும் தெரியுமா?

என் ⁘பிரண்டுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்!

அவன் என்ன பண்ணியிருக்கான்...?

ஒரு நாளு காலையிலே எழுந்திரிச்சி உக்காந்திருக்கான். அவன் மனைவி காப்பி போட்டுக் கொண்டாந்து குடுத்திருக்காங்க! காப்பி நல்லாவே இல்லே! இதை நாசூக்கா-மனைவி மனசு புண்படாமே சொல்றது எப்படின்னு யோசிச்சிருக்கான்! நான் சொன்ன யோசனை ஞாபகத்துக்கு வந்திருக்கு. உடனே அதை பயன்படுத்தியிருக்கான் எப்படி தெரியுமா?

"நீ கொடுத்த காப்பி நல்லா இல்லே"ன்னு சொல்றதுக்குப் பதிலா இப்படி சொல்லியிருக்கான்:

"இதோ பாரு டார்லிங்! நேத்திக்கு காலையிலே இந்த தெரு முனையிலே இருக்கிற கடையிலே ஒரு டீ குடிச்சேன். ரொம்ப நல்லா இருந்துது!"ன்ன சொல்லியிருக்கான். அவ்வளவு தான். விளைவு என்ன தெரியுமா?

"அப்படின்னா நீங்க தினமும் அந்த தெருமுனை கடையிலேயே டீ குடிச்சிக்குங்க! வீட்டுலே காப்பி கிடையாது!"ன்னு செல்லிபுட்டாங்க!

இப்பல்லாம் தினமும் காலையிலே அந்த தெருமுனை டீக்கடையிலே அவனை தவறாமே சந்திக்கிறது உண்டு! இப்ப அவன் என்கிட்டே முகம் கொடுத்து பேச மாட்டாங்கறான். என் யோசனையையும் கேட்க மாட்டேங்கறான்!

**(வார்த்தைகள் தொடரும்)**

# பிராயச்சித்தம்



**பாலா-சங்குபிள்ளை**

சுப்பையாவுக்கு கையும் ஓட வில்லை-காலும் ஓட வில்லை. அவரின் மூத்த மகள் கண்மணியை இன்று பெண் பார்க்க வருகிறார்கள். ஏற்கனவே நான்கைந்து இடங்களிலிருந்து கண்மணியை பெண் பார்த்துகச் சென்று விட்டார்கள். ஆனால் எதுவும் அமையவில்லை. கண்மணி நல்ல அழகானவள். நன்றாக படித்தவள். ஆசிரியையாக இருந்தவள். ஆனால்-அவள் காலொன்று ஊனம். விந்திவிந்திதான் நடப்பாள். அது பிறவியில் வந்த ஊனமல்ல. ஒரு விபத்தில் ஏற்பட்ட ஊனம். அவள் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயின்ற போது அவளுடன் ஒன்றாக பயின்றவன் தான் ஆனந்தன். ஆனந்தன் நல்ல வசதியுள்ளவன். அவன் தந்தை ஓர் அரசாங்க உயரதிகாரி. கார், பங்களாவென்று வசதியானவன். பொழுதுபோக்குக்காக ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்தான். பலரைக் காதலித்தான். பின்னர் கைவிட்டான். புதிது புதிதாகத் தேடினான். அவனுடைய தேடல்களுக்கு இந்த தொழில் பெரும் உதவியாக இருந்தது. அதிலும் கலாசாலை அவனுக்கு கலகலப்பாகியது. புதியவர்களை பகிடிவதை என்ற பெயரில் பல்வேறு வகையில் இன்னல்களுக்குள்ளாக்கினான். மாலை வேளையில் முழுப் போதையில் அட்டகாசம் செய்யும் அவனை தட்டிக் கேட்பதற்கு யாருக்கும் துணிவிருக்கவில்லை. இப்படியிருக்கையில்தான் கண்மணி அங்கே பயிற்சிக்காக வந்து சேர்ந்தாள். கண்மணியை அவன்-பகிடிவதை செய்தான். அவளின் அழகு அவனை நிலைதடுமாற வைத்துவிட்டது. அவளை எப்படியும் வளைத்துவிட நினைத்தான். ஆனால் அவனைக் கண்டாலே கண்மணிக்குப் பிடிக்கவில்லை. நாட்கள் ஓடின. ஆனந்தன் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டான். என்னவெல்லாமோ செய்துப் பார்த்தான். ஆனால் எதுவுமே பலிக்கவில்லை. அவனைக் கண்டாலே அவள் பேயைக் கண்டவளைப் போல விலகி ஓடினாள். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருமுறை விழாவொன்றில் வைத்து அவளுடன் தவறாக நடக்க முற்பட்டவனுக்கு சட்டென தன் செருப்பைக் கழற்றி அடித்ததுடன், படபடவென எல்லோர் முன்னிலையிலும் அவனைக் கடுமையாக ஏசிவிட்டாள். அவனுக்கு பெருத்த அவமானமாகிவிட்டது. எந்த பெண்ணிடமும் அவன் இவ்வளவு மோசமாக அவமானப்பட்டதில்லை. கண்மணி அவனுக்கு ஒரு சவாலாகி விட்டாள். அவளை எந்த விதத்திலாவது அடைந்துவிட அவன் துடித்தான். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. என்னவானாலும் கவலையில்லை. நினைத்ததை சாதித்தேயாக வேண்டும். அவன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தான்.

அன்று கலாசாலையில் ஒரு கலை விழா ஏற்பாடாகியிருந்தது. அடுத்த இரண்டு தினங்கள் விடுமுறை. எனவே விடுதியில் தங்கியிருந்தவர்கள் விழா முடிந்ததும் வீட்டுக்குச் செல்ல இருந்தார்கள். கண்மணியும் விடுதியில்தான் தங்கியிருந்தாள். விழா முடிய மிகவும் நேரமாகி விட்டது. அன்று மழை வேறு விடாமல் கொட்டியது. கண்மணி சக ஆசிரியர்களுடன் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்தாள். இருட்டத் தொடங்கியது. ஒவ்வொருவராக பஸ் கிடைக்க, அவளிடம் விடைப் பெற்று போகத் தொடங்கினார்கள். கடைசியாக அவள் மட்டும் தனியாக நின்றிருந்தாள். அவளுக்குரிய பஸ் வரவில்லை. அப்போது-சட்டென அவளருகில் ஒரு கார் வந்து நின்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் காரின் பின் கதவு திறக்கப்பட ஆனந்தன் அவளை பலவந்தமாக உள்ளே இழுத்தான். அவள் திமிறினாள். சத்தமிட்டாள். ஆனால் பயனில்லை- கார் வேகமாக ஓடியது. காரின் பின் இருக்கையில் பயத்தில் கூனி குறுகி அமர்ந்திருந்த கண்மணியை வெற்றிப் பெருமிதத்துடன் ஆனந்தன் பார்த்தான்...

"என்ன கண்மணி இப்போ என்ன செய்யப்போறே... இந்த சந்தர்ப்பத்துக்காகத்தான் நான் இவ்வளவு நாளா காத்திருந்தேன். இன்றைக்கு என் ஆசை நிறைவேறப் போகுது. என்னை எப்படியெல்லாம் அவமானப்படுத்தினே. இந்த விஷயத்தை வெளியே சொன்னா உனக்குத்தான் அவமானம். அப்படியே சொன்னாலும் என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது. என்கிட்ட பணம் இருக்கு.. செல்வாக்கு இருக்கு..."

அவன் சொல்லிக் கொண்டே போனான். காரை ஓட்டிக் கொண்டிருந்தது அவனுடைய நண்பன். கண்மணி என்ன செய்வது என்று யோசித்தாள். இந்த கயவனிடமிருந்து எப்படித் தப்புவது. சட்டென அவளுக்கு ஞாபகம் வந்தது. அவளுடைய கைப்பையில் ஒரு கத்தரிக்கோல் இருந்தது. புத்தம் புதியது. அம்மாவுக்காக வாங்கியது. அவள் மெதுவாக அதை எடுத்தாள்.

கண்மணி சட்டென சிந்தனைக் கலைந்தாள். அன்று-ஓடிக் கொண்டிருந்த காரிலிருந்து அவள் கதவைத் திறந்துக் கொண்டு வெளியே குதித்தாள். கழுத்தில் காயப்பட்ட ஆனந்தன் அலறினான். காரோட்டிக் கொண்டிருந்த ஆனந்தனின் நண்பன்-அதிர்ச்சியுடன் பின்னால் திரும்பிப் பார்த்தான். அவ்வளவுதான் கார் நிலை தடுமாறி அந்தப் பெரிய பள்ளத்தில் விழத் தொடங்கியது. கண்மணி காலில் ஏற்பட்ட உயிர் போகும் வலியுடன் நடந்தாள். இடையில் வந்த ஒரு பயணிகள் வேன் ஒன்றில் ஏறினாள். அவள் கால் எலும்பு முறிந்ததால், ஆறுமாதங்கள் வைத்தியசாலையில் இருந்தாள். நடந்த சம்பவத்தை யாரிடமும் சொல்லவில்லை. அதற்குப் பின் கலாசாலைக்கும் செல்லவில்லை. முடமான அவள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். தன் எதிர்காலத்தை எண்ணி தினமும் கண்ணீர் வடித்தாள். அவளுக்கு பார்க்கப்பட்ட வரன்கள் யாவரும் அவளின் ஊனத்தை மட்டுமே பார்த்து ஊமையாகிப் போனார்கள். சிலர் ஊனத்துக்கு விலை பேசினார்கள். "கண்மணி என்ன யோசனை. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க.. வா...வா..."

கண்மணி-நம்பிக்கையிழந்தவளாக தேநீர் கோப்பைகளுடன் விந்தி விந்தி நடந்தாள். அவளின் அம்மா துணையாக வந்தாள். மாப்பிள்ளை அழகாகத்தான் இருந்தார். ஆனால் அந்த முகத்தை இதற்கு முன்னர் எங்கேயோ பார்த்ததைப் போல இருந்தது. மாப்பிள்ளையின் தந்தை சுப்பையாவைப் பார்த்தார். "இங்கு பாருங்க சுத்தி வளைச்சி பேச நான் விரும்பலை. இங்க பொண்ணுப் பார்க்கணும்னு பிடிவாதம் பிடிச்சதே என் மகன் பாபுதான். உங்க மகளை இவனுக்கு ஏற்கனவே தெரியுமாம். உங்க மகளோட இந்த ஊனத்தைப் பத்தியும் அவனுக்குத் தெரியுமாம். எங்க மகனோட விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம்... என்ன உங்களுக்கு சம்மதம் தானே...?"

சுப்பையாவால் எதுவும் பேச முடியவில்லை. கண்மணி கண்களில் வடியும் ஆனந்த கண்ணீருடன் அவர்களை கையெடுத்து கும்பிட்டாள். தனக்கு வாழ்வளித்த தெய்வமாக அவனை எண்ணினாள். ஆனால்- கார்விபத்தில் உயிருக்காகப் போராடிய ஆனந்தன் தன் தவறினை உணர்ந்து உண்மைகளையெல்லாம் தன் தம்பி பாபுவிடம் கூறி விட்டு இறந்து விட்டதும்-அண்ணன் செய்த பாவத்துக்கு-பிராயச்சித்தம் செய்ய தானே கண்மணியை மணம் முடிக்க மனப்பூர்வமாக முடிவு செய்துக் கொண்டதையும் அவன் யாரிடமும் சொல்லவில்லை. திருமணத்துக்குப் பின் சில வேளைகளில் உண்மைகள் வெளியாகலாம். ஆனால் அதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை-அவன் கண்மணியை தன் கண்ணைப் போல காப்பான் என்பதில் மட்டும் யாதொரு சந்தேகமும் இல்லை. ●

# அமைதி தேடும் நெஞ்சம்



**அல்வையூர் காந்தி அருணாசலம்**

என்ன பிள்ளையள், எப்பிடி இருக்கிறியள்? நான் தான் உங்கட மீனாட்சிப் பாட்டி. நானும் இந்தக் கனடாக் குளிரிலை ஒடுங்கிப் போய் ஒரு மூலைக்கை கிடந்திட்டு இப்ப தான் கொஞ்சம் குளிர் குறைஞ்சதிலை தலைய நிமித்தி இருக்கிறன். எத்தினையோ விசயத்தை உங்களோடை மனம் விட்டுக் கதைக்க வேணுமெண்டு நெஞ்சு கிடந்து துடிக்கும். பிறகு ஏலாமல் விட்டிடுவன். வயசும் என்ன குறைவே? குளிரைத் தாக்குப் பிடிக்க இந்த உடம்புக்கு எங்க மோனை வலுவிருக்கப் போகுது? என்ரை உடம்பு தான் கெட்டுப் போச்சே ஒழிய இந்த மனசிருக்கே மனசு, அது அந்த இளமைக் காலத்திலை துள்ளின துடிப்போடை தான் இப்பவும் லப்பு டப்பெண்டு லாடம் கட்டின குதிரை மாதிரி படுவேகமா ஓடுது. அதிலை உங்களை நினைச்சுக் கொள்ளுவன். சும்மா கணக்கு விடுறன் எண்டு மட்டும் நினையாதேங்கோ பிள்ளையள். எப்பிடித்தான் இந்தக் கனடா மண் என்னைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாலும் இந்தப் பாழாப் போன மனசு பெத்த தாயைத் தேடின மாதிரியெல்லோ என்ரை நாட்டைத் தேடி ஓடுது. சில வேளையிலை நன்றி மறந்தவளாயிட்டேனோ. இந்த நாடும் எனக்கு ஒரு குறையும் இல்லாமல் காசும் தந்து, மருந்தும் தந்து நல்ல வடிவாப் பாக்குது தானே, இதை மாற்றாந்தாய் மாதிரிப் பார்க்கிறது பிழையெண்டு குற்ற உணர்வு குடையும். இந்த மனசுக்கு சில வேளையிலை ஞாயம் சொல்லிப் புரிய வைக்கேலாது கண்டியளோ? 'அது என்ரை மண், என்ரை சனம்' எண்டு உங்க தான் செட்டை கட்டிக் கொண்டு பறக்குது. நான் என்ன தான் செய்ய முடியும்?

அது சரி, இந்தக் கிழவியின்ரை கதை கிடக்கட்டும். உங்கையும் கொஞ்சம் சமாதானம் வாற மாதிரி ஒரு வெளிச்சம் தெரியுது போலை. என்ரை அல்வாய் அம்மாளாச்சி! நினைக்கச் சந்தோசமாய்க் கிடக்கு. எல்லாம் கடைசி மட்டும் நல்லா நடக்க வேணும் தாயே! உவர்தான்... உந்த நோர்வேக்காறன்.. பேரும் வாய்க்குள்ளை வராதாம். எரிச் சொல்செயுமோ என்ன கருமமோ.. மனுசன்ரை பேர் தான் வில்லங்கமாக் கிடக்கே ஒழிய ஆள் தங்கக் கம்பி. ஒரு நாட்டுக்கை இருக்கிறவனே மற்றவனைப் பாவம் பரிதாபம் பாராமல் நரபலி எடுக்கிறான். இவன் என்னடாவெண்டால் எங்கையோ கிடந்த வெள்ளைத் தோல், வேற்றுமொழிக்காரன் எங்கடை நாடு அமைதியாயிருக்கோணுமெண்டு எப்பிடிக் கஷ்ரப்படுறான் பார்த்தியளே? என்ரை ஈஸ்வரா! அது போதாதெண்டு அந்த மனுசன்ரை மூக்கை உடைக்கிற மாதிரியல்லோ எங்கடை நாட்டுக்காறன் கேலி வேறை பண்ணிப் பாக்கிறான். ஆனால் அதொண்டையும் காதிலை போட்டுக் கொள்ளாமல் கருமமே கண்ணாயிருக்கிறானே மனுசன். உதுக்கு எவ்வளவு பெருந்தன்மையும், மனப்பக்குவமும், பரந்த சிந்தனையும் வேணும் தெரியுமே?

ஒரு நாட்டுக்கை ஆண்டாண்டு காலமா இருந்து கொண்டு ஒரே நிறத் தோலையும் வைச்சுக் கொண்டு, கொஞ்சம் மொழியை வித்தியாசமாப் பேசுறதுக்கே நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் பரம வைரியாப் போனம். இப்ப ஆரோ ஒரு வெள்ளைத் தோல்காறன் கஷ், புஷ் எண்டு நுனி நாக்கிலை ஏதோ புரியாத மொழியைப் பேசுறவன், வேளை சாமியைக் கும்பிடுறவன்தானே எங்கடை அமைதியான வாழ்க்கைக்காக வில்லங்கப் படுகிறான்? இதை நினைச்சால் வெக்கப்படுகிறதா? வேதனைப்படுகிறதா எண்டே தெரியேல்லை.

நான் கனடாவுக்கு வந்த புதிசிலை விதம் விதமான நாட்டிலை இருந்து சனங்கள் இஞ்சை வந்து ஒரே இடத்திலை ஒற்றுமையா இருக்கிறதைப் பார்த்து எப்பிடி அதிசயப்பட்டனான் தெரியுமே? உள்ளூர எங்கடை நாட்டிலையும் இப்பிடியிருந்தால் எவ்வளவு நல்லாயிருக்குமெண்டு அடி மனசு ஏங்கித் தவித்ததை இப்ப உங்களுக்குத் தான் சொல்லுறன். அடாடா நிறத்திலை தான் எத்தனை வகை தெரியுமே? கறுப்பு, சிவப்பு, மண்ணிறம், வெள்ளை, றோஸ் என்று விதம் விதமான தோல்கள்! ஆனால் அதுகள் ஒருத்தரையொருத்தர் மதிச்சு நடந்ததைத்தான் கண்டிருக்கிறனே ஒழிய, மிதிச்சு நடந்ததை நான் வந்த இந்த நாலுவரியத்திலை காணேல்லை.

சொன்னால் நம்ப மாட்டியள் மோனை. இஞ்சை எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை ஒரு குடும்பம் இருக்கு. றோசாப்பூ நிறத்திலை அவள் பொடிச்சி. தோளோடை வெட்டி விட்ட அந்த மினுமினுத்த மண்ணிற மயிரும், விலை உயர்ந்த நீலக் கல்லைப் போல பளபளவெண்டு ஜொலிக்கிற அந்தக் கண்களும்! அடஅட அப்படி ஒரு அழகு பாருங்கோ. சொல்லுறன் எண்டு என்னைத் தப்பா நினைக்காதேங்கோ மோனை, அந்தப் பொடியன் இருக்கிறானே அவன் தான் அந்தப் பொடிச்சியின்ரை மனுசன் அவனைப் பார்த்தால் எனக்கே ஒரு மாதிரி இருக்கும். அப்பதான் றோட்டிலை ஊத்தி விட்ட தாரிலை குளிச்சிட்டு வந்தவன் மாதிரி ஒரு கரிச்சட்டி நிறம். மயிரும் வளையம் வளையமா சுருண்டு போய் மண்டையோடை ஒட்டிக் கிடக்கும். ஏதோ மல்யுத்தக்காரன் போல உடம்பும் உயரமும்... அம்மாடியோவ்! பார்க்கவே பயங்கரமான தோற்றம்! ரெண்டும் தோளிலை கையைப் போட்டுக் கொண்டு சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டு போகுங்கள். அப்பிடியே கோப்பியையும் பாலையும் பக்கத்திலை பக்கத்திலை பாத்த மாதிரி. கூடவே ஒரு குழந்தையும் துள்ளிக் கொண்டு போகும். என்ன வடிவண்டிறியள்? தாயின்ரை றோசாப்பூ நிறமும் நீலக்கண்ணும் பளிச்சிட, அப்பாவின்ரை சுருட்டை மயிரும் கொழுக் மொழுக் கெண்ட உப்பிய கன்னமுமாக ரெண்டு பேரையும் கலந்தடிச்சமாதிரி பொம்மை போல ஒரு குட்டிப் பெண்! நாலு பொடியனையும் எட்டுப் பேரப் பொடியனையும் கண்ட எனக்கே அந்தப் பொடியைப் பார்த்தால் கண்ணை அங்கை இங்கை எடுக்க மனம் வராதெண்டால் பாருங்கோவன்.

நான் ஏன் இப்ப இதைச் சொல்ல வாறனெண்டால் எங்களாலை இப்பிடி ஒரு வாழ்க்கையை கற்பனையிலைகூட சகிக்க முடியாது. நானுந்தான் என்ரை இளையவன் ஒரு வெள்ளைக்காரியைக் கட்டினவுடனை இந்த வெக்கக் கேட்டை விட இந்தச் சீவனை விட்டால் என்னெண்டு எவ்வளவு வேதனைப்பட்டன் தெரியுமே? என்ரை மனுசன் சீவனோடை இருக்கு மட்டும் கதை, பேச்சு, கடிதம் எண்ட எந்தத் தொடர்பும் இல்லை. இப்ப கொஞ்சக் காலமாத்தான் நானும் கதைக்கத் தொடங்கினனான். அதுவும் பேரன் எங்கடை தோலோடை அசல் என்ரை மகனைப் போல பிறந்த சந்தோசத்திலை கதைச்சன். உங்களுக்கு சொன்னாப் போலை என்ன, பேரன் தாயைப் போல வெள்ளையாப் பிறந்திருந்தால் நான் கதைச்சே இருக்க மாட்டன்.

இப்ப எங்கடை நாட்டுப் பிரச்சனைகளையும் இஞ்சை எத்தனையோ இனம் ஒற்றுமையா இருக்கிறதையும் பாக்க எங்கடை சிந்தனையள் ரொம்பக் குறுகிப் போய் ஒரு வட்டத்துக்கையே சுத்துறமாதிரி எனக்குப் படுகுது. எவ்வளவு வயதானால் என்ன? இன்னும் இந்த உலகத்திலை படிக்க வேண்டியது நிறையவே இருக்கு. ஏதோ வேளை நாட்டுக்காறனாலை எண்டாலும் எங்கடை நாட்டிலை சமாதானமும் அமைதியும் வந்தால் போதும். எங்கடை கையிலை என்ன மோனை இருக்கு? ஏதோ அந்த அம்மாளாச்சி தான் கண் திறக்க வேணும். வரட்டே?



நேரம் இரவு பத்து மணியையும் தாண்டியிருந்தது. எனக்கு தூக்கம் வரவில்லை. அந்த வாரப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினேன். ஆனால் எதையும் படிக்க ஏனோ முடியாமல் மனம் தத்தளித்தது. சில கவிதைகளையாவது படிக்கலாம் என்றெண்ணினேன். இருந்தும் இன்று எதையும் ரசிக்க மறுத்த என் மனம் சுபாவின் நினைவுகளில் இருந்து மீளமுடியாமல் தவித்தது.

சுபா! என் பக்கத்து வீட்டிலேயே பிறந்து வளர்ந்தவள். சின்னவயது முதல் இருவரும் ஒன்றாய் சேர்ந்து விளையாடியவர்கள் நாங்கள். எங்களுக்கிடையில் சகோதர பாசமே உருவாகியிருந்தது. அதனால் என்னை 'கவியண்ணா' என்றுதான் அழைப்பாள். என் மீது நிறைய பாசம் வைத்திருப்பவள் சுபா.

படிப்பில் நல்ல கெட்டிக்காரி. ஆனால் சரியான பிடிவாதக்குணம் கொண்டவள். தான் நினைத்த காரியத்தை எப்படியாவது நடத்தி முடித்தே விடுவாள். அப்போதெல்லாம் நான் சொல்வேன் "சுபா இப்பிடி பிடிவாதக்குணம் உனக்கு ஆகாதம்மா. அது சில வேளை நமக்கே ஆபத்தாக முடிஞ்சிடும். இந்தப் பிடிவாதக் குணத்த நீ விட்டிடணும் சுபா!" நான் கூற, அவள் சிரித்தபடியே "கவியண்ணா என்னோட வாழ்க்கையில தோல்வி எண்டு எதையுமே சந்திக்கக்கூடாது. அதை என்னால தாங்கிக்க முடியாது. தோல்விய கண்டு துவண்டு போய் தற்கொலை செய்யிற அளவுக்கு நான் முட்டாளும் இல்லை, நான் நினைச்சத சாதிக்க போராடுவேன்." என்பாள். இப்படிச் சொன்னவள் உயர்தரம் வரை படித்து முடித்த போது தான்- அவள் வீட்டில் பூகம்பமே உருவானது. சுபா ஒருவனை காதலிக்கிறாளாம். சேதி அவள் வீட்டில் தெரியவந்தபோது அவளை அடித்தார்கள், உதைத்தார்கள். எல்லாவற்றையுமே தாங்கிக் கொண்டாள். ஆனால் அவள் முடிவில் மாற்றம் மட்டும் நிகழவில்லை.

"சுபா உன்னோட முடிவ மாத்திக்கம்மா. காதல மறந்திட்டு அப்பா அம்மா சொல்லுற படி கேட்டு நட சுபா!" நான் புத்தி கூற, "கவியண்ணா, உங்களுக்கு என்னைப்பற்றி தெரியும்தானே? யாரு எது சொல்லியும் நான் கேட்க தயாரில்லை. தெரிஞ்சோ தெரியாமலோ நான் ரவிய விரும்பிட்டன். வாழ்ந்தால் அவரோடதான் வாழுவன். இத யாராலேயும் தடுக்க முடியாது. ரவிக்கு இடம் கொடுத்த இந்த மனசில இனியாருமே குடி புகமுடியாது. உங்களோட வற்புறுத்தலுக்காக விட்டுக் கொடுத்து, என்னோட காதல நான் கொச்சைப்படுத்த மாட்டன்." இப்படியாக வாதம் புரிந்தவள் இரண்டாம் நாளே பெற்றோரை வெறுத்து வீட்டை விட்டு காதலனுடன் போய்விட்டதாக அறிந்து ஆத்திரப்பட்டேன்.

சுபா போய் ஒருவருடமாகியும் நாங்கள் யாருமே அவளைப் பார்க்க போகவேயில்லை. அவள்மீது வைத்த பாசம் என் கோப விலங்கை உடைத்துப் போட, இன்றுநான் சுபாவை பார்க்கப் போயிருந்தேன். "வாங்க கவியண்ணா எப்பிடி சுகமா?" அவள் கேட்க, "சுபா நீ எப்பிடி சுகமா இருக்கிறியே?" நான் வினாவ "இது நான் தேடிக்கொண்ட வாழ்க்கை; இதுல எல்லாம் சுகம் எண்டுதான் சொல்லணும். சுகம் இல்ல எண்டு வாழ்க்கையப்பற்றி யாரிட்டையும் குறை சொல்ல முடியாதே!" அவள் சொல்லிச்சிரிக்க, "சுபா ஒன்னோட தைரியம் எனக்குக்கூட வராதும்மா!" நான் முடிக்க முன்னரே "உங்க தலையெழுத்து நல்லது எண்டு நெனச்சி சந்தோசப்படுங்க கவியண்ணா." அவள் இப்படிக்கூற "ஏன் சுபா நீ சந்தோசமா இல்லையா?"

ஆச்சரியமாய் நான் கேட்க, "நல்லாத்தான் இருக்கிறேன். பார்க்கிறீங்கதானே?" அவள் பேச்சை வேறு திசைக்குத் திருப்ப சில நிமிடங்கள் கதைத்துவிட்டு விடைபெற "நாளைக்கு கட்டாயம் வாங்க கவியண்ணா." அவள் அழைப்பு விடுக்க "இல்ல சுபா உங்கட அம்மா அறிஞ்சா எனக்கு ஏசுவாங்க" நான் காரணம் கூறிவிட்டு வெளியேற, "நாளைக்கு நீங்க கட்டாயம் வந்தேயாகணும்" அவள் உறுதியாகச் சொல்லியனுப்பினாள்.

சுபாவைப் பார்க்க நாளை போக முடியுமா? 'நேரம் கிடைத்தால் பார்ப்போம்' மனதுக்குள் சமாதானம் சொல்லிக்கொண்டேன். பாவம் சுபா அவளுக்குள் ஏதோ துயரம் இருக்கிறது. அதைக்கூட சொல்ல முடியாத அவளது பிடிவாதக் குணம் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. காதலுக்காக தன் குடும்பத்தைப் பிரிந்த அவளை நினைக்க பெருமையாக இருந்தாலும், வேதனையும் தலை காட்டியது. கவலையோடு கண்ணை மூடிக்கொண்டேன்.

"மகன் கவி, எழும்புங்க மகன். கெதியா எழும்புடா கவி..." அம்மாவின் அவசரக்குரல் என்னைத் துயில் எழுப்பியது. "தம்பி கவி நம்ம சுபா இரவு தனக்குத் தானே நெருப்பு வெச்சி செத்துப் போயிட்டாளாம்" அம்மாவின் அந்தச் செய்தி. என் செவிகளில் இடியாய் இறங்கியது. "சுபா..." அழுதேன்.

அவசரமாய் புறப்பட்டு அழுது கொண்டு ஓடினேன். 'ஒரு போதும் தற்கொலை செய்ற அளவுக்கு முட்டாள் அல்ல நான்' என்றவள் ஏன் இப்படி செய்தாள். என் மனதில் எழுந்த கேள்வி விடை தெரியாமல் முடங்கிக்கிடந்தது. தீ நாக்குகள் தீண்டிய அவள் உடல் வெள்ளைச்சேலையால் மூடப்பட்டிருந்தது. மூடியிருந்த சேலையை விலக்கி முகத்தைக்கூட பார்க்க தைரியமற்றவனாய் மனதுக்குள் அழுதேன். "கவியண்ணா நாளைக்கு நீங்க கட்டாயம் வந்தேயாகணும்" நேற்றிரவு சுபா சொன்ன வார்த்தைகள் இப்போதும் என் செவிகளுக்குள் ஒலித்துக்கொண்டிருந்தன. ●

# உள்ளத்தை விட்டு நீங்காதவள்!

தருவது **முழடில்யன்**

"அந்த மரத்தைப் பார்! காற்றுக்குக் கிளைகள் விரிந்து பிறகு சேர்ந்து கொள்வதைப் பார்த்தால், அலையும் கூந்தலைப் பெண் விரல்களால் ஒதுக்கிக் கொள்வதைப் போல இல்லை? கௌரி என்றால் இரு கைகளாலும் பின்புறமாகக் கோதி முடிச்சுப் போட்டுக் கொள்வாள்..."

"சும்மா இரு. இப்போ கௌரி புராணம் வேண்டாம்,"

"சடகோபா, நீ யாரையாவது காதலித்துப் பார்த்திருக்கிறாயா?"

"ஏன்? 'காதலித்துப் பார்' என்று அடித்தொண்டையில் ஏதாவது கவிதை சொல்லப் போகிறாயா? ஆரம்பித்து விடாதே... அநியாயமாய் ஒரு மாலைப் பொழுது..."

"இதயம் காலியாய் கிடக்கும் வரை அது பாழடைந்த மாளிகைதான். அங்கே யாரும் குடியேறினால்தான் உனக்கும் தெரியும், உன் பார்வையிலேயே உண்டாகும் புதுப் பளபளப்பெல்லாம்..."

"அடடா! அந்தக் கொளகொளப்பெல்லாம் எனக்கு வேண்டாம்..."

"ஏன் வேண்டாம்?"

"காற்றுக்குக் கிளைகள் அசைவதுகூட மரத்தின் அழகாய் இருக்கக் கூடாதென்றால்.. அதை அப்படிக் காண முடியாத மனம் நமக்குத் தேவைதானா?"

நிமலன் எதுவும் பேசாது அவனைப் பார்த்தான். சடகோபனுக்குள்ளும் ஒரு கௌரியோ கவிதாவோ நுழையாத வரை அவன் இப்படித்தான் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பான். அவனுடன் விவாதம் செய்து, காதல் மனதுக்குத் தரும் களியாட்டத்தை உணர்த்திவிட முடியாது. நதியில் ஒதுபோதும் இறங்கியிராதவனுக்கு நதியினுள் இறங்கும் சுகத்தைப் பேசிப் புரிய வைத்துவிட முடியுமா என்ன?

"சடகோபா, காதல் எல்லாவற்றையும் அழகாக்கும். அந்த ரசவாதம் உனக்குள்ளும் நிகழட்டும் அப்போது புரிந்துகொள்வாய்."

"ஏன், என் கண்களுக்கு இப்போ எதுவும் அழகாய்த் தெரியவில்லை என்று சொன்னேனா? காற்றின் பாடலுக்கு மயங்கித் தலையாட்டுகிற மரங்களின் அழகையெல்லாம் கௌரி கூந்தலாய்க் கற்பனை செய்து கொண்டால்தான் அழகாய்த் தெரியும் என்கிற அசட்டுத்தனங்கள் எனக்கில்லை."


"சரி சரி விடு, எனக்கு அவளை மறக்க முடியவில்லை. எந்தச் சிறு அசைவிலும் அவள்தான் நினைவுக்கு வருகிறாள். அந்த வாசனையை எல்லாம் நீயும் அறிந்துகொள்வாய் என்று நான் எதிர்பார்க்க முடியுமா?"

சடகோபன் சிரித்தான்.

"அடடா! அப்படியே உருகி வழிகிறாயே.. அவளையே திருமணம் செய்து கொண்டு வாழ்நாள் முழுக்க அவள்தான் என்றிருக்கப் போகிறாய் என்று என்ன நிச்சயம்? படிப்பு முடிந்து ஊருக்குப் போனால், அங்கே உனக்கு எந்தக் கஸ்தூரியோ.. யார்கண்டார்!"

"போடா! கௌரி இல்லை என்றால் எனக்குக் கல்யாணமும் இல்லை, வாழ்க்கையும் இல்லை."

"உனக்கு ஒரு காதல் கதை தெரியுமா? மாமன்னர் அக்பரின் மகன் சலீம், நாட்டியப் பெண் அனார்கலியை விரும்பினான். அவளும் அவனை உயிருக்குமிராய் விரும்பினாள். இருவருக்குமிடையே மன்னர் நுழைந்து அனார்க்கலியை உயிரோடு சமாதியாக்கினார். செய்தி அறிந்து ஓடிவந்த சலீம், 'அனார் அனார்' என்று சமாதியில் மோதிக் கதறி அழுதான். அதன்பிறகும் சில நாட்கள் தாடிவளர்த்துச் சோகமாக அழுது திரிந்தான் என்று கேள்வி. பிறகு என்ன நடந்தது? கல்யாணம் செய்து கொண்டான். எத்தனை பேரை என்று கணக்குத் தெரியவில்லை..."



"கொச்சையாகப் பேசாதே."

"இல்லை. நான் எதையும் கொச்சைப்படுத்தவில்லை. யதார்த்தத்தைச் சொன்னேன். ஒரு மாமன்னன் தனக்கு முடியாத காலத்தில் ஒரு மாளிகையைக் கட்டிப் பெருமூச்சுவிட்டபடி பார்த்துக் கொண்டிருந்ததுதான் இன்று உங்களின் காதல் சின்னமாகக் கொண்டாடப்படுகிறது. அதற்கு முன்னர் அவனுக்கு இருந்த காதல் மனைவியர்க்கும் கணக்குச் சரியாக இல்லை. ஆரம்பத்திலேயே அவன் ஒன்றையே மறக்க முடியாமல் தெய்வீகக் காதலில் வீழ்ந்திருந்தால் உங்கள் காதல் சின்னத்தின் கதையே இருந்திருக்காதே!"

"உண்மைக் காதலை ஒருபோதும் மறக்க முடியாது. அது சாவிலும்கூட வரும்..."

"அந்தக் காதலின் சாவிலுமா?"

"காதல் சாவதில்லை,"

"...என்பது காலங்காலமாய் காதலர்கள் சொல்லி வரும், நம்பிவரும் அழகான வசனம்... 'தீயினால் எரிக்கப்படும்போதும், அது நீயிருக்கும் என் நெஞ்சுக் கூட்டை நெருங்காது' என்பதில் இருக்கும் உண்மைத் தன்மை போல."

"நெஞ்சு எரிந்தாலும், அதனுள்ளிருக்கும் நினைவு எரிவதில்லை."

"நீயே எரிந்தபின் எங்கே உனது நினைவு?"

"எனது நினைவிருக்கும் கடைசிக் கணம் வரை அவளது நினைவும் இருக்கும் என்பதுதான் காதல். காற்று மோதி அடித்தாலும், கடும் மழை பொழிந்தாலும், சினம் கொண்டு முழங்கி இடி இடித்தாலும் அருவியைத் தன் மீது வழிய விட்டபடி அழகுற உயர்ந்து நிற்கிற மலையின் இயற்கை அழகு கெட்டு விடுவதில்லை. சினம் கொண்ட இயற்கையின் தாக்குதல்களுக்கெல்லாம் கலங்காது தன் அழகிய நல்வடிவைத் தக்கவைத்திருக்கின்ற அந்தக் கொல்லிப்பாவை போன்றதே என் காதலும். எத்தனை ஊறுகள் நேர்ந்தாலும் என் உள்ளத்தை விட்டு நீங்குபவளில்லை அவள். அவளை நான் எவ்வாறு மறப்பேன்,"

## இலக்கிய நயம்

**செவ்வேர்ப் பலவின்**
**பயங்கெழு கொல்லித்**
**தெய்வம் காக்கும்**
**தீதுதீர் நெடுங்கோட்டு**
**அவ்வெள் அருவிக்**
**குடவரை அகத்து**
**கால் பொருது இடிப்பினும்**
**இதழ் உறை கடுகினும்**
**உரும் உடன்று எறியினும்**
**உறு பல தோன்றினும்**
**பெருநிலம் கிளரினும்**
**திருநல உருவின்**
**மாயா இயற்கைப் பாவையின்**
**போதல் ஒல்லாள்**
**என் நெஞ்சத் தானே.**

(நற்றிணை 201:5-12)

# ஸ்போர்ட்ஸ்

## இந்திய அணியின் முதல் வெற்றி

ஸிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி, ஸிம்பாப்வேக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 2 டெஸ்ட்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

புலவாயோவில் நடந்த முதல் டெஸ்ட்டில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே 173 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அண்டி ஃபிளவர் அதிக பட்சமாக 51 ஓட்டங்களை எடுத்தார். ஆஷிஷ் நெஹ்ரா 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 318 ஓட்டங்களை எடுத்தது. (டெண்டுல்கர்-74, ஹர்பஜன் சிங்-54, சமீர் திகே-47, ஹீத் ஸ்டீரீக் 3-54)

இந்தியாவை விட 145 ஓட்டங்கள் பின் தங்கியிருந்த ஸிம்பாப்வே இரண்டாவது இன்னிங்ஸில் ஃபிளவர் சகோதரர்களின் சிறப்பானத் துடுப்பாட்டத்தால் 328 ஓட்டங்களை எடுத்தது. அண்டி ஃபிளவர் 83 ஓட்டங்களையும் கிராண்ட் ஃபிளவர் 71 ஓட்டங்களையும் எடுத்தனர். கார்லைசிள் 52 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்ரீநாத் 71 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றி இலக்கான 184 ஓட்டங்களை எடுக்க இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்தியா 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து, 8 விக்கெட்டுக்களால் வென்றது. சிங் சுந்தர் தாஸ் 82 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இறுதிவரை இருந்தனர்.

இந்திய உபகண்டத்திற்கு வெளியே இந்தியாவால் 15 வருடங்களுக்குப் பின் பெறப்பட்ட முதல் வெற்றி இதுவாகும். கடைசியாக 1986ல் இங்கிலாந்தில் கிடைத்த டெஸ்ட் வெற்றியை அடுத்து 50 டெஸ்ட் போட்டிகளுக்குப் பின் கிடைத்த வெற்றி இதுவாகும்.

இந்தியா-ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஜூன் 15 முதல் 19 வரை ஹராரேயில் நடைபெறுகிறது.

## சிறப்பான ஆட்டத்தால் முன்னேற்றம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட நட்சத்திரம் இன்ஸமாம் உல் ஹக்கின் சிறப்பான துடுப்பாட்டத்தால் இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை பாகிஸ்தான் வென்று, தொடரை சமப்படுத்தியது அறிந்ததே.

இரண்டாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் 114 ஓட்டங்களையும்இரண்டாவது இன்னிங்ஸில் 85 ஓட்டங்களையும் இன்ஸமாம் எடுத்ததன் மூலம் 'பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்' துடுப்பாட்ட தரப்பட்டியலில் 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தரப்பட்டியலில் முதலிடத்தில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரும் இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியாவில் ஸ்டீவ் வோவும் மூன்றாவது இடத்தில் ஸிம்பாப்வே வீரர் அண்டிஃபிளவரும் இருக்கின்றனர்.

இந்தியாவின் ராகுல் ட்ராவிட், மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாரா, இலங்கையின் மஹேல ஜயவர்த்தன, தென்னாபிரிக்காவில் டரில் கலினன், இங்கிலாந்தின் கிரஹாம் தோர்ப், இந்தியாவில் வி.வி.எஸ். லக்ஷ்மன் ஆகியோர் 6 தொடக்கம் 10 வரையான இடங்களில் இருக்கின்றனர்.

## 'ஆஷஸ்' கிண்ணப் போட்டிகள்

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 'ஆஷஸ்' கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் 1882ம் ஆண்டு முதல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடந்து வருகிறது.

1989ம் ஆண்டு இங்கிலாந்திடம் இருந்து 'ஆஷஸ்' கிண்ணத்தைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா அதன் பின் 1991, 93, 95, 97, 99ம் ஆண்டுகள் வரை நடைபெற்ற 'ஆஷஸ்' டெஸ்ட் தொடர்களில் வென்று கிண்ணத்தைத் தன்னகத்தே தக்கவைத்துக் கொண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக 'ஆஷஸ்' கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய அணி, இம்முறையும் கிண்ணத்தை இழக்காது என்றே கருதப்படுகிறது.

கடைசியாக நடந்த 2 டெஸ்ட்களில் இந்தியாவிடம் தோற்றாலும் தொடர்ச்சியாக 16 டெஸ்ட்டுகளை வென்று சாதனை படைத்திருக்கும் அவுஸ்திரேலியா இன்னமும் ஒரு பலம் வாய்ந்த அணியாகவே இருக்கிறது.

ஜூன் 7ம் திகதி தொடக்கம் ஜூன் 23ம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறும் 'நட்வெஸ்ட்'முத்தரப்பு (இங்கிலாந்து, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் விளையாடும்) போட்டிகள் முடிந்த பின் 'ஆஷஸ்' தொடர் தொடங்குகிறது.

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 'ஆஷஸ்' கிண்ண டெஸ்ட் போட்டிகள் பற்றி விவரம் வருமாறு:

முதலாவது டெஸ்ட் ஜூலை 05-09 எட்ஜ்பாஸ்டன்
இரண்டாவது டெஸ்ட் ஜூலை 19-23 லோர்ட்ஸ்
மூன்றாவது டெஸ்ட் ஒகஸ்ட் 02-06 ட்ரெண்ட் பிரிட்ஜ்
நான்காவது டெஸ்ட் ஒகஸ்ட் 16-20 ஹெட்டிங்லி
ஐந்தாவது டெஸ்ட் ஒகஸ்ட் 23-27 ஒவல்

# சிந்தியா பதில்கள்

**◆ வானொலி, தொலைக்காட்சிகளிலெல்லாம் விளம்பரங்கள் அதிகரித்து வருகின்றனவே. எல்லாவற்றையுமே வாங்க நாங்கள் எங்கு போவது?**

கு.சிவநாதன், வவுனியா.

*பயங்கரம்தான்! விளம்பரங்களில் அரசியல் என்றுசொல்லி ஒரு நூலில் கட்டுரை பார்த்தேன். அவை நம்மையே வேறு ஆட்களாக மாற்றி வருகின்றனவாம்! அந்தச் சிக்கல் இப்ப எதுக்கு, விளம்பரம் என்றதும் ஞாபகத்திற்கு வரும் ஜோக்.*

*"உன் கைகள் இவ்வளவு மென்மையாக இருக்கே.. என்ன காரணம்?"*

*"பாத்திரங்கள் கழுவ எப்போதும் நான் எஸ். ஆரையே பயன்படுத்துகிறேன்."*

*"அது என்ன புதிய பவுடரா?"*

*"இல்லை.. அது என் கணவர் பெயர்."*

◉◘◉

**◆ சத்யராஜின் 'அசத்தல்' எப்படி?**

எஸ்.எம்.முபைதின் பதுறுநிஸா, காங்கேயனோடை-13.

*சொதப்பல். அனுஜா, அல்போன்சா, பாபிலோனா வரிசையில் தமிழ்த் திரைக்குக் கிடைத்திருக்கும் புதிய கவர்ச்சி அசத்தலாக சுவாதி. (அதே சுவாதி தானுங்கோ!)*

◉◘◉

**◆ இளைய தளபதி விஜய் சொந்தக் குரலில் பாடி பிரபலமான பாடல்?**

வி.ஜீவராசா, அக்கரைப்பற்று-07.

*'தொட்டபெட்டா ரோட்டு மேலே' தொடங்கிப் பல பாடல்கள். சமீபத்தில் 'பத்ரி'யில் 'என்னோட லைலா' கலக்குகிறதே!*

◉◘◉

**◆ வாரம் தோறும் வந்து நம் மனதைச் சுத்தப்படுத்தி விடும் முரசே! எம்முயிர் நீதானே?**

க.நசூர்தீன், தெல்தோட்டை.

*சூடு, சுவை, சுவாரஷ்யத்தின் பின்னால் இப்படியும் ஒரு பணி நடைபெறுகிறதா! சூ...சு..சு..சுத்தம்!*

◉◘◉

**◆ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பழமொழி கூறுகிறார்களே, நான் பிடித்த முயலுக்கு நான்கு கால்கள்தானே இருந்தன?**

எம்.எச்.எம்.றிஸ்வான், பொகவந்தலாவ.

*நீங்கள் முன்னேற இலாயக்கில்லாதவர். என்ன செய்ய? அப்படித்தானிருக்கும்!*

◉◘◉

**◆ ஆண்கள் பெண்களை எந்த விடயத்தில் பலவீனமானவர்களாக நினைக்கிறார்கள்? (இதற்குப் பதில் கூறாவிட்டால் உங்கள் தலை வெடித்துச் சுக்கு நீராகி விடும்.)**

ரோஜா, பாண்டிருப்பு-02.

*தங்கள் பலவீனத்தைத் தெரிந்து அவர்கள் இளகிவிடுவார்கள் என்பதை! (சுக்கு நீர் ஆரோக்கியத்திற்கு நல்லது என்பதற்காக அடுத்தவன் தலையை உடைத்தா குடிப்பீர்கள்?)*

◉◘◉

**◆ நம் வினை நம்மையே வந்து சூழ்ந்து கொள்வதற்கு உதாரணம் தர முடியுமா?**

லக்குமணசாமி ஆனந்தன், கொட்டகலை.

*நமது தேவை என்ன என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளாதிருப்பதும், அதைக் கேட்கத் தெரியாதிருப்பதும் போதுமே நம்மை வினை வந்து சூழ.*

*ஓர் ஏழைத் தம்பதியரின் வேண்டுகோளைச் செவிமடுத்து, வரம் கொடுக்க வந்தாராம் கடவுள். மூன்று தேங்காய்களைக் கொடுத்து, "நீங்கள் எதை நினைத்து ஒவ்வொரு தேங்காயை உடைத்தாலும், கேட்பது வீடு நிறையக் கொட்டும்" என்று சொல்லி விட்டு மறைந்தாராம்.*

*"நமக்கு வீடு நிறைய பசுமாடுகள் வேண்டுமென்று உடைக்கலாம்" என்றானாம் கணவன். அதை மறுத்த மனைவி, "தங்க நகைகள், பணம் வேண்டுமென்று கேட்போம்" என்றாளாம். இருவருக்கும் வாக்குவாதம் வந்துவிட்டது. கோபத்தில் அவள் தலைமுடியைப் பழித்துக் கொண்டே தேங்காயை உடைத்தான் கணவன். வீடு முழுவதும் ஒரே தலைமுடியாகக் கொட்டியது. எங்க பார்த்தாலும் தலைமுடியைக் கண்டு பயந்து போயினர். புத்தி வந்த இருவரும், "எல்லா முடியும் போய்விட வேண்டும்" என்று கேட்டு இரண்டாவது தேங்காயை உடைத்தார்கள். இவர்களது தலைமுடியும் சேர்ந்து போனது. தலை, கண் புருவம், மீசை, தாடி, கைகால் முடி எல்லாமே போய்விட்டதால் அசிங்கமாகிப் போயினர். இப்போது மூன்றாவது தேங்காய் மாத்திரமே மீதமிருந்தது. பழையபடி தங்கள் உருவத்தைத் திரும்பப் பெறக் கேட்பதா, காசு பணம் கேட்பதா என்று யோசித்து காசு பணத்தை எப்படியும் சம்பாதித்துக் கொள்ளலாம். நம் பழைய உருவத்தைப் பெறுவதுதான் முடியாத விஷயம் என்பதை உணர்ந்து கொண்டு, தங்கள் உருவம் பழையபடி வந்தால் போதும் என்று அந்த மூன்றாவது தேங்காயை உடைத்தார்களாம் தம்பதியர்.*

*இவ்விதமாக, கடவுள் வரம் கொடுத்தாலும், இருப்பதை விட மேலதிகமாக எதையும் பெற்றுக் கொள்ளத் தெரியாதவர்களின் வாழ்க்கையில் எப்படி முன்னேற்றம் வரமுடியும்?*



◉◘◉

**◆ அப்பல்லோ மருத்துவமனையின் விலாசத்தைத் தருவீர்களா?**

ந.கோமளா, மட்டக்களப்பு.

*அப்பல்லோ மருத்துவமனை,*
*21 கிரீம்ஸ் லேன், சென்னை 600 006.*
*(உருப்படியாக ஒரு விலாசம் கேட்டீர்களே, நன்றி!)*

◉◘◉

**◆ தற்போதைய ஆண் பாடகர்களில் முன்னிலையில் இருப்பவர் உன்னி கிருஷ்ணனா, ஹரிஹரனா, ஹரீஸ் ராகவேந்தரா?**

எம்.இர்ஷாத், காத்தான்குடி-04.

*தமிழில் 'என்னவளே' என்று தொடங்கியவர் பலர் இதயத்தைத் தொலைய வைத்தார். 'உயிரே உயிரே' என்று ஆரம்பித்தவர் பல உயிர்களை உருக்கினார். 'வாசகி வாசுகி' என்று வந்தவர், 'நிற்பதுவே'யில் நெஞ்சைத் தொட்டார். மூவருமே தங்கள் குரல்களினால் இசையை நம் உயிர்வரை கொண்டு சேர்க்கிறார்கள். அதில் என்ன வரிசைப்படுத்தல்?*

◉◘◉

**◆ ஹிந்திப் பாடல்களில் இருக்கும் இனிமை தமிழ்ப் பாடல்களில் இல்லையே அது ஏன்?**

எஸ்.வினோதினி, மொண்டிகிறிஸ்டோ.

*மெட்டுக்களைப் பொறுத்தவரை இப்போது பெரும்பாலும் இங்கிருந்தே அங்கு போகின்றன. இங்குள்ள இசையமைப்பாளர்களே அங்குள்ளவர்களையும் வியக்க வைக்கிறார்கள். ஆனால் ஹிந்தியில் இனிமை ஏன்? ம்.. இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று: வல்லினமே வராமல் மெல்லின இடையினமாகக் குழையும் அந்த மொழி. இரண்டு: நிச்சயமாக தமிழ்ப் பாடல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைவிட பத்தோ இருபதோ வாத்தியங்கள் அங்கு அதிகம்தான்.*

*இவற்றுக்கு மேலாக, அவர்கள் குரல் வளத்தையே பிரதானமாய்க் கருதும் ஹிந்துஸ்தானி வழிவந்தவர்கள். நாமோ கரகரத்த குரலையும் சகித்துக் கொள்ளும் கர்நாடக ரசிகர்கள்.*

◉◘◉

**◆ நகைச்சுவையாகப் பதில் சொல்ல எப்படிப் பயின்றீர்கள்?**

ம.சாரங்கா, கொழும்பு-13.

*கேள்வி கேட்கும் சாக்கிலேயே, என் பதில்களை வெறும் நகைச்சுவைதான் என்று சொல்லி அலட்சியப்படுத்திவிட எப்படிக் கற்றுக் கொண்டீர்கள்!*

# மன்னாதி மன்னன்

62

## மன்னனைப் பீடித்த ஏழரைச்சனி

விக்கிரமாதித்த மாமன்னன் தனது நாடாறு மாத ஆட்சி முடிவடைந்ததும் காடாறு மாதம் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்தார். அவர் எங்கு போனாலும் எப்போது திரும்பி வந்தாலும் மாகாளியம்மனின் ஆலயம் சென்று வழிபடுவது வழக்கம். அன்றும், விக்கிரமாதித்தன் நாட்டை விட்டு காட்டுக்குப்போகப் புறப்பட்டபோது, காளி கோயிலுக்குச் செல்லுகின்றார்.

அம்மனை வணங்கியபோது, அவள் பிரசன்னமாகி, விக்கிரமாதித்தனை ஏழரைச் சனியன் பிடிக்கப்போவதாக எச்சரித்து, சனி பகவானுடைய கோரப் பிடியிலிருந்து தப்புவதற்கு உரிய மார்க்கங்களைச் சொல்லி வைத்தாள்.

கோயிலிலிருந்து வெளியேறிய விக்கிரமாதித்தனை வழியிலேயே சனி பகவான் பீடித்து விட்டார். காளிகாம்பாள் கூறிய அறிவுரைப்படி விக்கிரமாதித்தன் சனி பகவானை வணங்கி, அவருடைய கட்டளைப்படி நடப்பதாக வாக்களித்தார்.

சனி பகவான், தன்னைக் கண்டு பயந்து ஓடாமலும், வெறுப்புறாமலும், தனக்குரிய மரியாதையை வழங்கிய விக்கிரமாதித்தனுக்கு வாழ்த்துக்கள் கூறியதுடன், சில கட்டளைகளையும் பிறப்பித்தார்.

“விக்கிரமாதித்தனே நீ இன்று



ஐம்பத்தியாறு தேசத்து மன்னர்களையும் உன்னுடைய ஆற்றலால் அடி பணிய வைத்திருக்கிறாய். அவர்கள் உனக்குக் கப்பம் கட்டுகிறார்கள். ஆனால் நீ, இப்போது மதுராபுரி சென்று அந்த நாட்டு மன்னனிடம் ஏழரையாண்டுகள் சேவகம் செய்ய வேண்டும். என்ன சம்மதம்தானே?” என்று கேட்டார்.

விக்கிரமாதித்த மன்னன் சனி பகவானிடம் “தாங்கள் இட்ட கட்டளைப்படி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன்” என்று கூறி, தன்னுடைய முத்திரை மோதிரத்தை சனி பகவானிடம் கொடுத்து, “நான் ஏழரையாண்டுகள் மதுராபுரி மன்னருக்கு அடிமையாகவிருந்து சேவகம் செய்து விட்டுத் திரும்பி வரும்வரை, எனது ராஜ்ஜியத்தில் எந்தவிதமான குறையும் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தங்கள் பொறுப்பு” என்று கூறினார். அமைச்சர் பட்டியிடமும் இந்த விவரத்தைக் கூறிவிட்டு, வேதாளத்துடன் காட்டுக்குப் புறப்பட்டார்.

காட்டில் வேதாளத்தைக் காவலுக்கு வைத்து விட்டு ஓர் ஆலமரத்தின் கீழ் படுத்துறங்கினர். உறக்கத்தின்போது ஒரு பெண்ணின் காற் சிலம்பொலி கேட்டு கண் விழித்துப் பார்த்தபோது, அவர் எதிரே மிகவும் விகாரமான ஒரு பெண்ணுருவம் நிற்பதைக் கண்டார். வேதாளத்தை அழைத்து, “இந்தப் பெண் யார்? எதற்காக இங்கு வந்தாள்?”, என்று வேதாளத்திடம் வினவினார். அந்தப் பெண்ணின் வரலாற்றை வேதாளம் விக்கிரமாதித்தனுக்கு கூறியது. “மன்னாதி மன்னரே, இந்தப் பெண்ணுடைய பெயர் இரத்தினமாலை. இவளும் முத்துமாலை என்று மற்றொரு பெண்ணும் தேவேந்திரனின் சிம்மாசனத்தினருகிலிருந்து வெஞ்சாமரை வீசுபவர்கள். தாங்கள் முன்பொரு தடவை இந்திரன் சபைக்குப் போனபோது, இந்த இரத்தினமாலை தங்கள் மீது மோகம் கொண்டாள். தாங்கள் பூலோகம் திரும்பியதும் தங்களிடம் வருவதற்கு இந்திரனிடம் இவள் அனுமதி கோரினாள்.

இந்திரன் கோபமடைந்தாலும் மனமிரங்கி “பெண்ணே! விக்கிரமாதித்த மன்னன் ஆட்சிபுரியும் போது நீ அவனிடம் சென்று வாழ முடியாது. ஆகவே அவன் கானகம் செல்லும் காலத்தில் மட்டும் நீ போய் அவனுடன் வாழலாம். ஆனால், தேவலோக மங்கையாகிய நீ ஒரு மானிடன் மீது காதல் கொண்டமையினால், உனக்கொரு சாபம் இருக்கிறது. அதனையும் நீ ஏற்றாக வேண்டும். பகலில் உன்னுருவம் அருவருக்கத்தக்க ஒரு கோர உருவமாக இருப்பாய். ஆனால் மாலையானதும் நீ பழையபடி உன் அழகைப் பெற்று தேவமங்கையாகிவிடுவாய். விக்கிரமாதித்தன் மதுராபுரியில் வாழும் ஏழரை ஆண்டுகளும் இவ்வாறுதான் உன் உருவம் அமைந்திருக்கும்!” என்று கூறினார்.

“இருப்பினும் இத்தகைய பார்க்கச் சகிக்காத உருவத்துடன் நான் எப்படி வாழ முடியும்?” என்று விக்கிரமாதித்தன் வேதாளத்திடம் கேட்டார். அதற்கு வேதாளம் “அரசே! இந்த உருவத்தைப் பார்த்து பகலில் எத்தகைய வெறுப்புறுகின்றீர்களோ அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியை இந்தப் பெண் மூலம் இரவில் நீங்கள் பெறுவீர்கள்!” என்று கூறியது.

பின்னர் விக்கிரமாதித்தன் இரத்தினமாலையையும் அழைத்துக் கொண்டு வேதாளத்துடன் மதுராபுரி சென்றடைந்தார். அங்கொரு விடுதியில் இரவு பொழுதைக் கழிக்க தங்கியபோது, இரத்தினமாலை அழகான பெண்ணுருப் பெற்றாள். அவளுடைய பேரழகைக் கண்ட விக்கிரமாதித்தன் பெருமகிழ்வடைந்தார்.

அடுத்த நாட்காலை விக்கிரமாதித்தன் ஒரு சாதாரண வீரனுக்குரிய தோற்றத்துடன் மதுராபுரி மன்னனைக் கண்டான். அரண்மனையில் தனக்கொரு வேலை தரும்படி கேட்டார். மன்னரிடம் தனது பெயரை ஆதித்தன் என்று கூறினார். அவருடைய கம்பீரமான தோற்றம் மன்னனையும் அரசவையிலுள்ள அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

மன்னன் விக்கிரமாதித்தனிடம், “என்னுடைய படைகளை செம்மையாகப் பயிற்றுவிப்பதற்கு பொருத்தமான சேனாதிபதி தேவைப்படுகிறார். உன்னைப் பார்த்தால், அப்பதவியை உனக்குத் தரலாம் என்று தோன்றுகின்றது. இதற்கு உன் சம்மதம் என்ன? இந்தப் பதவிக்காக உனக்கு எவ்வளவு சம்பளம் தர வேண்டும்?” என்று கேட்டார்.

ஆதித்தன் உருவிலிருந்த விக்கிரமாதித்தன், தனக்கு வேதனமாக ஒவ்வொரு நாளும் ஆயிரம் பொற்காசுகள் தரவேண்டும் என்று கேட்டார். அதற்கு மன்னர் ஒப்புக் கொண்டார். அரண்மனையிலிருந்து தன்னிருப்பிடம் திரும்பும்போது, ஒரு கோயிலின் அருகேயிருந்த குளத்தில் இறங்கி விக்கிரமாதித்தன் குளித்தார். அப்போது அந்தக் குளத்திலிருந்த நல்ல பாம்பு ஒன்று அங்கிருந்த தவளையைக் கவ்வியது. அப்போது அந்தத் தவளை “அனந்தா நீ என்ன இப்படிச் செய்கிறாய். நாம் இருவரும் முனிவரின் சாபத்துக்கு உட்பட்டு இந்த உருவம் எடுத்தவர்கள் அல்லவா? அப்படியிருக்க நீ என்னை உன் உணவாக்கப் பார்க்கிறாயே! இது தர்மமாகுமா? இந்தக் கொடுமையை விக்கிரமாதித்த மன்னன் கண்டால் உனக்கு என்ன நடக்குமென்று தெரியாதா?” என்று தவளை கேட்டது.

உலகத்திலுள்ள எல்லா சீவராசிகளினதும் உரையாடல்களைக் கேட்டு கருத்தை அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டவரான விக்கிரமாதித்த மன்னனுக்கு, நல்ல பாம்பும் தவளையும் நடத்திய உரையாடல் நன்றாகக் கேட்டது.

விக்கிரமாதித்தன் தன்னுடைய உடைவாளை எடுத்து தனது தொடையில் ஒரு பிடி இறைச்சியை அறுத்து பாம்புக்குத் தீனியாகப் போட்டார். அது தவளையை விட்டு விட்டு இறைச்சியைக் கவ்விக் கொண்டது. உடனே பாம்பும் தவளையும் இரு தேவதைகளாக மாறினார்கள். “தன்னுடைய தசையையே அறுத்தெடுத்து வேறொரு பிராணியின் பசியைப் போக்குவதற்கு விக்கிரமாதித்த மன்னரைத் தவிர வேறு எவரால் முடியும்?” என்று தவளை கூறியது. தேவதைகளாக மாறிவிட்ட பாம்பும் தவளையும் விக்கிரமாதித்தனை வணங்கி நின்றனர்.

எதுவுமே அறியாது திகைத்து நின்ற விக்கிரமாதித்தனிடம் தங்களுடைய கதையை அவ்விருவரும் கூறினார்கள். பாம்பாக இருந்தவருடைய பெயர் அனந்தன் என்றும், தவளையாக இருந்தவருடைய பெயர் ஜலந்திரன் என்றும் இருவரும் கூறினார்கள். நாரத மகா முனிவரின் கோபத்திற்கு இலக்காகிய தாங்கள் இருவரும் இந்த குளத்தில் பாம்பாகவும் தவளையாகவும் மாறி வாழ்ந்து வந்ததாகவும் விக்கிரமாதித்தனின் உருவைக் கண்டதும் தங்களுக்கு சாப விமோசனம் கிடைக்குமென்றும், அந்த உதவியைச் செய்த விக்கிரமாதித்தனுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காக மேலும் ஏழரை யாண்டுகள் அவருக்கு உதவி புரிந்து பின்னர் தேவலோகம் திரும்பச் செல்வதற்கு அனுமதி கிடைக்குமென்றும் நாரத முனிவரே சாப விமோசனமளித்ததாகவும், இருவரும் கூறினார்கள். இதனைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த விக்கிரமாதித்தன் அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

மதுராபுரியின் தலைமைத் தளபதியாக பதவிபெற்ற ஆதித்தன் என்ற விக்கிரமாதித்தனுக்கு மதுராபுரி அரசர் தகுதியான அரண்மனையொன்றையும் வழங்கியிருந்தார். விக்கிரமாதித்தனுடன் வந்திருந்த அனந்தனுக்கும், ஜலந்திரனுக்கும் இரத்தினமாலை உணவளித்து உபசரித்தாள். அனந்தனும், ஜலந்திரனும் அந்த மாளிகையை சிறப்பாகக் காவல் புரிந்தனர். மாளிகைக்கு முன்புறமாக வேதாளம் எப்போதும் காவல் புரிந்த வண்ணமிருந்தது. *(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து ‘காதில பூ கந்தசாமி’ என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:..............



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

அபிமான வாசகர் போட்டியில் ஐந்தாவது: தருமர் சொன்ன பொய் எது? முடிவுத் திகதி ஜூன் 30. பெறுபேறுகள் ஜூலை இறுதிவாரத்தில்.

### நெஞ்சை நிமிர்த்தி நடத்தல்

இது ஓர் இலவசப் பயிற்சி. பயிற்சி வழங்குபவர் திரு. அழுக்கு சங்கரி.

அண்மையில் திரு. அழுக்கு சங்கரி விடுத்த பத்திரிகை அறிக்கையொன்றையடுத்து வாசகர்களின் உடல் ஆரோக்கியம் கருதி காதிலபூ கந்தசாமி மேற்கொண்டுள்ள விசேட ஏற்பாடு இது.

திரு. அழுக்கு சங்கரி, புலிகளின் ஆட்சி வந்தாலும் தான் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நடப்பாரென்று தெரிவித்திருந்ததையடுத்து இத்தகைய நடையை எமது வாசகர்களுக்கும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தால் பயனுள்ளதாக இருக்குமெனக் கருதி, ஐயா அழுக்கு சங்கரியை நாடினேன். நாடி அவரோடு உரையாடியபோது,

“ஐயா, நெஞ்சை நிமிர்த்துவது நாய் வாலை நிமிர்த்துவதை விடக் கடினமான காரியம், அதை எப்படி உங்களால் இவ்வளவு சுலபமாகச் செய்ய முடியுமென்கிறீர்கள்?” எனத் தயவாகக் கேட்டேன். அதற்கு அவர் ஒரு சிரிப்பும், சிறு கனைப்பும் கலந்து உதிர்த்துவிட்டு, அதே கனைப்புக் குரலில் தொடர்ந்து சொன்னார், ....“ தம்பீ காதில பூ, நீர் ஒரு நன் மாணாக்கனெண்டு நினைக்கிறன். என்னை நம்பி வந்து கேட்டிட்டீர். சொல்லிக் குடுக்காட்டால் சரியில்லை. அதுபாரும், இந்த நெஞ்சிருக்குதெல்லோ நெஞ்சு, அது ஒரு சுருட்டிவைச்ச பாய்மாதிரீ. பாய நிமிர்த்த என்ன செய்வம்? மற்ற வழமாச் சுத்துவமெல்லே. அதப்போல, முன்னால கட்டிற கைய பின்னால கட்டிக்கொண்டு பின்னால திரும்பிப் பாத்தபடி பின்பக்கமா நடந்தால் தன்னால நிமிரும் நெஞ்சு. ஏன் கண்டீரோ, அதிலதான் விஷயமிருக்குது. எப்பவுமே கூனிக் குறுகிப் பழகிட்டமல்லோ. ஆனபடியால, இப்ப நாங்கள் பின்வழமா நடக்கத் தொடங்க, முதுகை நெஞ்சாயும் நெஞ்சை முதுகாயும் நினைக்கத் துடங்கிடுவம். பிறகென்ன, நெஞ்சைக் கூனிக் குறுக்கிறதா நினைச்சு நாங்கள் முதுகைக் குறுக்க மற்றப்பக்கத்தால நெஞ்சு தன்னால நிமிரும்.”

அடடடடா, அற்புதமான முறை! இப்பிடியொரு டெக்னிக் இருக்கெண்டு எங்கட ஆனானப்பட்ட அரசியல்வாதிகள் எவருக்கும் தெரியேல்லை. “அதுசரி மிஸ்டர் அழுக்கு, நீங்கள் சொல்லுறியள் புலிகளின்ர ஆட்சி வந்தாலும் அங்க போய் நீங்கள் நெஞ்சை நிமிர்த்திவியலெண்டு. அப்பிடியெண்டால் உங்கட சொந்தத் தொகுதி கிளிநொச்சியே இப்ப அவையிண்ட ஆட்சியிலதானே இருக்குது? அங்கபோய் நீங்கள் வலு உசாரா நெஞ்சை நிமித்தலாமே”யெண்டு கேட்டன்.

அவர் என்னைப் பார்த்தாரே ஒரு பார்வை, கரப்பான் பூச்சியப் பல்லி பாத்தமாதிரி! பிறகு, கொஞ்சம் கொதியிறங்கி மெதுவாய்ச் சொன்னார், “ஓய் காதில பூ, நீரெல்லாம் காதில பூவைச்சு என்ன பிரயோசனத்தக் கண்டீர். நான் சொன்னதை வடிவாக் கேட்டனீரே? புலிகளிண்ட ஆட்சி வந்தாலும் நான் நெஞ்ச நிமிர்த்திக்கொண்டு நடப்பனெண்டு சொன்னனேயல்லாமல், புலிகளிண்ட ஆட்சி நடக்கிற இடத்திலதான் போய் நெஞ்ச நிமிர்த்துவனெண்டு எப்பவேனும் சொன்னனானோ? புலிகள் வன்னியில ஆண்டால், நான் கொழும்பில, கோல்பேஸ்கடக்கரையில நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நடப்பன். அல்லது ஒரு கவடு தாண்டி தமிழ்நாட்டில மெரீனா பீச்சில நிண்டு நெஞ்ச நிமிர்த்துவன். ஆக மிஞ்சினால் கனடாவிலயோ, லண்டனிலையோ போய் யாருக்கும் தெரியாமல் நெஞ்சை நிமிர்த்திப் பாத்திட்டு பேசாமல் படுத்துக் கிடப்பன்.

“உண்மையில உங்களப்போல ஒரு சாதுரியமாப் பேசிறவை உலகத்திலையே அரிதுபாருங்கோ. அரிது அரிது மானுடராதல் அரிதெண்டு ஔவை சொன்னது பழம் மொழி. என்னைக் கேட்டால் அதனிலும் அரிது அழுக்கு சங்கரியாரைப்போல் அர்த்தமில்லாமல் அறிக்கைவிடலெண்டு புதுமொழி சொல்லுவன். அர்த்தம் விழுந்திட்டால் அதோட அந்தக் கதை முடிஞ்ச கதையாயிடும். அர்த்தமில்லாத கதைதான் எண்டைக்கும் புதுப்புது அர்த்தத்தைத் தந்துகொண்டேயிருக்கும். இப்பிடித்தான் முந்தியும் ஒருக்கால் யாழ் மேயர் சிவபாலன் கொல்லப்பட்ட நேரத்தில அழுக்கு சங்கரி ஆவேசமாப் பேசினார், அடுத்த மேயர் பதவிக்கு யாரும் வரத் துணியாவிட்டால் தானாவது மேயர் பதவியைப் பொறுப்பெடுப்பாரெண்டு. ஆனால் கடைசிவரை மேயர் பதவியப் பொறுப்பெடுக்காமலே தட்டிக்கழிச்சிட்டாரெண்டால் அது கெட்டித்தனமோ இல்லையோ?”

அதுகிடக்க, கடைசியாக் கேட்டன் அவரிட்ட ஒரு கேள்வி. “அதுசரி ஐயா அழுக்கு, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் முதற்கொண்டு உங்கட முன்னாள் தலைவர்மாரெல்லாம் செய்ய முடியால் போன ஒரு பெருங் காரியத்தை, அதாவது நெஞ்சை நிமிர்த்துவதை நீங்கள் செய்யப் போறியள். இது, ஒரு வீண் றிஸ்க்கெடுத்து நெஞ்சை நிமித்திறனெண்டு போய் முதுகை முறித்துக் கொள்ளுற கதையாகிப் போயிடாதா?” எண்டு கேட்டன்.

அவர் சொன்னார், அட தம்பி, விஷயம் தெரியாதவனாயிருக்கிறியே, நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடா கிளியே, வாய்ச்சொல்லில் வீரரடாவெண்டு பாரதி பாடினது எதுக்காக? அதைச்சொல்லும் முதலில எண்டு திருப்பிக் கேட்டார்.

எனக்கெண்டால் சத்தியமாத் தெரியேல்லை. “எதுக்காக” எண்டு திரும்பக் கேட்டன்.

அவர் சொன்னார் “அட மடப்பயல் மகனே, கிளிக்காடா, கிளிக்காக..! பாரதி கிளிக்குச் சொன்னத நாங்கள் மனிசருக்கெண்டு நினைச்சால் ஆற்ற குற்றம்? அதப்போல நான் சொன்னது பேப்பருக்காக. நான் பேப்பருக்குச் சொன்னதை நீங்கள் உங்களுக்கெண்டு நெச்சால் அது உங்கட குற்றம். நானாவது றிஸ்க்கெடுக்கிறதாவது. மேயர் பதவிய நானெடுப்பனெண்டன். கடைசியில யார் எடுத்தது? அப்படித்தான் இதுக்கும். வேறயொரு வெங்கடாந்தி நான் சொன்னத நம்பி நெஞ்ச நிமிர்த்தப்போய் வாங்கிக் கட்டிக்கொள்ளும். எனக்கென்ன வில்லங்கம். எதுக்கும் உம்மட வாசகர்கள் யாருமிருந்தால் அனுப்பும். நெஞ்சு நிமிர்த்தப் பயிற்சி குடுத்து களத்துக்கு அனுப்பிவைக்கிறன்.

ஆகவே வாசர்களே உடனே சேருங்கள் அழுக்கு சங்கரியாரின் நெஞ்சு நிமிர்த்தும் பயிற்சிப் பட்டறையில்!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் பின்னிப்பேசுகின்றன.
105, காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 [580230]
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## காண்பதற்கரிய காளை




→ விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட ஒரு வகைக் காளை இது. மிகவும் அரிதாகி விட்ட ஒருவாங் காளை இனத்தை மீண்டும் உருவாக்கி எடுப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக இந்தக் காளை தோன்றியது. இந்தப் புதியரகக் காளை இனத்தை பெருக் குவதற்காக படத்திலுள்ள பிராணியைப் போலுள்ள சிலவற்றைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



↓ டியூனிசியாவைச் சேர்ந்த ராடௌனே சார்பிப் என்பவர் உலகில் மிக உயர்ந்த மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகம் தகவல் வெளியிட்டுள்ளது. இவரது உயரம் என்ன தெரியுமா? 2359 சென்டி மீட்டர் (7 அடி 8 அங்குலம்) கின்னஸ் சாதனைப் புத்தக நிறுவனத்தினர் 1999ம் ஆண்டு ஜூன் 4ம் திகதியன்று நடாத்திய ஒரு விழாவில் சார்பிப்புடன் கேட் சார்மன் மற்றும் இயன் ரைட் ஆகிய உயரம் குறைந்த இருவரும் இவ்வாறு காட்சி தருகின்றனர்.

## படைப்பு




← உலக சந்தையில் விற்பனைக்கு வரும் பொருட்களுக்கு வர்த்தகச் சின்னங்கள் உருவாக்கப்பட்டிருக்கும். இத்தகைய சின்னங்களுள் 'மார்ல்பரோ' என்ற பெயருடைய சிகரெட் இன்றைய உலகின் பெருமதிப்புடையதாகக் கணிக்கப்படுகிறது. படத்தில் காணப்படும் மார்ல்பரோ மனிதச் சின்னத்தை 1960ம் ஆண்டு ஃபிலிப் மொரிஸ் என்ற நிறுவனம் உருவாக்கி ஒரு மலைப் பாங்கான ஊரில் வைத்துள்ளனர்.

## உயர்ந்த மனிதர்



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



15 ★ 06 ★ 2001

எர்வின் பயஸ்

[illegible] (15.06.2001) தனது முதலாவது பிறந்த தினத்தை 23.06.2001 அன்று [illegible] ஒஸ்லோவில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

[illegible]

அன்பு அப்பா-அம்மா (நோர்வே)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் [illegible] அச்சகத்தில் ஜூன்.17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.